
www.padippakam.com

# கவிதாசரண்

இதழாய் ஓர் எழுத்தியக்கம்



**போபால் பிரகடனம்**
அறிமுக உரையுடன்
*- அ. மார்க்ஸ்*

**குதிரில் உறங்கும் இருள்**
*- பாப்லோ அறிவுக்குயில்*

**மகாத்மா**
*- ஜெயந்தன்*

**அம்பையின் அரசியல் - காழ்ப்பும் விருப்பும்**
*- காசி மாரியப்பன்*

**வியப்பூறும் அனுபவமும் கொஞ்சம் விமர்சனமும்**
*- கவிதாசரண்*

மேலும்...
கடிதங்கள்
கவிதைகள்
கட்டுரைகள்

இரு மாத இதழ் | ஏப்ரல்-மே 2002 | தனி இதழ் ரூ. 15-00

படிப்பகம்

www.padippakam.com

# முதல் தலையங்கம்

இலக்கிய நயம் தேடும் இனிய நண்பர்களே, வணக்கம்.

ஒரு நாளும் தவிர்க்க விழையாத என் வெகு நாளைய கனவு இந்த இலக்கிய இதழ். இதனை உங்கள் நேயமிக்க பார்வைக்கு வழங்க முடிந்தது ஒரு சுகமான அனுபவம்.

சந்தைப் பத்திரிகை சாம்ராஜ்யத்தில் சங்கீத இழைபோல, பாறைப் பிளவில் கொடியாய்ப் படரும் தங்க வரி போல இவ்விதழை வித்தியாசப் படுத்திக் காட்ட என்னுள் ஒரு வேட்கை.

வாழ்க்கைத் தளத்தில் ஆரவாரம், பெருங் கூச்சல், புழுதிச் சுழல் எல்லாவற்றிலும் நீங்களும் பங்குபெற்று, ஆடி மகிழ்ந்து, ஓடிக் களித்து, முடிவில் உங்கள் கூட்டில் நீங்களே நீங்களாய்த் தனித்திருக்கிறீர்கள்; உங்கள் உயிர்ப் புலன்களில் விழித்திருக்கிறீர்கள்; உங்கள் வாழ்க்கையின் அர்த்தங்களுக்காகப் பசித்திருக்கிறீர்கள். அது ஓர் 'இளைப்பாறல்' அல்லவா ? வெறும் இளைப்பாறல் மட்டுந்தானா ? களைத்த உடலில் புதிய தெம்பையும், ஓய்ந்த சிந்தனையில் புதிய ஊற்றையும் பெருக்கிக் கொள்ளும் ஒரு வேள்விக் காலம் அல்லவா ? ஆம். அந்தத் தருணத்தை மேலும் அர்த்தமுள்ளதாக்கவும், அடுத்து வரும் தருணங்களை ஆழமிக்கதாக்கவும் இந்த இதழ் பயன்பட வேண்டும் என்பதே இதன் தொடக்கத்திற்கான அர்த்தமாக அமையவேண்டும். இது சாத்தியமானால் இந்த இதழ் இலக்கிய முத்திரை குத்திக்கொள்ளும். சாத்தியப்படும் நேர்த்தியில் உங்கள் இளைப்பாறலில் இலக்கிய விசாரம் பெருக வேண்டும் என்பதே எமது வேண்டுகோள்.

சந்தைப் பத்திரிகை சாம்ராஜ்யத்தில் ஆரவாரங்களுக்கோ, வானவேடிக்கைகளுக்கோ, வண்ண வக்கிரங்களுக்கோ பஞ்சம் என்பதே இல்லை. மதம், அரசியல், சினிமா ஆகிய பிரம்ம ராட்சசர்கள் கும்பல் கலாச்சார போதகர்களாகி, மனிதர்களை வெற்றிலையாய்த் தின்று, இரத்த எச்சிலாய்த் துப்பிக் கொண்டிருக்கும் இவ்வேளையில், சந்தைப் பத்திரிகைகளும் அவற்றுக்குத் தாங்கள் சளைத்தவர்கள் அல்ல என்பதைப்போல், கும்பல் கலாச்சாரத்திற்கு இலக்கிய அந்தஸ்தைப் பெற்றுத் தரும் அசுர சங்கல்பத்தில் நம்மை ஆக்கிரமித்துள்ளன. நாமும் அந்த ஆக்கிரமிப்புக்கு நம்மை ஆட்படுத்திக் கொண்டுவிட்டோம். பலன் என்ன ? நாம் 'தனியர்கள்' என்பதை நாம் மறந்தே போனோம் கோடி மனிதர்கள் கூடிய கும்பலில் நின்றாலும் நாம் ஒவ்வொருவரும் தனி மனிதன் தான் அல்லவா ? இவ்வுணர்வு இருக்கிற வரைதான் சிந்தனை சாத்தியமாகும். சிந்தனை சாத்தியமாகும் போதுதான் மனிதன் ஒருவருக்கொருவர் உறவு காட்டும், பரிவு காட்டும் நேசப் பறவையாய், கருணைத் தடாகமாய், சகித்துக்கொள்ளத் தெரிந்த சமூகத் திரட்சியாய், மனித மேன்மைக்குச் சிம்மாசனம் போடும் மெய்த்தொண்டனாய் இனங் காட்டிக்கொள்ள முடியும். 'தனியன்' என்னும் முத்திரை அழிந்துவிட்டால், கும்பலில் கரைந்து, எரியும் கொள்ளியில் தானும் ஒரு கொள்ளியாகி, வக்கிர வெளிப்பாடுகளில் வெந்து தணிந்து, வெறும் சாம்பலமாய் மிஞ்சி விட மாட்டோமோ ? இப்பொழுது சமுதாயமே, மனித குலமே அந்தத்திசை நோக்கித்தான் பயணப்பட்டு விட்டதோ ?

யோசித்துப் பாருங்கள்...

நீங்களும் உங்கள் சகோதரனும் ஒரு வயிற்றில் பிறந்தீர்கள். ஆனால், உங்கள் மனதில் என்ன ஓடுகிறது என்பது உங்கள் சகோதரனுக்குத் தெரியவில்லையே ? உங்கள் சகோதரன் என்ன செய்ய எண்ணுகிறான் என்பது உங்களுக்குத் தெரியவில்லையே ? காரணம், நீங்கள் இருவரும் தனியர்கள். இந்த உணர்வு இருக்கும்போது தான் உங்கள் எண்ணங்கள் உங்களுக்கு எவ்வளவு நியாயமாகப் படுகின்றனவோ, அதைப் போலவே உங்கள் சகோதரனுக்கும் அவனுடைய எண்ணங்கள் நியாயமாக இருக்கும் என்னும் ஞானம் பிறக்கும். அந்த ஞானம் உங்கள் இருவரையும் ஒருவரையொருவர் மதிக்கவைக்கும். ஒருவருக் கொருவர் மரியாதை கொடுக்க வைக்கும். ஒருவரையொருவர் சகித்துக்கொள்ளவைக்கும். அதன் பயனாய் இருவரையும் மனிதர்களாய்ச் சுகப்பட வைக்கும்.

இந்த வகை சுகத்துக்கு ஊற்றுக்கண்ணாய், நீங்கள் ஒவ்வொருவரும் 'தனியன்' என்பதை மென்மையாய் ஞாபகமூட்டும் ஒளி மொட்டாய், மனித முரண்களின் சரணாலயமே மேன்மையான மனித நேயம் என்பதை ஒரு நகைப்பில் வெளிப்படுத்தும் கைக்குழந்தையாய் இந்த இலக்கிய இதழ் இருக்க விரும்புகிறது, இதை ஆதரிக்க வேண்டியது உங்கள் அறிவார்ந்த கடமை; உங்கள் ஆன்மாவுக்கு நீங்கள் சூட்டும் மணி மகுடம்; இலக்கியம் உங்களுக்கு வழங்கும் அங்கீகாரம்.

*அக்டோபர்-21, 1991*
*கவிதாசரண் முதல் இதழ்*

www.padippakam.com

கவிதாசரண்

இதழாய் ஓர் எழுத்தியக்கம்

*ஏப்ரல் - மே - 2002*

*விலை ரூ. 15*

*ஆசிரியர்*
கவிதாசரண்

| | |
|---|---|
| *தனி இதழ்* | *ரூ. 15* |
| *12 இதழ்களின் நன்கொடை* | *ரூ. 200* |
| *30 இதழ்களின் "* | *ரூ. 500* |
| *60 இதழ்களின் "* | *ரூ. 1000* |
| *வெளிநாடு தனி இதழ்* | $3 |

*தொடர்பு முகவரி:*
கவிதாசரண்
31, டி.கே.எஸ். நகர்,
சென்னை - 600 019.
தொலைபேசி : 044-573 44 99

**KAVITHAASARAN**
31, T K S Nagar,
Chennai - 600 019.
Tamilnadu, India
Phone : 044-573 44 99

E-mail : kavithaasaran@yahoo.com

Website :
http://www.geocities.com/kavithaasaran/

உள்ளோவியங்கள் : மருது, சுரேஷ்

கணினிஅச்சு : கிரீன்வே கிராபிக்ஸ்
பெரம்பூர், சென்னை – 11.

# இன்னுமொரு புத்துயிர்ப்பாய்

கவிதாசரண் இந்த இதழிலிருந்து இருமாத வெளியீடாகிறது.

குறித்த காலத்தில் இதழைக் கொண்டு வருவது எங்கள் கூடுதல் நோக்கமாயிருக்கிறது.

சந்தைப்படுத்தலில் சிற்றிதழுக்குள்ள வாய்ப்புகள் வரம்பிடப் பட்டவை என்பதால், சந்தாக்கள் மட்டுமே அதன் உறுதியான மூலதனமாய் இருக்க முடியும்.

சந்தா குறித்து 'விண்ணப்பம்' ஒன்று வெளியிட்டோம்!

'கல்வெட்டு பேசுகிறது' சிற்றிதழ் அதனை மறு வெளியீடு செய்தும், நேர்கண்டு வெளியிட்டும், எங்கள் விண்ணப்பக் கோரிக்கைகளை பரவலாக்க முன் முயற்சி எடுத்தது சிற்றிதழ்த் தளத்தில் வரலாறு படைக்கும் செயல். இதற்கு எங்கள் நன்றியை இங்கு பதிவு செய்தாக வேண்டும்.

எங்கள் விண்ணப்பத்தை,

**நீதிச்சக்கரம், புதிய கோடாங்கி, தன் முன்னேற்றம், சுந்தரசுகன் சிந்தனைச் சரம், யாதும் ஊரே, காற்றுவெளி, முங்காரி** ஆகிய இதழ்கள் மறுவெளியீடு செய்து சிற்றிதழ் வாசகர் வட்டங்களுக்குக் கொண்டுசேர்த்தன.

சிற்றிதழ் இயக்கத்தில் இது ஒரு வரலாறாகும். அந்த இதழ்களின் முன்னுதவி எங்கள் நன்றிக்குரியது.

அவர்களுக்கெழுதிய கடிதங்களில் "உறுப்பினர் கட்டணம் பெறுவது கடைசிப்பட்சமாகவேனும் மெய்ப்படவேண்டும்," என்று குறித்திருந்தோம்.

அது அப்படியே ஆகிவருகிறது.

பழைய வாசகர்கள் தங்கள் சந்தாவை அனுப்பினால்தான் அவர்களோடு இதழ் தொடர்பு கொள்வது சாத்தியமாகும் என்பதை இங்கு அறுதியிட்டுச் சொல்ல வேண்டிய நிலை எழுந்துள்ளது. நண்பர்கள் புரிந்துகொண்டு துணைசெய்யவேண்டும்.

எங்கள் விண்ணப்பம் சோதிட சித்துகளைப் பற்றியோ, வீரிய குளிகைகளைப் பற்றியோ பேசி இருக்குமானால் இந்நேரம் என்னமாய் வெள்ளமென பணம் கொட்டியிருக்கும்!

ஆயினும் நம்பிக்கையோடும், உறுதியோடும் எங்கள் பணியைத் தொடர்கிறோம்.

இலக்கியப் புலப்பாடும், சமூகக் கரிசனமும் உள்ள நண்பர்கள் கவிதாசரணை தோழமை கொள்ளாமல் ஆகாது என்பது எங்கள் செயல்பாட்டின் ஊற்றுக்கண்.

அடுத்த இதழில்...

*7-4-2002-இல் நடந்த விமர்சன - இருமாத இதழ் வெளியீட்டு விழா பற்றிய பதிவுகளும், கருத்துகளும் இடம்பெறும்.*



படிப்பகம்

www.padippakam.com



# பயங்கரவாதமும் பாமரர்களும்

**13**-12-2001, வியாழன் முற்பகலில் இந்தியப் பாராளுமன்றக்கட்டிட வளாகத்தில் தீவிரவாதிகளின் தாக்குதல் நடந்தது. என் வீட்டுத் தொலைக்காட்சி பழுதுபட்டதால் பகல் செய்தி பார்க்க முடியவில்லை. மாலையில் துணைவியாருடன் வெளியில் சென்ற போது செய்தித்தாள்களில் பார்த்ததும் அதிர்ச்சியாயிருந்தது. அந்தத்தீவிரவாதிகள் இன்னும் சில நிமிடங்களுக்கு முன்பாக வந்து, பாராளுமன்றத்துக்குள் நுழைந்திருக்க முடிந்திருந்தால், எண்ணிப்பார்க்கவே நடுங்கும்படியான தேசியப் பேரிழப்பில் இந்த நாடு எத்தனை நாட்களுக்குத் தலையை நட்டுக்கொண்டு துக்கம் அனுசரிக்கவேண்டி நேர்ந்திருக்குமோ, தெரியவில்லை. தீவிரவாதத் தாக்குதல் இந்திய எல்லைப் பகுதிகளிலிருந்து பாராளுமன்றக் குவிமையத்துக்கே வந்தாயிற்று என்பது எளிதாய் எடுத்துக்கொண்டு விடமுடியாத கழுத்தறுப்பான விஷயம்தான். இந்தியா செய்ததும் செய்துகொண்டிருப்பதும் என்ன? 'எல்லை தாண்டி வரும் பயங்கரவாதம்' என்னும் சொல்லாடலைக் கையாளாகாதவனின் புலம்பலாகப் புழங்கிக்கொண்ருப்பதாகத் தெரிகிறது. அந்த அளவுக்குத்தான் அமெரிக்க மாமனின் அனுமதி வாய்த்திருக்கிறது. அதே மாமனின் தோள்மீது ஏறிநின்றுகொண்டு "இந்தியா கட்டவிழ்த்துவிட்டுள்ள அரச பயங்கரவாதத்தை உலக நாடுகள் கண்டிக்க வேண்டும்," என்று கொக்கரிக்கிறது பாகிஸ்தான். அதையும் அமெரிக்க மாமன்தான் ஆசீர்வதிக்கிறார். ஆதரிக்கிறார். இந்தியப் பாமரன் தெளிவுபெறவும் தெரிவுசெய்யவும் இங்கு என்ன விதிக்கப்பட்டிருக்கிறது? எந்தச் சாளரம் திறக்கப்பட்டிருக்கிறது இந்தியத் தன்மானம் என்பது பாலை மணலில் சிந்திஉலர்ந்த மதுரத்துளிகள்தாமா? இந்தியக்குடிமகனாய்ப் பிறந்த கௌரவத்தை அவன் எவ்வாறு கண்டடைவான்? இந்தியாவில் அரசுக்கும் அரசியலுக்கும் இடையே மதிக்கத்தக்க எல்லைக்கோடு ஏதேனும் உண்டா?

"பாராளுமன்றமே தாக்குதலுக்குள்ளாகும் போது சாதாரண பாமர மக்களுக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது?" என்பதாக வாயூறிப் போகிறவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். நாம் அறிந்தவரை சாதாரண மக்கள் எதிலும் சம்பந்தமற்றவர்களாகத்தான் எப்போதும் விடப்படுகிறார்கள். அவர்களின் பாதுகாப்பு அல்லது பாதுகாப்பின்மை என்னும் அம்சம் பாதிக்கப்படுவது பெரும்பாலும் தற்செயல்தானே தவிர குறிவைத்த தாக்குதலால் அல்ல. 'மன்னன் எவ்வழி, மக்கள் அவ்வழி,' என்பது மன்னர் காலத்துப் பொன்மொழி. இன்றும் அது அர்த்தமுள்ள எச்சரிக்கையாகத்தான் இருக்கிறது.

ஓர் அரசு நல்ம் செய்தால் அதன் பலன்கள் மக்களைச் சென்றடைகின்றன. அதுவே குருட்டரசாகவும், உள்முகப் பார்வையற்ற, தீவினைகளின் உற்பத்திக் கிடங்காகவும் இயங்கினால் அதன் மக்கள் அதற்கான பலனை, அழிவை, சிதைவைத் துய்ப்பதிலிருந்து தப்பிக்க முடியாமல் போகிறது. முகமதிப்பில் அவர்கள் அப்பாவிகளாகத் தோன்றினாலும் தீவினை அரசு பற்றிய அல்லது செயலற்ற அரசு பற்றிய கேள்வியற்ற குடிமக்களாயிருந்த குற்றத்திற்கான தண்டனையாகவே அதைக் கணக்கிட வேண்டியுள்ளது.

தனி மனிதனுக்குத் "தீதும் நன்றும் பிறர்தர வாரா" என்பது உண்மைதான். ஆனால் ஒரு குடிமகனுக்கு அவை அரசால் ஆசீர்வதிக்கப்படுவதாகத்தான் எப்போதும் இருந்துள்ளன. ஒரு கதைதான் என்றாலும் பாண்டியன் நெடுஞ்செழியன் கண்ணகிக்கிழைத்த கொடுங்குற்றத்துக்காக அவனது குடிமக்கள் தீக்கிரையாக நேர்ந்ததை ஒரு கவித்துவத் தீர்ப்பாக நாம் ஒப்பி ஏற்றுள்ளோம். அப்பாவி மக்கள் எனப்படுவோர் ஓர் அரசின் குடிமக்களாய் இப்படித்தான் பாதிப்புக்குள்ளாகின்றனர்.

அரசினைத் தெருட்டும் வக்கற்ற அசமந்தங்களான மக்களை உறைய வைப்பதில் குறியாயிருக்கும் அரசுகள் ஒருபோதும் விவேகிகளால் ஆளப்படுவதாக இருக்க முடியாது. அவற்றின் செயல்பாடுகள் குடிநலம் பேணுவதாகவும் அமையாது. புன்மை நலன்களுக்குப் பாய்ச்சிய நீர் கொஞ்சம் நன்னலங்களுக்கும் பொசிந்தாற் போலத்தான். துரதிர்ஷ்டவசமாக பொதுவில் அரசுகள் அப்படித்தான் செயல்படுகின்றன. சொந்தமக்களை மந்தைகளாக்கி, தங்களை தேசபக்த அரசுகளாக மாய்மாலம் காட்டி, குடிமக்களை மரணக் கிணறுகளின் தூர்வாரிகளாக்குகின்றன. நாட்டுக்காக வாழ்ந்திருக்க வழிகாட்டாத அரசுகள் குடிமக்களின் மரணங்களை இன்னுயிர்த் தியாகங்களாக்கும் காவியப்புனைவுகளை இடைவிடாமல் கட்டவிழ்க்கின்றன. தீவிரவாதிகளின் அதிரடித் தாக்குதலுக்குப் பலியாகும் குடிமக்கள் இவ்விதமாகத்தான் அரசின் தீவினைகளையும் நல்வினைகளுக்கான செயலின்மைகளையும் ஒளித்து வைப்பதற்கும், மீறிப்பேசுகிறவர்களை தேசவிரோதிகளாக முத்திரை குத்துவதற்கும் பயன்படுகிற இன்னுயிர்த்தியாகிகளாக நினைவுக்கூரப்படுகின்றனர்.

பாராளுமன்றத்தாக்குதல் நடந்த இரவு 9-30 மணிக்கு மாநகரப் பண்பலையின் இரண்டாம் அலைவரிசையில் பேராசிரியர் நலபட் ஒருங்கிணைப்பில் நான்கு வல்லுநர்கள் அடங்கிய குழு பாராளுமன்றத்தாக்குதல் பற்றிய கலந்துரையாடலை நிகழ்த்தியது. பயங்கரவாதம் பாராளுமன்றக் கதவைத்தட்டிய பிறகும் எதிர்க்கட்சிகள் போடோ (POTO) சட்டத்தை எதிர்க்கப் போகின்றனவா என்னும் கேள்வி வெகுமூர்க்கமாக எழுப்பப்பட்டது. அப்படி எதிர்ப்பது ஏதோ தேசத்துரோகச் செயல் என்பது போன்ற தொனியில் பேசப்பட்டது. அதைக்கேட்க நேர்ந்த அறிவறிந்த ஒரு பாமரன் கூட "இது என்ன கேணத்தனமாக பேச்சு," என்று எள்ளி நகைத்திருப்பான். ஏதோ, போடோ சட்டம் இரண்டு நாட்களுக்கு முன்பே நிறைவேறியிருந்தால் அதன் அமானுஷ்ய மின்னணுத்திறமுள்ள மாய வலைப்பின்னலுக்குள் பாராளுமன்றம் பாதுகாப்பாய் இருந்திருக்கும்போல, தீவிரவாதிகள் அந்தத் திசைப்பக்கமே தலைகாட்டியிருக்க முடியாதுபோல, அப்படியே நெருங்கியிருந்தாலும் அவர்கள் சாம்பலாகிக் காற்றில் கரைந்திருப்பார்கள் போல அந்த வல்லுநர்களின் தேசபக்தி பீறிட்டலறி என் செவிப்பறையைக் கிழித்தது.

பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்ட 'போடோ' அவசியம் என்கிறது அரசு. அந்தச் சட்டம் குறிப்பிட்ட சிறுபான்மையினருக்கும், பத்திரிகையாளர்களுக்கும், பொதுவில் மனித உரிமைகளுக்கும் எதிரானது என்கின்றன எதிர்க்கட்சிகள். இரண்டு அணிகளும் அரசியல் ஜாலவித்தைக்காரர்களின் கூடாரங்கள்தாம் என்பதில் சந்தேகமில்லை. இரு அணிகளுமே தேசத்திற்கும் மேலாகவே அவரவர் அரசியல் நலன்களுக்கே முன்னுரிமை தருகின்றனர். ஆனால் கட்சியரசியலுக்கு



படிப்பகம்

www.padippakam.com

அப்பாற்பட்ட குடிமக்களுக்கு ஒரு விஷயம் உறுதியாக விளங்கியிருக்கிறது. இதற்கு முன்னும் மிசா, தடா போன்ற கடுமையான சட்டங்கள் கொண்டுவரப்பட்டன. அவை எந்த விதத்தில் உதவியுள்ளன ? அவற்றை விடவும் கொடுமையான இன்னொரு சட்டத்தைக் கொண்டுவரத்தானே ? ஏன் ? ஒவ்வொருமுறையும் சட்டத்தைக் கடுமையாக்கும்போது ஆளும்வர்க்கமும் காவல்துறையும் மாபாதகர்களாக (super villians) வீங்கிவெடிக்கத்தான் துணைபுரிந்தனவே தவிர, மக்களுக்கு அமைதியை, நல்லிணக்கத்தை, அச்சமின்மையை, பாதுகாப்பைக் கொண்டுவரவில்லையே. ஏன் ?

நடைமுறைப்படுத்துகிறவன் நல்லவனாயிருந்தால் நீரலைகூட மீறமுடியாத விதியாகும். கண்ணசைவுகூட ஒன்றிணைக்கும் ஆணையாகும். ஆனால் இங்கு சட்டங்கள் மக்கள் வாழ்க்கையைச் சகிக்க முடியாததாக மாற்றத்தான் என்னும் அபாயங்கள் கூடி வருகின்றன.

இந்தியாவுக்கு ஒரு அச்சுறுத்தல் என்றால், மக்கள் அனைவரும் ஒற்றைத்தோளில் விம்மி நிற்கும் ஒற்றைத் தலையாக, ஒற்றைக்குரலாக ஓங்கி உயர்வதை ஒன்றுக்கு மேற்பட்ட சந்தர்ப்பங்களில் தரிசித்து மகிழ்ந்ததாக மார்தட்டிக் கொள்கிறவர்கள்தாம் கடும்சட்டங்கள் பற்றியும், முடிவற்ற ஊழல்கள் பற்றியும், பலிகொள்கிற அத்துமீறல்கள் பற்றியும் கூவித்திரியும் சந்தைத்திடலாகப் பாராளுமன்றத்தை மாற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

இந்தியாவின் இந்த இரட்டைமுகத்தில் கொழுத்துப் போகிறவன் அதிகார அரசியல் நடத்துகிறவனாகவும், குமைந்து சாகிறவன் பாமரக்குடிமகனாகவுமே இருக்கிறார்கள்.

இது அச்சுக்குப்போகும்போது, அதாவது 27-3-2002 ஆம் நாள் போடோ சட்டம் பாராளுமன்றக் கூட்டுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுவிட்டது.

இனிபயங்கரவாதம் போடோவைவிடப் பயங்கரமாய் இருக்காது என்று ஆள்கிறவர்கள் ஆளப்படுகிறவர்களுக்கு ஆறுதல் சொல்லலாம்.



# வியப்பூறும் அனுபவமும் கொஞ்சம் விமர்சனமும்

காலை நேரம். காடு பூத்தணுக்கிடக்கிறது. பூக்களின் நடுவே ஒற்றையாய் அடையாளப்படும் அதிநீலச்சிறகுகள் கொண்ட ஒரு வண்ணத்துப்பூச்சி. வாசத்தடம் பற்றி ஒவ்வொரு பூவாய்த் தொட்டுத் தொட்டுத் தாவுகிறது. தேன் உறிஞ்சிக் கொள்வதாய் இருக்கும். பார்த்தால் பூக்களைத் தன் நீளச்சிறகுகளால் பொத்தியெடுத்து மெத்து மெத்தென்று முத்தமிட்டுப்பறப் பதாகத் தோன்றுகிறது. தேன் உறிஞ்சிப் பெறும் தித்திப்பைவிட முத்தமிட்டுத்தரும் வரம்பற்ற தித்திப் புணர்வே அனுபவமாதல் போல...

மேலும் ஒரு காட்சி...

ஒரு குழந்தை. அம்மாவின் கையணைப்பில் மார் உறிஞ்சுகிறது. கடைவாயில் பால் ஒழுக, அணைப்பிலிருந்து திமிறித்திமிறி அடிக்கடி முகத்தை நீட்டிச் சிரிக்கிறது. பால்குடிப்பதை விடவும் மாரில் முகம் புதைத்துக் கண்ணாமூச்சி ஆடுவதே கூடுதல் இன்பமானாற்போல.

வே. எழிலரசுவின் ‘வலது கை மின்னல்’ என்னும் கட்டுரைத் தொகுப்பை வாசித்தபோது என் மனத்திரையில் விரிந்த இனிய சித்திரங்கள் இவை. சிலுசிலுத்தோடும் அவரின் எழுத்தோட்டம் என் உணர்வலையில் சேகரித்த அனுபவப் படிமங்கள். அந்த மொழி – அதுதான் அவரது மனமாகவும், அதன் விசாலமாகவும், கரிசனமும் அனுசரணையும் மிக்க நேசப்பெருக்காகவும் நூல் முழுதும் ஊறித்ததும்புகிறது. இதில் எனக்குள்ள தகுதி, அதை இனங்காணவும் அனுபவிக்கவும் என்னுள் எப்போதும் ஒரு வேட்கை தவமிருக்கிறது என்பதைக் கண்டடைந்ததுதான். ஏனெனில் அதுமொழியாக மட்டுமின்றித் தமிழாகவும் இருக்கிறது. நூலைப்படித்து முடித்தபோது, அவர்தொட்டுச் செல்லும் கவிஞர்களையும் கவிதைகளையும் விட அவரும் அவர் மனமும் அதன் நறவும் அதிமதுரக் கவிதைகளாய் விளைந்திருப்பதை அனுபவித்து மகிழ முடிந்தது. ஒரு கவிஞன் தன் சொற்களுக்குள் பொதிந்து வைத்துள்ளதை விடக் கூடுதலான அழகையும் அர்த்தத்துலக்கத்தையும் அகழ்ந் தெடுக்கும் வல்லமை அவரது மனத்துக்கு வாய்த்திருக் கிறது என்பதுதான் அதன் பெருமை. “இவரால் சுவைக்கப் படுவதற்காகவே நாம் கவிதை எழுதமாட்டோமா” என்று எந்தக்கவிஞனையும் ஏங்க வைக்கும் படியான மொழி அனுசரணை அவருக்கு வாய்த்திருக்கிறது. சரசரவென்று பாய்ந்தோடும் அந்த மொழி தகுந்த சொற்களுக்காக எந்த இடத்திலேனும் தயங்கி நின்றதற்கான சுவடே இல்லை. அப்படியொரு தங்குதடையற்ற சொற்பெருக்கு. கவிதைகளின் உள்ளுறையை இவரைவிட நுட்பமாகவும், அத்தனைக்கத்தனை எளிமை யாகவும் வெளிக்கொணர்கிறவர்கள் ஒருவேளை இருக்கக் கூடும். எனக்குப் பரிச்சயமில்லை. ‘அழகைவிட அழகியல் மொழி சூட்சுமமானது” என்று அவர் கவிதைகளினூடாக நிறுவும் போது ‘ஆம்’ என்று நம்மால் தலையாட்டத்தான் முடிகிறது. அவரை ரசிக்கும் நட்புவட்டத்துக்குள் அவர் கவிதை பயிலும் அழகை ரசிக்கும் எவரையும் இழுத்துக்கொள்ளும் காந்தமாய் நேர்த்தி செய்யப்பட்டிருக்கிறார்.

இந்த நூலை உருவாக்குவதில் அவர் செயல்பட்டிருக்கும் விதம் அவரது ஒருமை உணர்வுக்கும் தன்னம்பிக்கைக்கும் ஒப்பற்ற சான்றாகிறது. இதில் எத்தகைய புருவநெரிப்பும் நெற்றிச் சுருக்கமும் அவரை எதிர்கொண்டிருப்பினும், போகிற போக்கிலான அவருடைய பதில், “இருக்கட்டுமே. அதனாலென்ன,” என்பதாகவோ, அல்லது அவற்றைப் பொருட்படுத்தாமைக்கான சிறு விழிநகைப்பாகவேதான் இருந்திருக்கக்கூடும். நூலின் அட்டைப்படத்திலிருந்து, அணிந்துரை, கவிநயம் என முழுமையாகவே தன் நட்பு வட்டத்திலுள்ள இளைஞர்களை ஒருங்கிணைத்து, வெளிக்கொணர்ந்து, மனம் உவக்க ஒளிரச் செய்திருக்கிறார். அந்த இளைஞர்கள் அதற்கான தகுதிகள் உள்ளவர்கள்தாம் எனினும், அவற்றைக் கவனம் கொள்ளும் அருந்திறலும், சிறப்பிக்கும் பெருங்குணமும், அரவணைக்கும் உளக்கனிவும் எழிலரசுவுக்குப் போல வேறெவருக்கேனும் வாய்த்திருக்கக்கூடும் என்பது மிகைப்புனைவாகவே கருதப்படும். அவ்வப்போதைக்கான சாத்தியப்பாடாக மனித முழுமையை உருவகப்படுத்த இவரிடம் நிறையவே ரசாயணங்கள்



படிப்பகம்

www.padippakam.com

இருக்கும்போல. தானே கவிதையாயிருக்கும் ஒருவருக்குத் தான் மனித இயங்கியலையே மகத்தான கவிதையாகப் பாவிக்கத் தெரிந்திருக்கும். இயக்கவாதியும், கவிஞரும், செயலூக்கம் மிக்கவரும், 'தாய்மண்' இதழாசிரியருமான அருமைநாதன் அவர்கள் எழிலரசுவுக்கு மூத்தவர். எழிலரசுவுக்கும் அவர்போன்ற இளைஞர்களுக்கும் மேடை அமைத்துக்கொடுத்து, வளர்ச்சி கண்டு மகிழ்ந்திருப்பவர். அவரைப்பற்றிநீண்டதொரு கட்டுரை இந்நூலில் இடம்பெற்றுள்ளது. எழிலரசுவின் வளமான புனைமொழியானது அருமைநாதனையே அழகிய கவிதையாக்கிப் பார்க்கிறது என்பதாகத்தான் அக்கட்டுரையின் சாராம்சத்தை எடுத்துக்கொள்ளவேண்டும். அப்படியொரு நட்பார்ந்த நயம்பாராட்டலுக்கும் எழிலரசுவே முன்னுதாரணமாய் இருக்கத்தகுந்தவர்.

இவ்வாறாக நூல் முழுதும் நலம்பாராட்டுரையாகவே திரண்டிருக்கக்கூடும் என்று யாரும் நினைத்துவிடக்கூடாது. உரிய தருணங்களில் மிகச்சரியான எதிர்விமர்சனங்களையும் பதிவுசெய்கிறார். அதில் அவர்கையாளும் பகடிமொழிகூட ஒருவகையில் நயக்கத்தக்கதாய் நட்புணர்வின் கையசைப்பாய் வரம்பு கட்டிக்கொள்வது அவர் இயல்புக்கு அணிசேர்ப்பதாகவே கருதப்பட வாய்ப்புண்டு.

ஆதிசங்கரரை, அவர் அறியப்பட்டவாறே அறிமுகப் படுத்தும் எழிலரசு, 'சமயங்கடந்தவர் என்று பெயர் பெற்ற சங்கரர் சாதி கடக்காதவராகக் குறுகிவிட்டார் ' என்று விமர்சிக்கும்போது, 'அகண்ட காவிரியில் குளித்துக்கரையேறியவன் ஆடு தாண்டும் காவிரியில் மூழ்கிச் செத்த கதைதான்' என்று நச்சென்று சொல்லி நகைக்க வைக்கிறார். அவரது மொழியாளுமையில் யாருக்கும் சேதாரம் விளைவிக்காத, ரசிக்கத்தக்க நயன்மையாகவே தன்னைத்தகவமைத்துக்கொள்ளும் பகடி அது. சங்கரரைப்பற்றிய மேலதிக விமர்சனமாக விவேகானந்தரின் பார்வையும், பிறப்பால் எவருக்கும் எந்தச் சிறப்புத் தகுதியும் வந்துவிடுவதில்லை என்றும், தனி மனிதன் பசித்திருக்க சமூகம் உண்ணும் நிலை நேருமெனில் படைத்தவனையே அழித்தல் நலம் என்றும் பேசும் திருக்குறளும் பழகிய தடத்தின் நடையோட்டமாகவே பதிவு செய்யப்படுகின்றன.

பிறிதோரிடத்தில் ஞானக்கூத்தனின் புறவியலை விரிவாக விமர்சனம் செய்கிறார். கூத்தன் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளில் "சிலநேரங்களில் பார்வையாளர்களுக்குத் தமிழ்நூல் வெளியீட்டு விழாவா அல்லது சமஸ்கிருதநூல் வெளியீட்டு விழாவா என்று சந்தேகம் தோன்றுமளவு மேடையில் காளிதாசனும் பரதமுனிவரும் வந்து வந்து போவார்கள்," என்று சொல்லி அவரது சமஸ்கிருதப் பிறாண்டலைக் கேலி பண்ணுகிறார். தொடர்ந்து, "பாரதிதாசன் புதுமைக்கவியோ புரட்சிக்கவியோ அல்ல என்றும், அவருக்குப் பாவேந்தர் என்ற பட்டத்தையாரும் கொடுக்கவில்லை; அவரே போட்டுக் கொண்டார் என்றும் பொய்முத்துகளை அள்ளி இறைத்தார்", என்று, கூத்தனின் அற்பத்தில் உழலும் அதிமேதாவித்தனத்தைக் குற்றப்பட்டியலில் சேர்க்கும்போதுகூட, எழிலின் கண்ணியம் கூத்தனின் பொய்களை முத்துக்களாகவே பார்த்து கவுரவிக்கிறது. கேலிதான் என்றாலும் கண்ணியம் பலவீனமாகும் தருணங்களில் ஒன்று இது. பாரதிதாசனின் மாண்புகளைப் பட்டியலிடுவதன் மூலம் கூத்தனின் குற்றச்சாட்டை தகர்த்தெரிவது எழிலரசுவின் கவியாளுமைசார்ந்த விஷயமாகக் கனம் சேர்க்கிறது.

இப்போது எனது விமர்சனத்துக்கு வருகிறேன் (ஏற்கனவே அதற்கான எத்தனங்களைத் தெளித்திருந்தாலும்).

இந்த நூலுக்கு '**வலதுகை மின்னல்**' என்று தலைப்பிட்டிருக்கிறார் நூலாசிரியர். எழுத்துதான் அந்த வலதுகைமின்னல். "நமது வலக்கையிலே மின்னல் தோன்றுக" என்கிறான் பாரதி. இடக்கையிலேயும் அது தோன்றலாம்; அது ஒன்றும் தவறோ பிழையோ ஆகாது என்றாலும் அவனுக்கு வலக்கையே சிறப்பு, உயர்வு, உவப்பு. அதாவது இடக்கையானது இழிவின் சின்னம்.

ஒருவரது மொழி அவரது பண்பாட்டுப் பெட்டகம் என்பது எழிலரசுவுக்குத் தெரியும். இருந்தும் பாரதி என்னும் மகாகவி என்னவோ பரிசீலனைக்கப்பாற்பட்டவன் என்பதாகக்கொண்டு அவனது மொழி நறுக்கைத் தனதாக்கிக்கொள்வதன் மூலம் வீணுக்குத் தன்னைக் கடன்பட்டவராக்கிக்கொள்கிறார். கடன்பட்டாரின் நாணயம் என்பது அதைக் கொடுத்தவருக்குத் தன்னை விற்றுக்கொள்வதுதான். 'தனியொருவனுக்குணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம்,' என்று குறளை வழிமொழிந்து கோஷமிட்டவன்தான் என்றாலும் பாரதி எப்போதும் அவனது பண்பாட்டின் விளைபொருளாகவே ஒருமைப்பட்டவன். இந்த மண்ணை 'ஆரிய பூமி' என்றும், 'பாரததேசம்' என்றும், 'வேதங்களின் தாயகம்' என்றும் தன்மொழியால் முற்றுறுதி செய்துகொண்டவனாய், 'ஆரியர் புலையருக்கு அடிமையாகார்' என்பதை அடிப்படை ஞானமாக்கி, அதன்மீது அழுந்த நின்றவனாகத்தான் "பேராசைக்காரனடா பார்ப்பான்" என்றும், "பார்ப்பானை ஐயர் என்ற காலம் போச்சே" என்றும் தனக்கான சுய விமர்சனங்களை கௌரவப் பதாகைகளாகத் தூக்கிப் பிடித்தான்.

கொஞ்சகாலத்துக்கு முன் அத்வானி ஓட்டினாரே ரதம், அது சென்றடைந்த இடத்துக்குப் பெயர்தான் பாரதம். ஆனால் கன்னியாகுமரி வரையல்லவா பாரதமாகிவிட்டது. – அதாவது பரதன் ஆண்ட மண்ணாகிவிட்டது! ஆனானப்பட்ட அசோகன் காலத்திலேகூட இந்தத் தென்னகம் நிமிர்த்தி வைக்கப்பட்ட கடலோடி குல்லாமாதிரி தனித்தேதான் கிடந்தது. வெள்ளைக்காரன் இதை ஒன்றிணைத்து இந்தியாவாக்கினான். ஆகவே அந்தப் பெயரில் அர்த்தமிருக்கிறது. ஆனால் பாரதத்தில் பண்பாட்டு வன்முறையல்லவா கட்டமைக்கப்பட்டுள்ளது; வெறும் கற்பனைகளும் கற்பிதங்களுமல்லவா வரலாறுகளாகக் கட்டமைக்கப்படுகின்றன. நாடு நன்றாயிருக்க வேண்டும், ஒன்றாயிருக்கவேண்டும் என்னும் நல்லெண்ணத்தோடு நாமும் அதற்குத் துணைபோய்க் கொண்டிருக்கிறோம் என்பதோடு தொலைந்தும்போய்க்கொண்டிருக்கிறோம். பாரதி அறியாததல்ல இது. அறிந்துதான் கனகலிங்கம் என்னும் பறையனுக்குப் பூணூல் அணிவித்து பார்ப்பான் உயர்ந்தவன்தான் என்பதைப் பதிவுசெய்கிறான். பூணூலைக்கழற்றி எறிந்துவிட்டாலும் பார்ப்பான் பார்ப்பான்தான் என்பதற்கும் அவனே சான்றாகிறான்.

பாரதிப் பண்பாட்டின் இந்த வேற்றுமைப்பண்புதான் எழுத்தை வலக்கை மின்னலாகச் சிறப்பிக்கிறது. சிறப்பின் அடிப்படை அலகு இது. இதிலிருந்தே ஒழுக்கம், தர்மம், புனிதம், பவித்திரம், உன்னதம், ஒளிவட்டம் என்பனவெல்லாம் கட்டியெழுப்பப்படுகின்றன. எல்லாமே இயல் நிலையை மலினப்படுத்திக் கற்பிதங்களில் பரவசம் கொள்ளும் சொல்லலங்காரங்கள். மரபுக்கு வாழ்க்கைதான் மூலம் என்பதுபோய் வாழ்க்கைக்கு மரபுதான் மூலம் என்பதாய் வன்மங்கொண்டுவிட்ட பண்பாக்கம் இது.

பகட்டுமொழியற்ற பாமரர்கள் கைகளை 'சோத்துக்கை' என்றும் 'பீச்சக்கை' என்றும் பயன்பாட்டுப் பெயர்கொண்டு அழைப்பதுண்டு. இடதுகை இழிவு, வலதுகை சிறப்பு என்னும் வேற்றுமைப்பண்பை அதில் பாய்ச்சியதும் பீச்சக்கை


படிப்பகம்

www.padippakam.com

இடதாகவும் சோத்துக்கை வலதாகவும் உறுதிப்பட்டுவிடு கின்றன. அது மரபாகும்போது காரணமோ, வழமையோ, பின்னுக்குத்தள்ளப்பட்டு கூறுபடும் வேற்றுமை ஒன்றே அடிப்படை அலகாகிவிடுகிறது. சான்றாக, ஒருகுழந்தை கைகளைப் பயன்படுத்தத் தொடங்கும்போதே வலக்கையால் மட்டுமே உண்ணப்பழக்கப்படுத்தப்படுகிறது. குறைந்த பட்சம் நான்கு அல்லது ஐந்தாண்டு காலம் குழந்தை இடது கையைப் பீச்சக்கையாகப்பயன்படுத்துவதில்லை என்றாலும் அந்தக்கை இழிந்த உறுப்பாகவே கற்பிக்கப்பட்டு முடக்கப்படுகிறது. இதன் நீட்சி எங்கேபோய் முடிகிறது என்பதுதான் இந்திய வாழ்வின் சந்தேகத்துக்கப்பாற்பட்ட நரகம். மானுட நாகரிகம் குழந்தையைத் தெய்மாகப் போற்றுகிறது. ஆனால் ஒரு தலித் வீட்டில் பிறந்த குழந்தைக்கு அது பொருந்தாது. தலித் குழந்தை என்பதாலேயே அது இடக்கையைப் போலவே எவ்வித முகாந்திரமும் இன்றி இழிவுக்குத் தத்தம் செய்யப்படுகிறது.

குழந்தைகளைக் குறைந்தபட்ச மேற்பார்வையோடு இயல்பாக வளர அனுமதித்தால், படிக்குப்பாதிப் பேராவது இடக்கைப் பழக்கமுள்ளவர்களாக வெளிப்படுவர். சுதந்திரமான போக்கு அவர்களை சுய அறிவுள்ளவர்களாகவும் மேம்படுத்தும். இந்திய சராசரித்தனமே பகுத்தறிவின் விளிம்புகளைத் தொட்டுக் கொண்டு இன்னும் நன்றாய் வெளிச்சப்படும். ஆனால் இங்கே அறிவைவிட மடமைதான் ஆராதனைக்குரியதாகிறது.

ஒருமனிதன் மரபைத் தகர்க்கும் வண்ணமாக அடிநாளிலிருந்தே உண்பதற்கு இடக்கையையும் குண்டிகழுவ வலக்கையையும் பயன்படுத்திவந்தால், அதுவே ஒரு முறைமையாகிவிடுகிறது. ஆனால் விரைத்துப்புழுத்துப்போன இந்திய மரபு மறைகழன்ற நாய்போல அவனைத் தனித்து வைத்துக் குறைத்துக்கொண்டி ருக்கும். தலித் பிரச்சினை இப்படித்தான் இழிவாடிக்கொண்டி ருக்கிறது. சாதிமரபு காக்கும் இந்தியன் இடப்புறமுள்ள இருதயத்துக்கு ஈவிரக்கம் தேவையில்லை என்று இப்பிரச் சினையில் தள்ளிவைத்துவிட்டான் போலும்.

பாரதியின் வலக்கை மின்னலுக்கு அரும்பதவுரையாகும் உயிர்க்கொல்லிகள் இவை. பாரதியைப்பிடிக்கும் என்பது பாராட்டுக்குரிய விஷயம். அனால் பாரதியின் பிடிக்குள் என்பது பண்பாட்டுப்பிறழ்வுக்கான தடயம். எழிலரசு போன்ற மொழி ஆளுமையுள்ளோரின் எழுத்துப்பயணம் இதுபோன்ற இரவல்களில் அழிந்துவிடக்கூடாது என்பதே இதன் சாரம். ஆனால் புலப்பாடற்ற புலப்பாடாக எழிலுக்கு அப்படியொரு விபத்து நேர்ந்திருக்கிறது என்றே தோன்றுகிறது. அதிலும் 'இட-வலப்' புலப்பாடு பாரதியைவிடவும் அதிகமாகவே அவரை மேவியிருக்கிறது.

Burlesque பற்றி எழுதும் போது "ஏகதேசப் புனிதங்களை இடக்காலால் புறந்தள்ளி உடைத்துப்போடுவது" என்று எழுதுகிறார். வலக்காலால் உடைத்துப்போட்டால் அவரது வலதுகை மின்னலுக்கு உடைத்த நிறைவே கிடைக்காது போலும்.

**மேற்கிலிருந்து கிழக்காகப்**

**போனது நாரைகள் கூட்டம்**

**வெண்ணிறப் புள்ளியாய்**

**மறைந்த பின்பும்**

**பார்த்துக்கொண்டே இருந்தேன்**

என்னும் வரிகளுக்கு "சட்டென்று இடமிருந்து வலமாகப் பார்த்துக்கொண்டே இருக்கும்போது பறந்துபோய்விடும் நாரைகளுக்குக் கவிதையில் நீண்டகாலத் தொடர்புண்டு.", என்று நயமுரைக்கிறார். அதாவது, வேற்றுமைப் பிரச்சினைகள் பற்றிய கேள்வி இல்லாமலே கூட, இவர் மேற்கிலிருந்து கிழக்காகப்போகும் கூட்டத்தைக்கூட இடமிருந்து வலமாகப் போவதாகவே பார்க்கிறார். எல்லாத் திசைகளுமே இடமிருந்து வலம்நோக்கி, இழிவிலிருந்து சிறப்பு நோக்கி என்பதாகப் படிமப்பட்டிருப்பார் போல. கிரிவலம், நகர்வலம், ஊர்வலம், தேர்வலம் போன்ற சொற்கள் மரபை விழுங்கிக்கொண்டு அழகியல் பாசாங்கு காட்டுவதாக அவருள் ஒருகோலம் புனையப்பட்டிருக்கலாம். வலம் போவதற்கு மாறாக இடம் போகும்போது மரபுகள் என்ன மாதிரியான காலிங்க நர்த்தனம் ஆடும் என்பது நாம் அறியாததா? ஆனால் மரபை உடைக்கும் ஒருவலிமையமிக்க அம்சம் எதிர்ப்படும் போது, 'நரி இடம் போனால் என்ன, வலம் போனல் என்ன, கடிக்காமல் போனால் சரிதான்' என்று தன்னை விதிக்குள் ஒடுங்கும் கைநாட்டுப் பேர்வழியாய்க் காட்டிக்கொள்ளும் சமூகம்தான் இது.

.ஆதிசங்கரரைப்பற்றிச்சொல்லும்போது, 'பிரம்மத்தை பிராமணனால்தான் அறிய முடியும்,' என்னும் அவரது அகட விகடத்தை மட்டுமே விமர்சிக்கிறார். பிராமணன் பிரம்மன் வாயில் பிறந்தவன் என்பதை நம்புகிற ஒருவன் , ஜீவான்மா, பரமான்மா, கடவுள், சமயம் என்று அளப்பதெல்லாம் வெறும் குப்பைக் கற்பிதங்கள்தாம் என்று அடித்துப்பேசுவதை எழிலரசுவின் 'வலதுகைமின்னல்' வசதியாகத் தவிர்த்து விடுகிறது.

சென்ற நூற்றாண்டின் தொடக்கம் வரை கும்பகோணத்தில் குப்பை கொட்டிக்கொண்டிருந்த சங்கரமடம், பின்னரே காஞ்சி புரத்துக்குத் தன் இடத்தை மாற்றிக் கொண்டது. ஆனால் மடம் இப்போது அளக்கும் மகாத்மியமோ, காலடியில் அவதரித்த ஆதிசங்கரரே கால்நோகக் காஞ்சிக்கு நடந்துவந்து தன் திருக்கரத்தால் சக்கரம் புதைத்து மடத்தை நிறுவினார் என்பதாய் இருக்கிறது. அதற்கு சாட்சியமாகக் காமாட்சி கோவிலில் சித்திர–சிற்ப வரலாறே வடித்து வைத்துள்ளார்கள். இவ்வளவு பெரிய பொய்யைச் சொல்கிறோமே என்று யாருக்கும் கூச்சமோ குற்ற உணர்வோ இல்லை. பார்ப்பன தர்மம் அவற்றைக் கற்றுக்கொடுத்ததில்லை. ஊரும் உலகமுமோ கண்ணையும், காதையும் பீக்கோவணத்தால் இறுகக் கட்டிக்கொண்டு கன்னத்தில் போட்டுக்கொள்கிறது. இந்தியாவிலேயே 'நம்ம சங்கர மடத்' தலைவர்தான் நிராகரிக்கவே முடியாத அதிகார மையமாக விளங்குகிறார். எல்லாம் சூரியனுக்கு கீழேதான். இந்த 'உண்மை' எப்படியோ, அப்படித்தான் ஆன்மிகக் குப்பையும் அதைப்பற்றிய வியாக்யானமும்.

அதேபோல, ஞானக்கூத்தனின் பொய்யைப் பற்றிக் கலகச்சிந்தனையாளன் பேசுவதாயிருந்தால் "கூத்தன், பொய்யில் புழுத்து வெடித்த நாற்றக்குசுவால் அரங்கை ஆபாசப்படுத் தினார்" என்று அடித்துப்பேசியிருப்பான். எழிலின் 'வலதுகை மின்னல்' இதில் கண்ணியம்காக்கிறது. கண்ணியம் நல்லதுதான், அது சமத்துவத்தை சாட்சிப்படுத்துமெனில். உங்களுக்கொன்று தெரியுமா? இந்த மண்ணில் எந்தப் சொல்லும் இயல்பானதல்ல; எந்தப்பேச்சும் தன்னறிவானதல்ல.

"செல்வம் சேர்வதும், போவதும் கூத்தரங்கில் மக்கள் குழுமுவதும் கலைவதும்போல" என்று பொருள்படும்.

**கூத்தாட்டவைக் குழாத்தற்றே பெருஞ்செல்வம்**

**போகும் அது விளிந்தற்று.**

என்னும் திருக்குறளைப் பற்றிப் பேசும் எழில் அதைக் கட்டுடைத்துப்பார்க்கமுயல்கிறார். அவருக்கொரு கேள்வி



படிப்பகம்

www.padippakam.com

பிறக்கிறது. 'வள்ளுவருக்கு கூத்தின் அல்லது கூத்துபோன்ற மக்கள்கலைமீது ஏதேனும் வெறுப்புகள் இருந்தனவா ?"என்று. இது அவரிடமுள்ள ஒழுக்கவாதியின் கற்பிதக்கேள்விதானே தவிர, குறள் இந்தக் கேள்வியை எங்கேயும் ஒளித்துவைத் திருந்ததாகத் தெரியவில்லை. ஒழுக்கவாதம் வலதுகைச் சிந்தனையின் ஓர் அம்சம் என்பது தற்செயலானதல்ல. ஜைன, பௌத்தத் தாக்கத்திற்கு முற்பட்ட சங்க இலக்கியங்கள் பெரும்பாலும் கலைகளையும் கலைஞர்களையும் இழித்துப் பேசியதாக எனக்குத் தெரியவில்லை. புறநானூற்றுப் பாடல்கள் குறைந்தது 500 ஆண்டுகால இடைவெளியைத் தம்முள் கொண்டிருக்கக்கூடும். நிலவியல், உளவியல் சார்ந்த ஐந்திணை வாழ்வையும் வழிபாட்டுக்குறிப்புகளடங்கிய நம்பிக்கை வாழ்வையும் அவைபேசுகின்றன. அப்போதுகூட கலைவாழ்வுபற்றிய ஒவ்வாமை வெளிப்பட்டதாகத் தெரியவில்லை. துறவியர் மதங்களான ஜைனமும் பௌத்தமும் தமிழ் வளர்க்கத் தொடங்கிய போது மூச்சு முட்டும்படியான அறநெறிச்சாரங்களும் நீதிநெறித் தொகுப்புகளும் வெள்ளமெனத் தமிழ்வாழ்வைச் சூழ்ந்தன. அவற்றிலொன்றுதான் ஏலாதி. இந்த அறநெறிக்கோட்பாடுகளில் பலவற்றைப் பின்னர் கிளர்ந்ததெழுந்த வைதிக மதப்பிரிவுகள் தங்கள் நாற்பால் பேதங்களுக்கு உதவும் வகையில் தன்வயப்படுத்திக் கொண்டுவிட்டன. அப்போதுதான் கலைவாழ்வைக் கொச்சைப் படுத்தல் தொடங்கியது. பாணர்கள், பாடினிகள், விறலியர்கள், கூத்தர்கள் யாவரும் பெரும்பாலும் பழமரம் நோக்கிச் செல்லும் பறவைகள் போல இடம்பெயர்ந்துபோகும் விளிம்பு மக்களாய் வாழ்ந்தவர்கள். வைதிகமதத்தாக்கத்திற்குப் பின்னர் அவர்கள் இழிசினராகவும் தீண்டப்படாதோராகவும் நிலைப்படுத்தப் பட்டனர். ஒழுக்கவாத ஆச்சாரம் கலைமாந்தர்களைப் பாலியல்பகடைகளாய்ப்பயன்படுத்தக்கொண்டது. ஆகவே எழிலின் கேள்விக்கு பின்நிகழ்ந்த வரலாற்று மாற்றங்களே காரணங்களாகின்றன.

அருமை நாதனின் 'ஞானஒளி' நூல் வெளிப்படுத்தும் மையக்கருத்தான "கிறித்துவம் இந்திய மண்ணில் இந்தியத் தன்மைக்கேற்பப் புரிந்து கொள்ளப்படவேண்டும் என்பதில் ஆசிரியர் கொண்டுள்ள புலப்படுத்துகிறது." என்று எழில் சொல்கிறார். நான் அந்த நூலை வாசிக்காதது ஒரு குறை. கிறித்துவம். மானுடத்தின் மேம்பாட்டைப் பேசும் மதம். இந்தியத் தத்துவம் தனிமனிதக் கடைத்தேற்றத்தையே முற்படுத்துவது. இதில் கிறித்துவம் இந்தியமண்ணில் இந்தியத் தன்மைக்கேற்ப புரிந்துகொள்ளப்பட வேண்டும் என்றால் எப்படி எனத்தெரிய வில்லை. இந்தப்புரிதலின் கடைசிப்படியாக கிறித்துவம் இந்துச் சாதிஆச்சாரத்தை உள்வாங்கிக்கொண்டு வெட்கிச் சிறுத்துப் போன கொடுமையை ஒளிவட்டப்படுத்தலாமா? அதுபற்றிய கேள்வியை எழிலின் 'வலதுகை மின்னல்' ஏன் பரிசீலிக்கவில்லை ? மாறாக, ரிஷிகள், துறவிகள், ஆழ்வார்கள், நாயன் மார்கள், திருமுறைகள், அருளிச்செயல்கள் என்று ஒரு சுற்று விவரித்து மகிழ்கிறார்.

ஓரிடத்தில் எழில் இப்படி எழுதுகிறார் :

"ஒருமுதிய விமர்சகர் அடிக்கடி அங்கலாய்ப்புத் தொனியுடன் தன் எழுதுத்துகளின் தமிழ்ச்சூழல்குறித்த தன் வருத்தத்தை இப்படி வலியுறுத்துகிறார்: "இங்கே எதுக்குத்தான் மரியாதை இருக்கு? எல்லாப் புனிதங்களும், எல்லா மேன்மைகளும், எல்லாப் பவித்திரங்களும் காலம் காலமாய்க் காயம் பட்டிட்டிருக்கே," அவரின் புலம்பலில் இருக்கும் உண்மையை மறுப்பதற்கில்லை. ஆனால் அவரின் அனுதாபங்களாகிய புனிதங்களும் மேன்மைகளும் ஒப்பனைப்பூச்சுடன் தமிழ்ச் சூழலை நாசமாக்கவந்த அந்நியங்கள். எனவே மொழி தனது குறுங்கத்திகளை அவைகள் மீது ஓயாமல் வீசிக்கொண்டே இருக்கிறது."

இந்த விழிப்பைத்தான் எழில் போன்றவர்களிடமிருந்து எதிர்பார்க்கிறோம். இந்தப்புரிதல் இங்கே ஏதோ ஒரு கற்றுச்சொல்லியின் எச்சப் பதிவுபோலவும், ஒரு தேர்வுத்தாளின் பத்திவிடையைப்போலவும் எழுதப்பட்டுள்ளது. உண்மையில் 'வலதுகை மேன்மை' யின் வக்கிரத்திலும் அந்த அந்நியத் தன்மையின் ஆதிக்கம் இருக்கிறது என்பது அறியப்பட வேண்டும். இல்லையேல் எவ்வளவு சிறப்பான எழுத்தாயினும் கருத்தாயினும் அதில் வெறும் பௌராணிகத்தனமே மேலோங்கி, எழுதுகிறவனைப் பத்தோடு பதினொன்றாக்கிப் பட்டியில் அடைத்துவிடும்.

எழிலைப்போல மொழிஆளுமையும், ஒப்பனையற்ற தமிழ் வாழ்வையும் ஐந்திணைப் பண்புகளையும் அவதானிக்கத் தெரிந்தவர்கள் தன்னுணர்வும், தன்னறிவும் தன்விழிப்பும் பொங்கும் சிந்தனையூற்றத்தின் கண்திறப்பாய்த் தங்கள் சுயமொழியை நிலைப்படுத்தவேண்டும். அதுதான் தனித்துவம்.

**வலது கை மின்னல்**
வே. எழிலரசு
விலை : ரூ. 60, எழில் பதிப்பகம்,
21, மாதவரம் நெடுஞ்சாலை (வடக்கு) சென்னை-11.

## பெயரில் என்ன இருக்கிறது...

- பலரும் சொல்கிறார்கள்
  பெயரில் என் இருக்கிறது
- சேரி
  பறையன்
  தேவடியாள்
  பீ, மூத்திரம், குசு
  பன்னி
  கழுதை
  கருவாடு
- பூனூல்
  அப்பம் வடை தயிர்சாதம்
  ஆங்கிலம்
  சமஸ்கிருதம்
  மநு
- அமெரிக்கா
  சங்கர மடம்
  டெல்லி
  கொழும்பு
- வள்ளலார்
  பெரியார்
  அம்பேத்கர்
  மார்க்ஸ்
- பெயருக்குப்பின்னால்
  எல்லாமும் இருக்கிறது.

– இரா. காமராசு

www.padippakam.com

# கடிதங்கள்

"இரண்டு தலைமுறைக்கு முற்பட்ட இன மக்களில் பெரும்பாலோர் பெரியாரின் சீடர்கள். இன்றைய தலைமுறையினர் ஆர்.எஸ்.எஸ். தொண்டர்கள்," என ஆசிரியரின் பார்வை சரியானது. மேலும் இஸ்லாமியர் எதிர்ப்பில் ஆர்.எஸ்.எஸ். மார்வாடிகளுடன், இந்து முன்னணித் தலைவர் தாணுலிங்க நாடார் தலைமையில் நாடார் முதலாளிகள் அணி சேர்ந்ததையும் நாம் நினைவு கொள்ளவேண்டும். நாங்கள் யாருடனும் சேர்ந்து கொள்ளவிரும்பவில்லையென்கிற கிருத்துதாஸ் காந்தியின் கருத்து குறிப்பிட்ட கசப்பான அனுபவங் களை அடிப்படையாகக்கொண்டு வெளிப்படுவதாகத் கருதலாம். பேரா. பத்மாவதியின் ஒடுக்கப்பட்ட, வன்முறைக்கு ஆட்பட்ட பிற சாதி மக்களிடம் இணக்கம் கொண்டு போராடுவது தலித்துக்கு விடுதலை தரும் என்கிற கருத்து அனைத்தையும் 'சோதித்துப்பார் அல்லது கேள்விக்குட்படுத்து' என்கிற மார்க்ஸின் கருத்தையொட்டியதாகும். இது ஏற்புடையதும்கூட.

**- தலித் சுப்பையா**
புதுச்சேரி

"வணக்கம், நலன்களே மலர்க, நிறைக. தங்கள் 26–2–2002 மடல், மகிழ்ச்சி, நன்றி, என்னால் இயன்ற தொகையை சிற்றிதழ் வளர்ச்சிக்குக் கொடுக்க வேண்டும் என்ற உந்துதல் எப்போதும் உண்டு. அதன் வெளிப்பாடே என் பணவிடை உரு. 200/– தங்கள் கடிதத்தை அப்படியே என் நண்பரும் சமவெளி ஆசிரியருமான திரு. தரும. இரத்தினகுமாருக்கு அனுப்பியிருக்கிறேன். அவருடைய கையிருப்பிலிருந்து கதை /கவிதை / கட்டுரைகளை அனுப்பித்தரக்கூடும். இருந்தாலும் அனைவருக்கும் உரிய சோம்பித்திரியும் தவம் அவருக்கும் உண்டு.

எழுதி அனுப்புவதில் தாமதத்தைக்கூட பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் நம் எழுத்தாள நண்பர்கள் இருக்கிறார்கள், அவர்களை என்ன சொல்ல? மனமே வராது. அதிலும் தேங்காய்மூடி கச்சேரி என்றால் முழு சோம்பேறிகளாக மாறிவிடுகிறார்கள். எல்லாம் தமிழகத் தின் தலையெழுத்து. இதை யாராலும் மாற்ற முடியாது. மாற்ற முயற்சிப்பவர்களுக்கு தோல்வியும் விரக்தியும் தான் மிஞ்சும். இருப்பினும் தன் முயற்சியில் சற்றும் மனந்தளராத விக்கிரமாதித்தனைப்போல நானும் முயற்சி செய்கிறேன். வேதாளங்கள் எப்போதும் முருங்கை மரத்தினை விட்டுக்கீழே வருவதேயில்லை. முயற்சி திருவினையாக்கும் என்பதெல்லாம் இலக்கியத்தைப் பொறுத்தவரை செல்லாத பக்கம். பார்ப்போம், மீண்டும் சந்திப்போம்.

**- வெ. நாராயணன்**
காஞ்சிபுரம்

தி.பெ. இராமமூர்த்தியின் மூப்பனார் பற்றிய கட்டுரை ஏராளமான கேள்விகளை எழுப்புகிறது. மூப்பனாரின் தலித் உறவுகள் பற்றி இன்னும் விரிவாகச் சொல்லலாம். அவரின் அன்னசத்திரங்களில் இன்றும் தாழ்த்தப்பட்டவர்கள் உண வருந்த அனுமதியில்லை.... சரி இவை போன்ற விசயங் களைக்கூட நாம் அல்லது நம்மில் சிலர் தள்ளிவிடலாம். ஆனால் மறக்க முடியாத கீழ்வெண்மணி இருக்கிறதே! விடுதலை செய்யப்பட்ட கோபால கிருஷ்ணநாயுடுவிற்கு முதல் மரியாதை செய்து ஊர்வலம் விட்ட அவரது, தலித்பாசம் பழைய காலம் என்று சப்பைக் கட்டு கட்ட முடியுமா? அல்லது அடங்க மறுத்த, அத்துமீறி, திமிறி எழுந்து, திருப்பியடித்த விடுதலைச்சிறுத்தைகளைப் பூனைகளாக மாற்றிய வரலாற்றுத் துரோகத்திற்கு மன்னிப்புதான் தரமுடியுமா?, அவர் பாசாங்கில்லாவிட்டாலென்ன? பண்ணையார் பண்ணையார்தானே! பாசாங்கில்லாவிட்டால்போதும் அவர் பண்ணையாராகவோ, முதலாளியாகவோ, ஆதிக்க சாதிக்காரனாகவோ, மதவாதியாகவோ இருந்தாலும் அவர்கள் உயர்ந்தவர்கள் என்று கூற முடியும் என்ற தி.பெ.இ. பார்வையெல்லாம் கவிதாசரணுக்கு உடன்பாடுதானா? ஆண்டைகளின் வாழ்க்கையில் இரத்தம் கிடையாது. ஆனால் அடிமைகளின் இரத்தமில்லாமல் ஆண்டைகளே இல்லை என்பதுதான் வரலாற்று விதி.

**- குருசாமி மயில்வாகனன்**
சிவகங்கை

தங்கள் "கவிதாசரண்" டிசம்பர் இதழில் காவிரிக் கரையிலிருந்து கங்கை நதிவரை – தி.பெ. ராமமூர்த்தி, கருப்பையா மூப்பனார் பற்றிய எழுத்து (கட்டுரை) மனதை சற்று நிலை தடுமாற வைத்தது.

ஆம். உண்மைதான் 1996ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலின் போது த.மா. காங்கிரஸ் வேட்பாளர்கள் நின்ற இடங்களிலெல்லாம், "திருமாவளவன் ஆதரவு பெற்ற வேட்பாளர், டாக்டர் கிருஷ்ணசாமியின் ஆதரவு பெற்ற வேட்பாளர்", என்று அவர்களின் கட்சியையும் முன்வைத்து பிரச்சாரம் செய்தார்கள். நானொரு தலித் என்ற முறையில் நினைத்தேன். "இதுவரை தாழ்த்தப்பட்டவர்களை முன்வைத்து எந்த கட்சிக்காரனும் ஓட்டுகேட்டதில்லையே. இது எப்படி நடக்கிறது," என்று. அதற்குவிடையாக இந்தக் கட்டுரை இருப்பது சிந்திக்கத்தக்கதாய் இருந்தது.

ஆனால் காமராசர் ஆட்சியை ஏற்படுத்தப் போவதாக ஏற்கனவே காங்கிரஸில் ஊழல்வாதிகளை வைத்துக் கொண்டு கூறியதை நினைவில் நிறுத்த வேண்டியது.

**- சக்தி ஸ்டாலின்**
செங்குன்றம்

**நூல் மதிப்புரைகள் இனி தொடர்ந்து வரும்.**
**மதிப்புரைக்குப் புதிய நூல்கள் இரண்டுபடிகள் அனுப்பவேண்டும்.**


படிப்பகம்

www.padippakam.com

# போபால் பிரகடனம்

## அறிமுகமும் மொழியாக்கமும் :

*— அ. மார்க்ஸ்*

நமது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய குடியர சுத்தலைவர் கே.ஆர். நாராயணன் அவர்கள் இந்த ஆண்டு (2002) குடியரசு தின உரையின்போது இந்தியச் சமூகங்களின் இரு பெரும் ஒடுக்கப்படும் பிரிவினராகிய பெண்கள் குறித்தும், தலித்கள் குறித்தும் கவனத்தை ஈர்த்தது குறிப்பிடத்தக்கது. குறிப்பாகத் தனியார் நிறுவனப் பணிகளில் தலித்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டியதற்கான காலம் கனிந்துவிட்டதை அவர் சுட்டிக் காட்டினார். இதற்கு ஆதாரமாகக் குடியரசுத் தலைவர் மேற்கோள் காட்டியது சில நாட்களுக்கு முன்னர் போபாலில் நடைபெற்ற ஒரு மாநாட்டில் வெளியிடப்பட்ட ஒரு பிரகடனத்தை.

மத்தியப் பிரதேச மாநில அரசு முயற்சியில் நடைபெற்ற அம்மாநாட்டில் (ஜனவரி 12, 13 - 2002) நாடெங்கிலுமிருந்தும் சுமார் 250 தலித் அறிவாளிகளும் களப்பணியாளர்களும் கலந்துகொண்டனர். ம.பி. காங்கிரஸ் அரசு சில அரசியல் நோக்கங்களுக்காக இதைச் செய்தது எனக் கருத இடமுண்டு என்ற போதிலும் சுதந்திரமாக நடைபெற்ற விவாதங்களின் அடிப்படையில் பிரகடனம் உருவாக்கப்பட்டது. தமிழகத்திலிருந்து எழுத்தாளரும் அரசுச் செயல ருமான சிவகாமி அவர்கள் கலந்துகொண்டுள்ளார். முதல்வர் திக் விஜயசிங்கும் வேறு சில அமைச்சர் களும் கலந்து கொண்ட இம்மாநாட்டின் பிரகடனம் இறுதியில் ம.பி. அரசு சார்பாக வெளியிடப்பட்டது.

சில மாதங்களுக்கு முன்னர் மகாராஷ்டிர குடியரசுக் கட்சித் தலைவர் திரு. ராமதாஸ் அதாவலே பேரணி ஒன்றை நடத்தி, தனியார் துறை இட ஒதுக்கீடு குறித்து வலியுறுத்தியதையும் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பேயி இக்கருத்தைக் கடுமையாக எதிர்த்துப் பேசியதையும் நினைவுபடுத்திக்கொண்டு குடியரசு தலைவரின் உரை வாசகங்களைக் கவனிப்போம்.

"அரசியல் ரீதியாக நமது சனநாயகம் வெற்றி யடைந்துள்ளபோதிலும் நாம் இன்றும் (எல்லோரையும்) உள்ளடக்கிய ஒரு சமூகமாக உருப்பெறவில்லை என்பது வியப்பிற்குரிய ஒன்று. பெண்கள், அட்டவணைச் சாதியினர், அட்டவணைப் பழங்குடியினர் ஆகியோர் அனுபவித்து வருகிற வேறுபடுத்தல் என்பது நமது அரசியலமைப்புச் சட்டத்தில் பொறிக்கப் பட்டுள்ள சனநாயகத்தை மோசமாக மறுப்ப தாகும். சமீபத்தில் போபாலில் தலித், பழங்குடி அறிவாளிகள் மற்றும் களப்பணியாளர்களின் மாநாடொன்று நடைபெற்றது. தலித் மற்றும் பழங்குடியினருக்கு 21ஆம் நூற்றாண்டுக்கான புதிய பாதை ஒன்றை வகுத்து 'போபால் பிரகடனம்' என்றொரு பிரகடனத்தையும் அங்கு வெளியிட்டுள்ளனர். நமது அரசியலமைப்புச் சட்டத்தில் கண்டுள்ளவையும், தலித் / பழங்குடியினரின் வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டுள்ளவையுமான கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அப்பிரகடனம் அழைப்பு விடுத்தது. அத்தோடு நிற்காமல், எல்லாம் தனியார் மயமாகும் இந்த யுகத்தில் எல்லாவற்றையும் இழந்து நிற்கும் இம்மக்களுக்கு அரசு மற்றும் பொது நிறுவனங்களில் மட்டு மின்றி அரசு நிதிகளாலும் வசதிகளாலும் பயன் பெறுகின்ற எல்லாத் தொழில் நிறுவனங்களிலும் கார்ப்பரேட் அமைப்புகளிலும் பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டியதையும் வலியுறுத்தியது. சமத்துவமின்மையாலும் எல்லாவற்றையும் இழந்து நிற்பதாலும் துன்புறுகின்ற இவ்வர்க்கம் மேலுயர்த்தப்பட வேண்டும் என்பதால், தற்போ துள்ள பொருளாதார அமைப்பிலும் எதிர்காலத் திலும் தனியார் துறை என்பது முற்போக் கானதும் அதிக சமத்துவத்தன்மையுடையதுமான கொள்கைகளை ஏற்றுக்கொள்வது அவசியமாக உள்ளது. இப்படிச் சொல்வதென்பது தனியார் நிறுவனங்கள் சோசலிசத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதல்ல. பன்மைத்துவச் சட்டம், உறுதியாக்க நடவடிக்கை ஆகியவற்றை அமெரிக்க அரசு ஏற்றுக்கொண்டு செயல்படுத்துகிறவற்றைப் போன்று இங்கு ஏதாவது செய்யவேண்டும் என்பதுதான். எனது சக குடிமக்களே, இத்தகைய சமூகப் பிரச்சினைகளை உங்களிடம் நான் பேசுவது ஏனெனில் நமது மகத்தான சனநாயகம் உண்மையிலேயே மகத்தானதாகவும் மக்கள் பிரச்சினைகளுக்கு ஈடுகொடுக்கக்கூடியதாகவும் இருக்க வேண்டுமென்றால் உடனடி கவனிப்பைக் கோரும் இத்தகைய சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகளின் மீது நாம்கவனம் செலுத்தியாக வேண்டும்"

என்பவை மேதகு நாராயணன் அவர்களின் அழுத்தம் திருத்தமான சொற்கள். பார்ப்பனர்கள் குடியரசுத் தலைவர்களாக இருந்தபோது அரசுச் செலவில் கோயில் குளங்களுக்கும் சங்கராச்சாரி மடங்களுக்கும் அலைந்து திரிந்ததையும், எத்தகைய பெரும் அதிகாரம் கைவரப்பெற்ற போதும் நாராயணன் அவர்களின் உள்ளத்தில் ஒளிரும் தலித்திய உணர்வையும் ஒருகணம் நம்மால் ஒப்பிட்டுப்பாராதிருக்க இயலவில்லை. நிற்க.

போபால் பிரகடனத்தின் முக்கியத்துவம் தனியார் துறையில் தலித்துகளுக்கு உரிய பிரதி நிதித்துவம் கேட்பதில் மட்டும் அடங்கி விடவில்லை. மூலதனத்திலும் சந்தைப் பொருளாதாரத்திலும், பொதுச் சொத்துக்களிலும் தலித்களுக்குப் பங்கு, தொழில் முனைவில் ஊக்கம், வன்கொடுமைப் பகுதிகளில் தலித்துகளுக்கு ஆயுதம் வழங்குதல், தலித் பெண்களைப் பிற பெண்களிடமிருந்து தனித்துப் பிரித்து அணுகுதல், அவர்களுக்கு ஆயுதப் பயிற்சி எனப் பல அடிப்படையான விசயங்களையும் அது பேசுகிறது. இவை குறித்துச் சிலவற்றை அசைபோடு முன்பாக இப்பிரகடனம் மூலம் முன் வைக்கப் படுகிற சில சொல்லாடல்கள் குறித்து சில சொற்கள் :

'இட ஒதுக்கீடு' (Reservation) என்கிற சொல் லாடல் தற்போது தலித் அறிவுஜீவிகளால் அதிகம் பயன்படுத்தப் படுவதில்லை. தலித்களின் நல்வாழ்விற் காகச் சில வாய்ப்புகளை ஒதுக்கித் தர வேண்டுதல் என்பதான ஒரு பொருள் தொனிக்காமல் ஒட்டுமொத்தச்



படிப்பகம்

www.padippakam.com

சமூகத்தின் உயற்சிக்கும் பல்வேறு தரப்பினரும் தகுந்த அளவில் பங்கு பெறுவது அவசியம் என்னும் பொருள் தொனிக்கும் 'பன்மைத்துவம்' (Diversity) 'பிரதிநிதித்துவம்' (Representation) முதலிய கருத்தாக்கங்கள் இன்று முன் வைக்கப்படுகின்றன. ஒரு சில மேட்டுக்குடியினரின் தீவாக அமையாமல் இதுகாறும் ஒதுக்கப்பட்ட பல தரப்பினரும் உரிய அளவில் பிரதிநிதித்துவம் பெறும் பன்மைத்துவம் மிகுந்த சமூகமே திறன் நிறைந்த சமூகமாக இருக்க முடியும் என்பது இதன் உட்கிடை.

அமெரிக்கச் சமூகத்தில் கருப்பர்களுக்கும் இதர இனச் சிறுபான்மையினருக்கும் உரிய பிரதிநிதித்துவம் அளிப்பது குறித்துப் பயன்படுத்தப்படும் 'உறுதியாக்க நடவடிக்கை' (affirmative action), 'ஈடு செய்யும் (நோக்கில்) வேறுபடுத்தல்கள் (compulsary discrimination) முதலிய சொல்லாடல்களும் தற்போது கசியவிடப்படுகின்றன. சாதிய / இன ஒதுக்கல்கள் அல்லது வேறுபடுத்தல்கள் மூலம் இதுகாறும் எல்லாவற்றையும் இழந்து நின்ற மக்களுக்கு உரிய இழப்பீடு செய்யும் நோக்கில் அவர்களை வேறுபடுத்தி, உரிய பிரதிநிதித்துவம் வழங்குதல் என்னும் பொருளில் 'ஈடுசெய்யும் வேறுபடுத்தல்கள்' என்னும் கருத்தாக்கமும், எதிர்மறைத் தொனியைத் தவிர்க்கும் பொருட்டு (சுய) உறுதியாக்க நடவடிக்கைகள்' என்றும் பேசப் படுகின்றன. நிறுவனங்கள் தமக்குத் தேவையான இடு பொருட்களை வாங்குவதிலும் உற்பத்தி செய்த பொருட்களை விற்பதிலும் தலித்களுக்கும் தலித்கள் நடத்துகிற நிறுவனங்களுக்கும் உரிய பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டும் என்கிற பொருளில் Supplier Diversity (இடுபொருள் அளிப்பவர்களில் பன்மைத் துவம்) Dealership Diversity (விற்பனையாளர்களில் பன்மைத்துவம்) முதலிய சொற்கள் அறிக்கையில் பயன்படுத்தப் படுகின்றன.

அமெரிக்காவில் கருப்பர்களின் பிரச்சினையும் இந்தியாவில் தலித்களின் பிரச்சினையும் பல்வேறு அம்சங்களில் ஒற்றுமையுடையவை. எனவே அங்கு மேற்கொள்ளப்படுகிற உறுதியாக்க நடவடிக்கைகளை இங்குள்ள சூழலுடன் ஒப்பிட்டுப் பார்ப்பது தவிர்க்க இயலாததாகிறது. அமெரிக்காவில் 1950, 60 களில் நடைபெற்ற கருப்பர்களின் சிவில் உரிமைப் போராட்டங்கள் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தவை. உரிமை கோரி நடைபெற்ற இப்போராட்டங்களின் விளைவாக 'சிவில் ஒழுங்கு குலைந்தது' பற்றி ஆய்வு செய்ய 1967ஆம் ஆண்டு கெர்னர் ஆணையம் நியமிக்கப்பட்டது. இத்தகைய போராட்டங்கள், அமெரிக்கா என்பது ஒரு 'ஒற்றைத் தேசமாக' உருப்பெறுவதைத் தடுத்துவிடுமோ என்கிற அச்சம் வெள்ளைச் சமூகத்திற்கு ஏற்பட்டதன் விளைவாக சில உறுதியாக்க நடவடிக்கைகளை மேற்கொள்வதன் முன்னோடியாக இந்த ஆணையம் உருவாக்கப் பட்டது. (இத்தகைய சூழலை இந்து உயர் சாதியினர் எவ்வாறு எதிர்கொள்கின்றனர் என்பது சிந்திக்கத் தக்கது. எத்தகைய உறுதியாக்க நடவடிக்கைக்கும் தயாராக இல்லாத இவர்கள் இந்து என்கிற அடையாளத்திற்குள் தலித்களை உள்வாங்குவதன் மூலம் எதிர்ப்புகளையும் கோரிக்கைகளையும் மழுங்கடிக்க முயல்வது கண்கூடு.)

"சமமற்றதும், தனித்தனியானதுமான இரண்டு சமூகங்களாக உருப்பெறுவதை நோக்கி நமது தேசம் நகர்ந்து கொண்டிருக்கிறது' என எச்சரித்த கெர்னர் ஆணையம் இந்த வேறுபடுத்தல்களையும் மறுப்புகளையும் முடிவுக்குக்கொண்டுவர எல்லாவிதமான முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டுமென அழைப்பு விடுத்தது.

"வெள்ளைச் சமூகம் சேரியில் சிக்கிக்கிடக்கிறது என்கிற உண்மையை வெள்ளைச் சமூகம் என்றைக்கும் புரிந்துகொண்டதில்லை; நீக்ரோக்கள் அதை எப்போதும் மறந்ததில்லை. சேரிகளை வெள்ளைச் சமூகம்தான் உருவாக்கியது, தக்கவைத்தது, அங்கீகரித்து, ஏற்றுக்கொண்டது..... ஒற்றை அமெரிக்க அடையாளத்துடன் கூடிய ஒற்றைச் சமூகமாக உண்மையான ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதே நமது முக்கிய குறிக்கோள்" என்றது கெர்னர் அறிக்கை.

எந்த ஒரு ஆதிக்கச் சமூகத்தின் நோக்கமும் இத்தகைய 'ஒற்றை அடையாளத்தை' உருவாக்க முயற்சிப்பதுதான் என்ற போதிலும், இந்த நோக்கில் அமெரிக்க வெள்ளைச் சமூகம் மேற்கொண்ட நடவடிக்கைகளின் சில வித்தியாசமான கூறுகளைப் பார்க்கலாம்.

கருப்பர்கள், இஸ்பானியர்கள், பழங்குடி அமெரிக்கர்கள் முதலான 'சிறுபான்மையினரின் எண்ணிக்கை அமெரிக்கச் சமூகத்தில் 18 சதம். 1969 மார்ச் 5ஆம் தேதியன்று அன்றைய குடியரசுத் தலைவர் லிண்டன் ஜான்சன், 'சிறுபான்மையினர் வணிக வளர்ச்சிக் கழகம் (Minority Business Development Agency) ஒன்றைத் தொடங்குவதற்காக ஆணை பிறப்பித்தார். மய்ய அரசின் மூத்த அதிகாரிகள், நிதி நிறுவனங்களின் பிரதிநிதிகள், சிறுபான்மையினருள் முக்கிய வணிகர்கள், தனியார் தொழில்துறைப் பிரதிநிதிகள் ஆகியோர் அடங்கிய, இவ்வமைப்பு கருப்பர்கள் உள்ளிட்ட சிறுபான்மையினரின் வணிகம், தொழில் முதலியவை பெருக்கம் அடைவதற்கான பணியை மேற்கொண்டது. அதாவது அமெரிக்க மூலதன வளத்தில் வெள்ளையரல்லாத சிறுபானமையினருக்கு உரிய பங்கு இருக்க வேண்டும் என்பது இதன் உட்கிடை. "மூலதனத்தைச் சனநாயகப் படுத்தல்' என்கிற முழக்கம் அமெரிக்க அரசின் சார்பாக முன்வைக்கப்பட்டது. சிறுபான்மையினர் பங்குபெறாத வணிகப்பெருக்கத்தின் மூலம் நாட்டின் பொருளாதார வளர்ச்சியைப் பாதுகாக்க இயலாது என்கிற கருத்தும் முன்வைக்கப்பட்டது. இதன் விளைவாக கருப்பர்கள் இன்று அமெரிக்கப் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க பங்கு வகிக்கின்றனர். 100 மில்லியன் டாலருக்குமேல் சொத்துடைய அமெரிக்கர்களில் 15க்கும் மேற்பட்டோர் கருப்பர்கள். இவர்களில் முதலாமவர் எனக் கருதப்படும் ராபர்ட் ஜான்சனின் 'சொத்து 4 பில்லியன் அமெரிக்க டாலர்கள். இந்தப் பட்டியலில் தொலைக் காட்சி நட்சத்திரங்கள், விளையாட்டு வீரர்கள் அடங்க மாட்டார்கள். 1992ஆம் ஆண்டு அமெரிக்க அரசின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அலுவலகம் மேற்கொண்ட ஒரு ஆய்வின்படி அமெரிக்காவிலுள்ள மொத்தம் பதிவு செய்யப்பட்ட தொழில், வணிக ÃW t d § (172 கோடி) களில் சிறுபான்மையினருக்குச் சொந்தமான நிறுவனங்களின் எண்ணிக்கை 21.49 லட்சம்; அதாவது 12.5 சதம். மொத்தமுள்ள வணிக வரவு செலவில் 6.3 சதம் சிறுபான்மையினருடையது.



படிப்பகம்

இந்தியாவில் 21 கோடி தலித் மக்களில் பத்து கோடி ரூபாய்க்கும் மேல் சொத்துடையவர்கள் என ஒருவரையாவது சொல்லமுடியுமா? ஒரு கோடி ரூபாய்க்கு மேல் வணிகம் செய்யும் தொழில் / வணிக அதிபர் என ஒரு தலித்தையாவது சுட்டிக்காட்ட இயலுமா? ஒரு தேசத்தின் ஆதாரமான செயற்பாடாகிய பொருளாதார நடவடிக்கைகளிலிருந்து இவ்வாறு முற்றாக ஒரு பிரிவினர் கிட்டத்தட்ட இந்திய மக்களில் ஐந்தில் ஒரு பங்கினர், ஒதுக்கப்படும்போது இதை எப்படி ஒரு தேசம் என்று சொல்லமுடியும்? இந்தப் பின்னணியில் தான் இந்தப் பிரகடனம் முன் வைக்கிற 'மூலதனத்தைச் சனநாயகப்படுத்தல்' என்கிற முழக்கத்தை விளங்கிக் கொள்ள வேண்டும்.

தனியார் தொழில் நிறுவனங்களின் பணிகளில் போதிய எண்ணிக்கையில் சிறுபான்மையினர் பங்கு பெறுகின்றனரா என்பதைக் கண்காளிக்க 'சமவேலை வாய்ப்பு ஆணையம்' என்கிற அமைப்பையும் அமெரிக்க அரசு உருவாக்கியுள்ளது. பதினைந்து அல்லது அதற்கு மேற்பட்ட ஊழியர்களை நியமித்துள்ள எந்த ஒரு நிறுவனமும் ஆண்டு தோறும் தனது ஊழியர்களின் இன அடிப்படையிலான எண்ணிக்கையை அரசுக்குத் தெரிவிக்க வேண்டும். பன்மைத்துவக் கோட்பாட்டை ஒரு நிறுவனம் கடைபிடிக்கவில்லை என யாரேனும் கருதினால், அல்லது ஒருவர் தனது இனத்தின் அடிப்படையில் தனக்கு வேலை மறுக்கப்பட்டது. என எண்ணினால் அந்நிறுவனத்தின் மீது வழக்குத் தொடர முடியும். பன்மைத்துவக்கோட்பாட்டை மீறுவதாக வழக்கில் நிறுவப்பட்டால் கடுமையான அபராதங்கள் விதிக்கப்படுவதன் விளைவாக அமெரிக்க நிறுவனங்கள் பெரிய அளவில் சிறுபான்மையினரை வேலைக்கு அமர்த்துகின்றனர்; அவர்களை விற்பனையாளர்களாக நியமிக்கின்றனர். அவர்களிடம் இடுபொருட்கள் வாங்குகின்றனர்.

இன்று உலகின் முதன்மையான மென்பொருள் நிறுவனமான 'மைக்ரோ சாப்டின்' இணையத் தளத்திற்குள் நுழைந்தீர்களானால் அங்கு கீழ்க்கண்ட அறிவிப்புகளை நீங்கள் காண முடியும்.

1) எதிர்மறை நிரூபனம் கிடைக்காதவரை பெண்களும் கருப்பர்களும் தகுதி குறைந்தவர்களாகவே கருதப்பட்டு வந்தனர்.

2) மனிதர்களின் தகுதியை அளப்பதற்கான தவறுகளற்ற அளவுகோல் எதுவும் இதுவரை கண்டு பிடிக்கப்படாததால் இத்தகைய மதிப்பீடுகளில் மதிப்பிடுபவரின் தன்னிலை ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றது. கருப்பர்கள். பெண்கள் ஆகியோர் குறித்து சமூகத்தில் நிலவும் எதிர்மறைக் கருத்துகளின் விளைவாக இத்தகைய மதிப்பீடுகளால் இவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

3) பன்மைத்துவம் என்பது நமது செயல்பாட்டையும் உற்பத்திப் பொருட்களையும் மட்டுமல்ல, நாம் வாழுகிற சமூகத்தையும் வளப்படுத்துகிறது.

ஆக ஒரு கலப்புச் சமூகத்தில் அமைகிற ஒரு நிறுவனத்தின் திறன் என்பது அச் சமூகத்தின் ஆகத் தகுதி பிடைத்தவர்களைக் கொண்டு செயல்படும் போதைக் காட்டிலும் அச்சமூகத்தைப் பல்வேறு பிரிவுகளின் திறன்களையும் பிரதிநிதித்துவப் படுத்தும்போதே சிறப்பாக அமையும் என்பதை மைக்ரோ சாப்ட் புரிந்து வைத்துள்ளது. எனவே அந்நிறுவனம் ஆட்சேர்ப்பில் 'சிறுபானமையினர் பன்மைத்துவத்திற்கான குழு' என்கிற அமைப்பொன்றை உருவாக்கியுள்ளது. இக்குழு பல சிறுபான்மையோர் அமைப்புகளுடன் தொடர்பு கொண்டு வேலையற்ற இளைஞர்களைத் தேர்வு செய்கிறது. கருப்பு இனச் சிறுபான்மை மாணவர்களுக்குப் பல்வேறு மட்டங்களில் உதவியும் பயிற்சியும் அளித்துத் தேர்வு செய்கிறது. கருப்பு இனச் சமூக, கலாச்சார இயக்கங்கள் பலவற்றிற்கும் மைக்ரோசாப்ட் நிதி உதவியும் செய்கிறது.

ஆனால் இங்குள்ள குருதாஸ் தேஷ்பாண்டேக்களும் நாராயண மூர்த்திகளும், அம்பானிகளும், பிர்லாக்களும் இதை எல்லாம் செய்வார்கள் என இம்மியும் எதிர்பாக்க இயலுமா? இன்றளவும் உயர் தொழில் நுட்பங்களும், கணினி தொடர்பான நிறுவனங்களும் பார்ப்பனர்களின் கோட்டைகளாகவும் தீவுகளாகவும் தானே திகழ்கின்றன?

சுமார் இருபதாண்டுகட்கு முன்னர் மேற்கொண்ட ஒரு ஆய்வின்படி மும்பை, சென்னை, கோவை, அகமதாபாத் போன்ற தொழில் நகரங்களிலுள்ள தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களில் தலித்கள் மற்றும் சிறுபான்மையோரின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்து வருவது வெளிப்பட்டது. 1979-80இல் சந்தோஷ் கோயல் என்பவர் இந்தியாவின் முக்கிய கார்ப்பரேட் நிறுவனங்களில் பணியாற்றும் 3129 அதிகாரிகளைப் பேட்டிகண்டு ஆய்வொன்றை மேற்கொண்டார் இவர்களில் 2082 பேர்களின் சாதி வாரியான தரவுகள் கிடைத்தன. அவர்களுள் 858 பேர் அதாவது 41.2 சதம் பார்ப்பனர்கள். சத்திரியர் 18.5 சதம். வைசியர்கள் 17.9 சதம். சூத்திரர்கள் 4.2 சதம். இன்றும் கூட இதில் பெரிய அளவு மாற்றம் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தனியார் மற்றும் கார்ப்பரேட் நிறுவனங்களில் இட ஒதுக்கீடு என்பதை நாம் இந்தப் பின்னணியில் சிந்திக்க வேண்டும். உலகமயமாகிவரும் சூழலில் பதிவு செய்துள்ள எல்லா உள்நாட்டு / பன்னாட்டு நிறுவனங்களும் ஆட்சேர்ப்பில் பன்மைத்துவத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதைக் கட்டாயமாக்க வேண்டும். அரசு X தனியார் என்பது போன்ற பழைய மாதிரியான வரையறைகளும் முரண்களும் இன்று பொருந்தாது. மக்களின் வரிப்பணத்தில் உருவாக்கப்பட்டுள்ள சாலைகள் உள்ளிட்ட அகக்கட்டுமானங்களைப் பயன்படுத்துகிற எந்த ஒரு நிறுவனமும் இந்தியாவில் இயங்கும்போது சாதி ரீதியான பன்மைத்துவத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என வற்புறுத்துவது நமது கடமை.

அமெரிக்காவிலுள்ள கல்வி நிறுவனங்களும் கூட எவ்வாறு மாணவர் - ஆசிரியர் சேர்க்கையில் பன்மைத்துவத்தைக் கடைப்பிடிக்கின்றன என்பதைச் சந்திரபான் பிரசாத், கெய்ல் ஓம்வெத் முதலியோர் சுட்டிக் காட்டியுள்ளனர். ஹார்வர்ட் பல்கலைக் கழகத்தின் மாணவர்கள், ஆசிரியர்களின் எண்ணிக்கையைக் கட்டுரையின் இறுதியில் கொடுக்கப் பட்டுள்ள அட்டவணையில் காணலாம்.

www.padippakam.com

ஹார்வர்ட் பல்கலைக் கழகத்தின் கையேடு குறிப்பிடுவது :

"பல்கலைக்கழகச் சமூகத்திற்குள் பன்மைத் தன்மை என்பது பல்கலைக்கழகத்தின் கல்வி நோக்கம் மேம்படுவதற்குப் பயன்படுகிறது. இத்தகைய பன்மைத்தன்மையை உருவாக்க, உறுதியாக்க நடவடிக்கை அவசியமாகிறது. பல்கலைக் கழக மதிப்பீடுகள், சனநாயக மதிப்பீடுகள் மற்றும் பன்மைச் சமூக மதிப்பீடுகள் ஆகியவற்றுக்கு உறுதுணையாக உள்ளவை என்கிற அடிப்படையில் சம வேலைவாய்ப்பு மற்றும் உறுதியாக்க நடவடிக்கை ஆகிய நோக்கங்களைப் பல்கலைக் கழகம் அங்கீகரிக்கிறது."

என்கிற பிரகடனத்தோடு மாணவர் மற்றும் ஆசிரியர் சேர்க்கைகளில் பன்மைத்துவம் கடைபிடிக்கப் படுகிறது.

நமது அளவுகோல்களின்படி அமெரிக்கப் பல்கலைக் கழகங்கள் அனைத்தும் தனியார் நிறுவனங்கள்.. சுய நிதி ஆதாரங்கள் கொண்டவை. எனினும் அவை பன்மைத்துவக் கோட்பாட்டை ஏற்றுக்கொள்கின்றன. கருப்பர்கள் மற்றும் இனச் சிறுபான்மையினரின் எண்ணிக்கை வீதத்திற்குச் சரியான வகையில் இன்னும் அங்கே பிரதிநிதித்துவம் கிடைக்கவில்லை என்ற போதிலும் அந்தத் திசை நோக்கி ஆண்டுக்காண்டு முன்னேறி வருவதைப் புள்ளி விவரங்கள் உறுதி செய்கின்றன ஆனால் அவரை நூற்றாண்டுக்கும் மேலாக இட ஒதுக்கீடு கடை பிடிக்கப்படுகிற, முழுக்க முழுக்க அரசு நிதியில் இயங்குகிற நம் நாட்டின் பல்கலைக் கழகங்களைப் பாருங்கள். டெல்லி பல்கலைக் கழகத்தின் 6500 ஆசிரியர்களில் வெறும் 100 பேர் மட்டுமே (1.53%) தலித் ஆசிரியர்கள். இரண்டாண்டுகட்கு முன்பு தமிழ் நாட்டுப் பல்கலைக் கழகங்களில் இட ஒதுக்கீடு நிலை குறித்த உண்மை அறிக்கைகள் வெளிவந்தது நினை விருக்கலாம். எதிலும் இட ஒதுக்கீட்டு அளவுப்படி தலித் ஆசிரியர்கள், ஆராய்ச்சி மாணவர்களின் எண்ணிக்கை இல்லை. போதாக் குறைக்கு பாரதீய ஜனதா கட்சி அரசு ஆராய்ச்சிப் படிப்புகளில் இட ஒதுக்கீடு தேவையில்லை என்ற கருத்தையும் முன் வைத்தது. இட ஒதுக்கீட்டை நிறைவேற்றுவதற்காக புதிய நியமனங்கள் அனைத்தும் தலித்களுக்கு வழங்கப்படும் என டெல்லிப் பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்த போது, சென்ற மார்ச் 12 (2001)ஆம் தேதியன்று 'இளம் கல்வியாளர்கள் கழகம்' என்ற பெயரிலான ஒரு உயர்சாதி அமைப்பு 'தற்கொலை செய்து கொள்ள நேரிடும். இளைஞர்கள் 'கிரிமினல்' களாக மாறுவார்கள். வெளி நாட்டுக்குப் போக வேண்டியதுதான்' என்றெல்லாம் பேசியது நினைவிற் குரியது.

உடனடியாகப் பன்மைத்துவம் கடைபிடிக் கப்பட வேண்டிய இன்னொரு துறை தொடர்புச் சாதனங்கள். அச்சு ஊடகமானாலும், எலக்ட்ரானிக் ஊடகமானாலும் இன்றளவும் முழுக்க முழுக்க உயர்சாதியினரின் தீவுகளாகவே விளங்குகின்றன. திரைப்படத்திலும் கூட தலித்களின் பங்கு மிகமிகக் குறைவுதான். தொலைக்காட்சி அறிவிப்பாளர்கள் எல்லாம் முழுக்க முழுக்க நகர்ப்புற உயர்சாதி நளினங்கள் உள்ளவர்களே நிரம்பியுள்ளனர். தொலைக்காட்சித் தொடர்களிலும், உரையாடல் களிலும் முழுக்க முழுக்க உயர் சாதி, குறிப்பாகப் பார்ப்பன, அடையாளங்களும் உரையாடல்களும் மிகுந்துள்ளதையும் பிதுங்கி வெளிப்படுவதையும் விரிவாக விளக்க வேண்டியதில்லை. இதிலும் அமெரிக்கச் சூழல் விதி விலக்காக உள்ளது குறிப்பிடத் தக்கது. கருப்பு அறிவிப்பாளர்கள், கருப்பர்களின் வாழ்வைப் பிரதிபலிக்கும் தொடர்கள், கருப்பர் இசை முதலிய அம்சங்கள் பெரிய அளவில் இடம்பெறுவதைக் காணலாம். ஒரு மணி நேர தோற்றத்திற்கு ஒரு மில்லியன் டாலர் ஊதியம் பெறுகிற ஒப்ரா வின் ஃப்ரே ஒரு கருப்புப் பெண்மணி.

இந்தியச் சூழலில் ஏன் இத்தகைய நிலை இல்லை? வெறும் சட்ட ரீதியான நடவடிக்கைகள் மட்டுமின்றி வெளியிலுள்ள பொருளாதார / அரசியல் / கலாச்சார அழுத்தங்கள் மூலமாகவே நாம் இந்நிலையை மாற்றியமைக்க முடியும். ஒரு எடுத்துக் காட்டு. அச்சு ஊடகத்தைப் பொருத்த மட்டில் சென்ற சில ஆண்டுகளில் ஒரு குறிப்பிடத்தக்க அளவிற்கு, குறிப்பாகச் சிறப்பு மலர்கள் வெளியிடும் போது, தலித் கட்டுரையாளர்கள் மற்றும் எழுத்தாளர்களுக்கு இடம் கொடுப்பதைக் காணலாம். இது அம்பேத்கர் நூற்றாண்டை ஒட்டி ஏற்பட்ட தலித் எழுட்சி, தலித் இலக்கியம் குறித்த விவாதங்கள் ஆகியவற்றின் விளை பொருள். அதாவது வெளியிலிருந்து கொடுத்த அரசியல் அழுத்தத்தின் விளைவு.

ஆனாலுங்கூட இப்பத்திரிகைகளிலும் சரி, தொலைக்காட்சித் தொடர்களிலும் சரி, தலித் வாழ்வைச் சித்தரிக்கும் எழுத்துகளும் தொடர்களும் இடம் பெறுவதில்லை. அதற்கு இரண்டு காரணங்கள். இந்த நோக்கில் வெளியிலிருந்து நாம் கொடுக்கும் அழுத்தம் போதுமானதாக இல்லை என்பது முதல் காரணம். ஊடகங்களின் பார்ப்பனியத் தன்மையை நாம் மிகவும் கடுமையாக எதிர்த்திருக்க வேண்டும். அவற்றைத் தோலுரிப்பதும், எதிர்ப்பதும் நமது முதன்மையான செயற்பாடுகளில் ஒன்றாக இருந்திருக்க வேண்டும். நாம் இடம பெறுவது என்பதோடு நில்லாமல் நமது அடையாளங்களுக்கு உரிய இடமும் வேண்டும் என நாம் நின்றிக்க வேண்டும்.

இரண்டாவது காரணம் பொருளியல் அடிப்படையிலானது. 250 மில்லியன் தலித் மக்கள் இந்தியாவிலுள்ளனர். பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி ஆகிய நான்கு ஐரோப்பிய நாடுகளின் மொத்த சனத் தொகையைக் காட்டிலும் இது அதிகம். இவ்வளவு பேரும் வாங்கும் திறன் உள்ளவர்களாக இருந்து, அவர்களும் எங்கள் வாழ்வையும் அடையாளங்களையும் வெளிப் படுத்தும் தொடர்களைத்தான் நாங்கள் பார்ப்போம் என்கிற மதிப்பீடுகளை உயர்த்திப் பிடிக்கிற நிலை இருக்குமானால், விளம்பரதாரர்களே தலித், வாழ்க்கைச் சித்திரங்களைத் தொடராக்குங்கள் என்கிற கோரிக்கை எழுப்புவர். அழுத்தம் கொடுப்பர். நமது பாமா, அழகிய பெரியவன், இதயவேந்தன், சாணக்யா முதலானோரின் எழுத்துகளெல்லாம் தொலைக்காட்சிகளில் இடம் பெற்றிருக்கும். தலித்கள் அத்தகைய வாங்கும் திறன் உள்ளவர் களாகப் பொரளாதார ரீதியில் வலுமிக்கவர்களாக இல்லை என்பதோடு அத்தகைய திறன் உள்ளவர்



படிப்பகம்

www.padippakam.com

களையும் கூட பார்ப்பனிய மதிப்பீடுகளைக் கொண்டும், அத்தகைய தொலைக்காட்சித் தொடர்களைக் கொண்டும் திருப்தி செய்து விட முடியும் என ஆணவத்தோடு கருதுகின்றன ஊடக நிறுவனங்கள். அதில் உண்மை இல்லாமலும் இல்லை. நமது மதிப்பீடுகளில் மாற்றம் ஏற்படுகிற அளவிற்கு கலாச்சார மட்டத்திலான போராட்டத்தில் நாம் பின் தங்கியுள்ளதன் விளைவு இது.

போபால் பிரகடனம் வலியுறுத்தும் இதர அம்சங்களாகிய வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தை செயல்படுத்தச் செய்தல், தலித்களுக்கு ஆயுதம் வழங்குதல் முதலானவற்றை விரிவாக விளக்க வேண்டியதில்லை. பொதுச்சொத்து வங்களில் தலித்களுக்குப் பங்கு வழங்க வேண்டும் என்பது பற்றி ஒரு குறிப்பு : இதிலும் மத்தியப் பிரதேச மாநில அரசு ஒரு குறிப்பிடத்தக்க அளவிற்கு முன்னோடியாக இருந்துள்ளது. 1998 மார்ச் 4 அன்று ம.பி. அரசு ஒரு ஆணை வெளியிட்டது. அதன்படி ஒவ்வொரு மாவட்ட ஆட்சியரும் தமது மாவட்டத்தில் உள்ள மேய்ச்சல் நிலத்தின் அளவை மொத்தத்தில் 7.5 சதம் என்பதிலிருந்து 5 சதமாகக் குறைக்க வேண்டும். இதன் மூலம் 1.54 லட்சம் ஏக்கர் நிலம் உபரியாகியது. அவை அனைத்தும் அட்டவணைச்சாதி மற்றும் பழங்குடிக் குடும்பங்களுக்குப் பிரித்தளிக்கப்பட்டது (80,470 பட்டாக்கள் இவ்வாறு வழங்கப்பட்டன) 2001 செப்டம்பர் 11-ஆம் தேதி அன்று மேய்ச்சல் நிலங்களுக்கான உச்ச வரம்பை 5 சதத்திலிருந்து 2 சதமாகக் குறைத்தது ம.பி. அரசு. இதன் மூலம் உபரியான மேலும் ஆறு லட்சம் ஏக்கர்நிலமும் மீண்டும் பிரித்தளிக்கப்பட உள்ளது. இம்முறை நாலு லட்சம் பழங்குடி மற்றும் அட்டவணைச் சாதிக் குடும்பங்கள் பயன்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பஞ்சமி நிலப் போராட்டம் தொய்வடைந்துள்ள நிலையில் தமிழகத்தில், ம.பி. அரசைப் பின்பற்றி உபரி நிலங்கள் குறித்த ஒரு வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் எனவும் அவற்றை அட்டவணைச் சாதி மற்றும் பழங்குடியினருக்குப் பிரித்தளிக்க வேண்டும் என்கிற கோரிக்கையைப் போபால் பிரகடனத்தின் பின்னணியில் நாம் முன் வைக்க வேண்டியுள்ளது.

பிரகடனத்தில் கண்டுள்ள இடுபொருள் வாங்குவதில் பன்மைத்துவம் என்கிற கோரிக்கையை ம.பி. அரசு ஏற்றுக் கொண்டதாக மாநாட்டிலேயே அறிவிக்கப்பட்டது. ம.பி. அரசின் அட்டவணைச் சாதியினர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் கீழ் இயங்கும் 2005 விடுதிகளுக்குத் தேவையான இடு பொருட்களில் 30 சதம் இனி அட்டவணைச் சாதி மற்றும் பழங்குடியினரின் கடைகளிலேயே வாங்கப் படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழகத்திலும் நாம் இத்தகைய கோரிக்கைகளை முன் வைக்க வேண்டியுள்ளது. தலித்கள் மத்தியில் போதுமான கடைக்காரர்கள் இருக்க மாட்டார்களே என்கிற கேள்வி எழலாம். சாத்தியமான நபர்களைத் தலித்கள் மத்தியில் தேர்வு செய்து, அவர்களுக்குத் தேவையான பயிற்சியையும் கடன் தொகையையும் அரசு அளித்து ஊக்குவிக்க வேண்டும். 'கருப்பு மூலதனம்' போல 'தலித் மூலதனம்' என்கிற கருத்தாக்கத்தை நாம் முன் வைத்து இயங்குதல் அவசியம்.

தனியார் நிறுவனங்களில் பன்மைத்துவம் என்கிற கோரிக்கையை இன்று குடியரசுத் தலைவரே முன் மொழிந்துவிட்டார். அரசு பதிவு பெறும் அனைத்து நிறுவனங்களும் பன்மைத்துவக் கோட்பாட்டை ஏற்க வேண்டும். பன்மைத்துவத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஆண்டறிக்கைகளை அளிக்க வேண்டும், கடைபிடிக்காதவர்களின் பதிவும் அனுமதியும் ரத்து செய்யப்பட வேண்டும் என இங்கு நாமும் கோரிக்கைகள் வைத்து இயங்க வேண்டியது அவசியமாகிறது. 'புதிய தமிழகம்' சார்பாக டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் தனியார் நிறுவனங்களில் இட ஒதுக்கீடு என்கிற கோரிக்கையை எழுப்பியிருப்பது வரவேற்கத் தக்கது. பிற இயக்கங்களும் இக்கோரிக்கையை வைத்துப் போராட வேண்டும்.

போபால் பிரகடனத்தை இயக்கவாதிகள் கையில் எடுக்கும்போது சில உண்மைகளைக் கவனத்தில் கொள்வது அவசியம். இந்தப் பிரகடனம் ம.பி. அரசின் முன் முயற்சியில், அதன் கண்காணிப்பில் உருவாக்கப்பட்ட ஒன்று. பங்குபெற்ற தலித் அறிவாளர்களுக்கு என்னதான் முழுக்கருத்துச் சுதந்திரம் வழங்கப்பட்டபோதிலும், அரசு எல்லைக்குள் நின்றே அவர்கள் இந்தப் பிரகடனத்தை உருவாக்க நேர்ந்துள்ளதைச் சற்று யோசித்தால் விளங்கிக் கொள்ள முடியும். அம்பேத்கர் அவர்கள் மீதான மரியாதையைப் பிரகடனம் முழுமையாக வெளியிட்ட போதிலும் அவர் சட்ட பூர்வமான போராட்ட வழி முறைகளுக்கும் சனநாயக வடிவங்களுக்கும் கொடுத்த அழுத்தத்திற்குக் கூடுதல் முக்கியத்துவம் வழங்கியிருப்பது கவனிக்கத்தக்கது.

தலித் விடுதலைக்கான அம்பேத்கரின் அணுகல்முறை என்பது வெறும் இட ஒதுக்கீட்டுடன் நின்று விடுவதல்ல. அதனைத் தனியார் துறையிலும் கேட்பது, மூலதனத்தின் பங்கு முதலிய மட்டங்களில் விரித்தெடுப்பது என்பது வரவேற்கத்தக்கதுதான் என்ற போதிலும், அம்பேத்கரிய அணுகல்முறை என்பது அத்தோடு முடிவடைவதல்ல. வேறு இரண்டு அம்சங்களுக்கு அம்பேத்கர் தனது வாழ்விலும், செயல்பாட்டிலும், எழுத்துகளிலும் முக்கியத்துவம் அளித்தார், அவை :

1. தலித்களுக்கு அரசியல் அதிகாரம்
2. இந்து மத எதிர்ப்பு

போபால் பிரகடனத்தை உருவாக்கியவர்கள் காங்கிரஸ் அரசின் மேடையில் நின்றுகொண்டு இந்தக் கூறுகளுக்கு அழுத்தம் கொடுக்க இயலாத நிலையை நாம் புரிந்துகொள்ளவேண்டும். தலித்களுக்கு பாராளுமன்ற / சட்டமன்ற இட ஒதுக்கீடு மட்டுமே போதாது. தலித்களின் பிரதிநிதிகளை தலித்களே தேர்ந்தெடுக்கும் இரட்டை வாக்குரிமை என்கிற கருத்தாக்கத்திற்கு அம்பேத்கர் கடைசி வரை அழுத்தம் கொடுத்தார். இன்றைய சூழலில் இந்தப் பிரச்சினையை நாம் மீண்டும் விவாதிக்க வேண்டியுள்ளது. இரட்டை வாக்குரிமை அல்லது வேறு சில நாடுகளில் அமுலில் உள்ள சிறுபான்மையினருக்கான விகிதாசாரப் பிரதிநிதித்துவம் முதலான மாற்றுத் தேர்தல் வடிவங்களை நாம் யோசிக்க வேண்டியுள்ளது. போட்டியிட்டவர்களில் அதிக வாக்கு பெற்றவர்களே வெற்றி பெற்றவர்கள் என



படிப்பகம்

www.padippakam.com

அறிவிக்கும் இன்றைய நடைமுறைக்குப் பதிலாக, பெற்ற வாக்குகளுக்கு ஏற்ற பிரதிநிதித்துவம் என்கிற நடைமுறை வருமானால் தலித்கள் பிற கட்சிகளைச் சார்ந்து நிற்க வேண்டிய அவசியம் வராது. அம்பேத்கரியக் கொள்கையில் சமரசம் செய்து கொண்டு ஏதேனும் ஒரு பெரிய அரசியல் கட்சியுடன் கூட்டு சேர்ந்துதான் ஆக வேண்டும் என்கிற நிர்பந்தமும் நேராது. எனவே இது குறித்து ஒரு விரிவான விவாதம் நம்மிடையே உடனடியாகத் தேவை.

அம்பேத்கரின் இந்து மத எதிர்ப்பு என்பது இன்னும் முக்கியமானது. பார்ப்பனியத்தைத் தோலுரிப்பதையும் இந்து மதத்திலிருந்து விலகி நிற்றலையும் அவர் தனது அரசியல் செயல்பாடாகக் கொண்டிருந்தார். ஒரு தலித் விடுதலை பெறுவதற்கு அவரது சுய உறுதியாக்கம் (Self Assertion) முக்கியம். இந்து மதத்தில் இருப்பது, இந்து மத அடையாளத் தைத் தரிப்பது என்பது சுய உறுதியாக்கத்திற்கு எதிராகவே அமையும். வேறெப்போதைக்காட்டிலும் இந்துத்துவப் பாசிசம் தலையெடுத்து நிற்கும் இன்றைய சூழலில் அம்பேத்கர் இந்து மத எதிர்ப்பிற்கும் இந்து மத அடையாளத்தை உதறுவதற்கும் கொடுத்த முன்னுரிமை கூடுதல் முக்கியத்துவம் வாய்ந்ததா கிறது.

போபால் பிரகடனத்தைக் கையில் எடுக்கும் இலக்கியவாதிகள் இந்த அம்சங்களைக் கணக்கில் கொள்வது முக்கியம்.

இறுதியாக ஒரு குறிப்பு : ஒப்பீட்டிற்காக அமெரிக்க நிலைமையை நாம் விரிவாக அலசியுள் ளோம். போபால் பிரகடன உருவாக்கத்திலும் அமெரிக்க உதாரணம் முக்கியமானதாக இருந்துள்ளது. எனினும் அமெரிக்காவிற்கும் இந்தியாவிற்கும் உள்ள ஒரு முக்கிய வேற்றுமை கருதத்தக்கது. அமெரிக்கச் சமூகம் ஒரு இரண்டடுக்குச் சமூகம்; வெள்ளையர்கள் X கருப்புச் சிறுபான்மையினர். இந்தியச் சமூகம் ஒரு மூன்றடுக்குச் சமூகம் ; பார்ப்பன-சத்திரிய-வெள்ளாள ஆதிக்க சக்திகளுக்கும் தலித்களுக்குமிடையில் இங்கே பிற்படுத்தப்பட்டவர்கள் உள்ளனர். தலித் களைப் பொருத்த மட்டில் உள்ளூர் மட்டத்தில் (micro level) பிற்படுத்தப்பட்டோர் எதிரிகளாகவும் பேருரு அளவில் (macro level)பார்ப்பனியம் எதிரியாகவும் உள்ளது. எனவே இங்கு நிலைமை மேலும் சிக்கலாகிறது. தனியார் துறையில் பன்மைத்துவம் என்கிற கோரிக்கையைப் பொருத்த மட்டில் தலித்களைப்போல பிற்படுத்தப்பட்ட வர்களும் பாதிக்கப்பட்டவர்களாக உள்ளனர். தலித்களைக் காட்டிலும் பிற்படுத்தப்பட்டவர்கள் இது குறித்துக் கவலை கொள்வது அவசியம். 'தனியார் துறையில் பன்மைத்துவம்' என்கிற கோரிக்கையில் தலித்கள் பின்னே அவர்கள் அணிதிரள்வது அவசியம்.

## பிரகடனம் (Text)

மத்தியப் பிரதேசத்தில் (இந்தியா) உள்ள போபாலில் 2002 ஜனவரி 12, 13 தேதிகளில்...

"21ஆம் நூற்றாண்டில் தலித்களுக்கான புதிய பாதையை வகுத்தல்" என்னும் பொருளில் நடைபெற்ற போபால் மாநாட்டில், ஒரு மனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

250 மில்லியன் மக்களின் நல்வாழ்வு மற்றும் (சமூக) நீதி குறித்த பிரச்சினைகளை விவாதிப் பதற்கென 2002 ஜனவரி 12, 13இல் நடத்தப்பட்ட போபால் மாநாட்டில் கூடிய அறிவாளிகளும் செயல்வீரர்களுமாகிய நாங்கள்,

"ஒரு அரசு சனநாயகத் தன்மையுடையதாக அமை வதற்கு அந்தச் சமூகம் சனநாயகத் தன்மையுடன் இருப்பது முன்தேவையாகிறது. சமூக சனநாயகம் இல்லாதபோது வெறும் சனநாயகச் சட்டவரைவால் எந்தப் பயனும் இல்லை. உண்மையில் அச்சட்ட வரைவு அச் சமூகத்திற்குப் பொருத்தமற்றதாகவே அமையும்" என்கிற பாபாசாகேப் அம்பேத்கரின் தீர்க்கதரிசனம் மிக்க சொற்களிலும் அவரது சமூக சனநாயக இலட்சியத்திலும் எங்களுக்குள்ள நம்பிக்கையைப் பிரகடனப் படுத்திக் கொண்டு,

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் பொறிக் கப்பட்டுள்ள குடிமைச் சமூகம் குறித்த இலட்சி யங்கள், குறிப்பாக நீதி, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றின் மீது இந்திய அரசின் கடப்பாட்டை அறிவிக்கும் அரசியலமைப்புச் சட்டத் தின் முகப்புரை ஆகியவற்றை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டு,

மனித உரிமைகளுக்கான சர்வதேசப் பிரகட னத்திலும் உலகநாடுகள்அவையால் பிரகடனப் படுத்தப்பட்டு நம்நாட்டால் எற்றுக் கொள்ளப்பட்ட வேறுபல சாசனங்களிலும் நிறுவப்பட்டுள்ள கோட் படுகளுங்கூட மேற்கண்ட கருத்தாக்கங்களுக்கே அழுத்தம் கொடுக்கின்றன என்பதை அறிந்தேற்றுக்கொண்டு, காடுகள் மற்றும் வனப்பொருட்களின் மீது பழங்குடி களுக்குள்ள நியாயபூர்வமானதும் வரலாற்றுபூர்வ மான உரிகைளை ஏற்றுக்கொண்டு.

நாட்டின் வளமிகுந்த உயிரியல் பன்மைத் தன்மையையும், இயற்கை வளங்களையும், பண்பாடு / மரபு ஆகியவற்றையும் காத்து வருவதிலும் பாது காப்பதிலும் பழங்குடிச் சமூகங்களின், குறிப்பாகப் பழங்குடிப் பெண்களின் பங்கை ஒப்புக்கொண்டு,

கருத்துருவாக்கும் எல்லா அமைப்புகளிலும் அட்டவணைச் சாதியினருக்கும் அட்டவணைப் பழங் குடியினருக்கும் உரிய பிரதிநிதித்துவம் உறுதி செய்யப் படுவதின் தேவையையும் ஏற்றுக்கொண்டு.

நாடுவிடுதலையடைந்து 54 ஆண்டுகள் ஆகியும் தலித் சமூகத்திற்கு அடிப்படை மனித உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளதையும், மிகவும் கொடூரமானதும் ஒடுக்கும் தன்மையுடையதுமான விலக்கல்களையும் வேறுபடுத்தல்களையும் அனுபவிப்பவர்களாக அவர்கள் இருப்பதையும் மனதில் நிறுத்தி,

இந்தியாவிலேயே மிகவும் ஒடுக்கப்பட்ட வர்களாக இருக்கும் இவர்களின் ஒட்டுமொத்தமான வளர்ச்சிக்குச் சமூகம் முழுவதும் ஒருமித்துச் செயல் படுவதின் தேவை, குறிப்பாக அரசியல் தலைமை, அதிகாரிகள், அடித்தளச் செயல்வீரர்கள் அகியோ ருக்கிடையே ஒருங்கிணைவு தேவை என்பதை மறுஉறுதி செய்துகொண்டு,


படிப்பகம்

www.padippakam.com

தலித்களுக்குச் சாதகமான கொள்கைகளைச் செயல்படுத்துவதில் பெரும்பான்மையான அரசியல் உருவாக்கங்கள் தயக்கம் காட்டுவதுதான் உண்மை என்ற போதிலும், இந்த நெருக்கடியான சூழலில் நமது போராட்டத்தை முன்னெடுத்துச் செல்கிற பொறுப்பைச் சிந்தையில் நிறுத்தி,

நாட்டு விடுதலையின்போது தயக்கத்துடன் ஏற்றுக்கொள்ளப்பட்ட தலித் பிரச்சினைகள் குறித்த சமூகக் கருத்தொருமிப்பு இன்று கிட்டத்தட்ட தகர்ந்து போயுள்ளதைப் புரிந்துகொண்டு,

தலித்களுக்கு நீதி வழங்கும் நோக்கில் இக்குடியரசின் நிறுவனதந்தையர்கள் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் முகமாக ஒரு புதிய கருத்தொருமிப்பைக் கட்டமைக்க எல்லா மட்டங்களிலும் அறிவுபூர்வமான சனநாயகச் சொல்லாடல்கள் தேவை என்பதைப் புரிந்தேற்றுக்கொண்டு,

சாதி உருவாக்கியுள்ள இறுக்கமான ஏற்றத்தாழ்வுகளையும் வேறுபடுத்தல்களையும் விமர்சனமின்றி ஏற்றுக் கொள்வதன் மூலம் கொடும் வன்முறைக்கும் அதன் நியாயப்பாட்டிற்கும் சாதியே இங்கு காரணமாயிருப்பதை இந்தத் தேச மனப்பாங்கும் பொதுக்கருத்தாடலும் ஏற்றுக்கொள்ளாததையும் புரிந்துகொண்டு,

சனநாயகத்திற்கும் அரசியல்சட்ட எல்லைகளுக்கும் உட்பட்ட போராட்ட வடிவங்களுக்கு பாபாசாகேப் கொடுத்த அழுத்தம் இன்றும் பொருத்தமாக இருப்பதை வலியுறுத்தி,

பாபாசாகேப்பின் விடுதலை இயக்கத்தை முன்னெடுத்துச் செல்வதிலும் நாட்டின் அறிவு நடவடிக்கைகளில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துவதிலும் தலித் அறிவாளிகள் தோற்றுவிட்டதற்காக வருத்தங் கொண்டு,

நாட்டிற்கு உள்ளேயும் வெளியேயும் இயங்கும் இதர விடுதலை இயக்கங்கள் மற்றும் மனித உரிமை இயக்கங்களோடு தலித்கள் பொதுநோக்கு கொண்டு செயலாற்றுவதின் தேவையை ஏற்றுக்கொண்டு,

காலங்காலமாகப் பாதுகாக்கப்பட்டு வந்துள்ள ஒதுக்கல்களையும் விலக்கல்களையும் எந்த ஒரு காத்திரமான இயக்கத்திற்கும், இந்துச் சமூகமும் அரசு / ஊடகம் / தன்னார்வத் துறை ஆகியவற்றிலுள்ள அதன் தொங்குசதைகளும் ஏற்படுத்தக்கூடிய தடைகளையும் எறியக்கூடிய கணைகளையும் பற்றிய உணர்வுடன்,

பெண்கள், குறிப்பாகத் தலித் பெண்கள் நமது சமூகத்தின் ஆக ஒடுக்கப்பட்ட பிரிவாக விளங்குவதையும், சாதி அடிப்படையிலும், மத, மற்றும் தந்தை வழிச் சமூகக் கருத்தியல்கள், நடைமுறைகள் எனப் பல வடிவங்களிலும் அவர்கள் ஒதுக்கப்படுவதைக் கவனத்திற்கொண்டு.

வேறுபடுத்தல்கள், ஒற்றைத் தன்மை, அடையாளப்படுத்தி ஒதுக்குதல், விலக்குதல், சாதியம் ஆகிய தன்மைகளுக்கு எதிராகவும் உள்ளடக்குதல், சமவாய்ப்பு, சிவில் சமூகத்தைச் சனநாயகப்படுத்தல், அதில் பன்மைத் தன்மையை உருவாக்குதல் என்கிற நிலைமைகளுக்கு ஆதரவாகவும், உலகெங்கிலும் மாற்றம் நோக்கி வீசும் காற்றை வரவேற்றும்.

உலக அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சீர்மைகளான முன்னேற்றம், சமத்துவம், நீதி, அமைதி, சமூக ஒத்திசைவு ஆகியவற்றிற்கு இந்நாடு இனிமேலும் ஒரு விதிவிலக்காக அமையாது என்கிற எதிர்பார்ப்புடனும்.

தலித்களின் அடிப்படை உரிமைகளை வென்றடைய ஒன்றிணைந்து செயலாற்றுவதற்காக எங்களை மீண்டும் அர்ப்பணித்துக்கொள்ளும் வேளையில். கீழ்க்கண்ட பிரச்சினைகள் தீர்க்கப்படாவிட்டால் எம் தரப்பில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளும் அரசுத் தரப்பில் மேற்கொள்ளப்படும் ஆக்க நடவடிக்கைகளும் தீண்டாமை, சுரண்டல், ஆகிய கொடுந்தண்டனைகளிலிருந்து இச் சமூகத்தை விடுதலை செய்ய முடியாது என மனப்பூர்வமாக நம்புகிறோம் என இதன் மூலம் மதிப்பார்வத்துடன் அறிவித்துக் கொள்கிறோம்.

எனவே நாங்கள் கோருபவை....

21ஆம் நூற்றாண்டுக்கான 21 அம்சத் திட்டம் :

1. ஒவ்வொரு தலித் குடும்பத்திற்கும் அதன் சமூகப் பொருளாதார நல்விருப்பிற்குப் போதுமான விவாசய நிலம் சொந்தமாவதை உறுதி செய். உபரி நிலம், அரசு ரெவின்யூ நிலங்கள், கோவில் நிலங்கள் ஆகியவற்றைப் பிரித்தளிக்க எல்லாச் சாத்தியமான நடைமுறைகளையும் ஒரு குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் அரசு மேற்கொள்ள வேண்டும்.தேவை ஏற்படின் விவசாய நிலங்களை அரசு விலைக்கு வாங்கி தலித்களுக்கு வினியோகிக்க வேண்டும்.

2. கிராமங்களிலும் நகர்ப்புறங்களிலுமுள்ள பொதுச் சொத்து வளங்களை உரிமைப்படுத்துவதிலும் தலித்களுக்குரிய பங்கு கிடைப்பதற்கு வழி செய்யும் வகையில் சட்டமியற்றி, அதனை உறுதியாக அமுல் செய்ய சட்டபூர்வமாக நீதி பெறுவதைத் தடுக்கும் உள்நோக்கத்துடன் வழக்கு விவகாரங்களை இழுத்தடிப்பதை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் சட்டத் திருத்தம் செய்யப்படவேண்டும்.

3. தலித் விவாசயத் தொழிலாளர்கள் வாழ்வூதியம் பெறுவதற்கும், ஊதியத்தில் பால் வேற்றுமை நீக்கப்படுதல், வேலை உத்தரவாதம், நல்ல வேலைச் சூழல்கள், மக்கள் நல நடவடிக்கைகள் முதலான உரிமைகளைப் பெறுவதற்கும் உரிய சட்டத்தை இயற்றி நடைமுறைப்படுத்து. மீறுகிறவர்களுக்கு உரிய தண்டனைகள் கிடைக்க உறுதி செய்.

4. தலித் அல்லாதவர்களால் அபகரிக்கப்பட்டுள்ள ஒடுக்கப்பட்ட வர்க்கங்களின் நிலங்களை ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் கண்டறிவதற்கும், சட்டவிரோதமாக இந்நிலங்களை இதுகாறும் பயன்படுத்தி வந்ததற்காக அவர்கள் செலுத்த வேண்டிய இழப்பீட்டுத் தொகையை நிர்ணயம் செய்வதற்கும், உரியவர்களுக்கு இந்நிலங்களைத் திருப்பி அளிக்கும் வகையில் அவற்றின் ஆரம்ப உரிமையாளர்களையும் அவர்களின்

www.padippakam.com

வாரிசுகளையும் அடையாளம் காண்பதற்கும், சட்ட விரோத ஆக்கிரமிப்பாளர்களுக்கெதிராக வழக்குத் தொடர்வதற்காக சிறப்பு நீதி மன்றங்களை அமைத்து, அவற்றிலுள்ள வழக்குகளை விரைவுபடுத்தி, உரிய தண்டனைகள் வழங்குவதற்கும் தேச அளவிலும் மாநிலங்கள் அளவிலும் சட்டபூர்வமான குழுக்களை அமை.

5. பழங்குடியினரிடமிருந்து அபகரிக்கப்பட்ட நிலங்களை அவர்களுக்கு மீட்டுத்தர உறுதிசெய். காடு மற்றும் வனப்பொருட்கள் மீதான அவர் களின் உரிமையை மீட்டுக்கொடு. அவர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கு. மறுவாழ்வுத் திட்டங்களை அமுல் செய். தமது நிலங்களையும் காடுகளையும் லாபகரமாகப் பயன்படுத்தும் வகையில் அவர்களுக்கு மூல வளங்களை வழங்கி அவற்றைப் பயன்படுத்தும் திறன்மிக்கவர்களாக அவர்களை உருவாக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்.

6. அட்டவனைச் சாதியினர் மற்றும் பழங்குடியினரின் எண்ணிக்கை வீதத்திற்கு ஏற்றவாறு பங்களிக்கும் வகையில் மூலதனத்தைச் சனநாயகப் படுத்து. தேவையான முதலீட்டு ஆதாரங்களுடன் சந்தைப் பொருளாதாரத்தில் பங்கு பெறவும், சந்தை நடவடிக்கையில் தமது திறனைவளர்த்துக்கொள்ளவும் வழி செய்யும் வகையில் வரவு செலவு திட்டத்தில் அட்டவனைச் சாதியினர் மற்றும் பழங்குடியினருக்கு நிதி ஒதுக்கீடு செய்.

7. கண்ணியம் மிக்க விடுதலையை தலித் மக்களுக்கு உறுதிப்படுத்தும் வகையில் கொத்தடிமை ஒழிப்புச் சட்டத்தை (1976) கறாராக அமுல் படுத்து; குழந்தை உழைப்பை முடிவுக்குக்கொண்டு வா. இதற்குரிய வகையில் தேவையான சட்டங்களில் திருத்தங்கள் செய்.

8. எல்லாக் குடிமக்களுக்கும், குறிப்பாக அட்டவணைச் சாதியினருக்கும் பழங்குடியினருக்கும், தவிரவும் குறைந்த வருமானம், மத ரீதியில் வேறுபடுத்தாமை என்கிற அடிப்படைகளிலும் கீழ்க்கண்ட உரிமைகள் கிடைக்கும் வகையில் அரசியலமைப்புச் சட்டம் வழங்கும் அடிப்படை உரிமைகளில் 21ஆம் பிரிவைத் திருத்து. ஆண், பெண். இருபாலருக்கும் சமமான உடல் நலம் மற்றும் நல்வாழ்க்கைக் கான உரிமைகள், உணவு, பாதுகாப்பான குடிநீர், உடை, இருப்பிடம், பொது நலம். மருத்துவ நலம், சமூகப் பாதுகாப்பு, சமூக சேவைகள் ஆகியவை இதில் உள்ளடங்கும். மற்றும் வாழ்க்கை ஊதியத்திற்கான உரிமை; அய்ந்து ஏக்கர்கள் விவசாய நிலத்தைச் சொந்தமாக வைத்துக்கொள்ளுதல் அல்லது லாபகரமான வேலை வாய்ப்பு உரிமை.

9. எல்லா தலித்களுக்கும் உயர் தரமான கல்வியைக் கட்டாயமாகவும் இலவசமாகவும் உடனடியாக வழங்கு. படிக்காதவர்களது எண்ணிக்கை வீதத்திற்கேற்ப நிதி ஒதுக்கீடு செய். பள்ளிக்குச் செல்வதால் குழந்தை உழைப்பின் மூலம் கிடைக்கும் வருமானத்தை இழந்த குடும்பங்களுக்கு ஈட்டுத் தொகையை உறுதி செய். கல்வி உதவித் தொகைகளின் அளவைக் கூட்டு. அட்டவணைச் சாதியினர் மற்றும் பழங்குடியினருக்கான பள்ளிகளின் அகக்கட்டுமான வசதிகளை மேம்படுத்து. சந்தைக்கேற்ற தொழில் மற்றும் தொழில் நுட்பக் கல்வியை அவர்களுக்கு வழங்கு.

10. பொதுத்துறை மற்றும் தனியார் துறையைச் சேர்ந்த எல்லாக் கல்வி நிலையங்களிலும் தொடக்கக் கல்வி முதல் தொழில் நுட்பக் கல்வி வரையிலும் இட ஒதுக்கீட்டைக் கட்டாயமாக்கு. அட்டவணைச் சாதி மற்றும் பழங்குடியைச் சேர்ந்த குறைந்த வருமானம் உடையவர்களின் குழந்தைக்கும் தரம்மிக்ககல்வி அரசாங்கச் செலவில் வழங்கப்பட வேண்டும். மாணவர் சேர்க்கையில் ஒவ்வொரு ஆங்கில வழிப்பள்ளியும் பன்மைத் தன்மையைக் கடைபிடிக்க வேண்டும்.

11. அட்டவணைச் சாதி மற்றும் பழங்குடிப் பெண்களைப் பெண்களுக்குள்ளேயே தனிப்பிரிவாக ஏற்றுக்கொள். மக்கள் தொகை அறிக்கைகளில் தலித் பெண்கள் குறித்த தனிப் புள்ளி விவரங்களைக் கணக்கெடுத்துக்கொடு. நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டதற்கான அறிக்கைகள், முன்னேற்ற அறிக்கைகள் ஆகியவற்றைத் தனியாக வழங்கு. வளர்ச்சித் திட்டங்கள், சந்தை நிறுவனங்கள், நிதி ஒதுக்கீடு, கல்வி / வேலை வாய்ப்பு / மருத்துவ நல வசதிகள் ஆகிய மைய நீரோட்ட நடவடிக்கைகளில் அட்டவணைச் சாதி மற்றும் பழங்குடிப் பெண்களையும் இணைக்கும் வகையில் தேசிய அளவிலும் மாநில அளவிலும் திட்டங்களை உருவாக்கு. அட்டவணைச் சாதி மற்றும் பழங்குடியினருக்கான தேசிய மற்றும் மாநில ஆணையங்களும் தங்களின் ஆண்டு அறிக்கைகளில் அட்டவணைச்சாதி மற்றும் பழங்குடிப்பெண்களின் நிலை குறித்து ஆய்வு செய்து அறிக்கைகள் வெளியிடுவதைக் கட்டாயமாக்கு.

12. அட்டவணை மற்றும் பழங்குடிச் சாதியினர் மீதான வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் (1989) மற்றும் 1995ஆம் ஆண்டு விதிகள் ஆகியவற்றை இச்சட்ட வரிகளின் தொனி சிதையாமல் கறாராக அமுல்படுத்து. குறிப்பாகத் தலித் பெண்கள் மீதான வன்கொடுமைகளில் இச்சட்டத்தை அமுல் செய். சாதிச் சண்டைகளைப் பற்ற வைக்கும் ஆதிக்க சாதித் தலைவர்கள், அவர்களது எடுபிடிகள் மற்றம் தலித்களுக்கெதிரான வன்முறைகளில் அவர்களுக்கு உடந்தையாக இருக்கும் காவல்துறை அதிகாரிகள் ஆகியோர் மீது இச்சட்டத்தின்படி வழக்குத் தொடர். சமுதாய ஆதரவையும் பாதுகாப்பையும் பெற்று சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிக்கும் வாய்ப்புள்ள ஒடுக்குமுறையாளர்களுக்குச் சமுதாய ரீதியிலான கூட்டுத் தண்டனை வழங்குவதற்கான முறை ஒன்றுஉருவாக்கப் படுதல் வேண்டும்.

13. பல்கலைக் கழகங்கள், கல்வி சார்ந்த நிறுவனங்கள், பிற சுயாட்சி உரிமை பெற்ற நிறுவனங்கள், பதிவு செய்யப்பட்ட அமைப்புகள் என இந்தியாவிலுள்ள எல்லாப் பொது நிறுவனங்களிலும் அட்டவணைச் சாதி மற்றும் பழங்குடியினருக்கு உரிய பிரதிநிதித்துவம் வழங்குவதன் மூலம் அவற்றில் பன்மைத் தன்மையை உறுதி செய். இத்தகைய உறுதியாக்க நடவடிக்கையை அமுல்படுத்தாத நிறுவனங்களுக்கு அரசின்



படிப்பகம்

www.padippakam.com

அறிந்தேற்பையும் நிதி உதவியையும் ரத்து செய்ய வேண்டும். எல்லாத் தனியார் தொழில் நிறுவனங்களும், கார்ப்பரேட் நிறுவனங்களும் தொழிலாளர்களின் பன்மைத் தன்மை என்கிற கருத்தை ஏற்றுக்கொண்டு உடனடியாக நடைமுறைப் படுத்த வேண்டும்.

14. மத்திய, மாநில வரவு செலவுத்திட்ட அறிக்கைகள் அனைத்திலும் அட்டவணைச் சாதி மற்றும் பழங்குடியினரின் சனத்தொகை வீதத்திற்கேற்ப நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதை உறுதிப்படுத்து. இப்பிரிவினருக்காக ஒதுக்கப்பட்ட தொகையைச் செலவழிக்காதவர்கள் மீதும் வேறு காரணங்களுக்காகச் செலவிட்டவர்கள் மீதும் தண்டனை நடவடிக்கைகளை உறுதி செய்.

15. அரசு மற்றும் தனியார் துறை நிறுவனங்கள் ஒவ்வொன்றும் இடுபொருள் வாங்குவதிலும், விற்பனையாளர்கள் நியமிப்பதிலும் பன்மைத் தன்மையைக் கடைபிடிக்கவேண்டும். அதாவது சமூக ரீதியாக அனுகூலமற்ற நிலையில் உள்ளவர்களின் வணிக நிறுவனங்களில் இடுபொருட்கள் வாங்க வேண்டும்; பொருள்கள் மற்றும் பணித் துறைகளின் வினியோகஸ்தர்களாக அவர்களை நியமிக்க வேண்டும்.

16. அட்டவணைச் சாதியினர் மற்றும் பழங்குடியினரைப் பாதுகாக்கிற முழுப் பொறுப்பையும் அரசு ஏற்க வேண்டும். தலித்துகள் மீதான வன்முறைகள் நடைபெறக் கூடிய பகுதிகளை அடையாளம் கண்டு அங்கு படைகளை நிறுத்தி வைக்கவேண்டும். அத்துடன் வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தில் கண்டுள்ளபடி அட்டவணைச் சாதி மற்றும் பழங்குடியினருக்குத் தற்காப்புக்காக ஆயுதங்கள் வைத்திருப்பதற்கான உரிமங்களை வழங்கு. கிராமங்கள் தொடங்கி எல்லா மட்டங்களிலும் தலித்கள் மத்தியில் தற்பாதுகாப்புக் குழுக்களை உருவாக்குவதைக் கட்டாயமாக்கு. தம் மீது வன்கொடுமைகளையும் குற்றங்களையும் இழைப்பவர்களுக்கெதிராக தற்காப்பிற்கு ஆயுதங்களைப் பிரயோகிப்பதற்குத் தலித் பெண்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளி.

17. மனிதர்களைக் கொண்டு அவர்களின் கைகளால் மலம் நீக்கும் இழிவான செயலை அதிரடியான நடவடிக்கை மேற்கொண்டு உடனடியாக நிறுத்து. அவர்களுக்கு மறுவாழ்வளித்தல், தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் வகையில் மாற்று வேலை வாய்ப்புகளையும் வளர்ச்சித் திட்டங்களையும் செயல்படுத்து. 'மலம் நீக்குவதற்கு மனிதர்களைப் பயன்படுத்துதல் மற்றும் உலர் கழிப்பறைகளைக் கட்டுதல் (தடுப்புச்) சட்டத்தை (1993)' மீறுகிறவர்கள், குறிப்பாக இச்சட்டத்தை மோசமாக மீறும் ரயில்வே, பாதுகாப்பு, முனிசிபாலிடி ஆகியவற்றின் பொறுப்பாளர்கள் மீது வழக்குத் தொடர்.

18. அட்டவணைச் சாதியினர், பழங்குடிகள் மற்றும் சலவையாளர்களுக்கான தேசிய மற்றும் மாநில அளவிலான ஆணையங்களின் ஆண்டறிக்கைகளைப் பாராளுமன்றமும் சட்டமன்றங்களும் அதற்கு அடுத்த ஓராண்டுக்குள் விவாதிக்க வேண்டும் என்பதைச் சட்டபூர்வமாக்கு. இந்த ஆண்டறிக்கைகளும், நடவடிக்கை மேற்கொண்டது குறித்த அரசு அறிக்கைகளும் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்படுவதை உறுதி செய்.

19. பொதுத்துறைகளிலும் அரசு நிறுவனங்களிலும் கடைபிடிக்கப் படுவதைப்போல தனியார் துறைகளிலும் கார்ப்பரேட் நிறுவனங்களிலும் இட ஒதுக்கீடு செய்வதைக் கட்டாயமாக்கு. பல்வேறு பட்ட துறைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் தலித்களின் தகுதிகளையும் திறன்களையும் வளர்த்தெடு.

20. நீதித்துறையிலும் பாதுகாப்புத் துறையிலும் அட்டவணைச் சாதி மற்றும் பழங்குடியினருக்கான இட ஒதுக்கீட்டுக்கொள்கையை நிறைவேற்று. நீதித் துறையில் நியமன முறையை மாற்றி எல்லாப் பணி அமர்த்தல்களையும் வெளிப்படையாக்கு.

21. கடந்த 25 ஆண்டுகளில் இட ஒதுக்கீடு நடைமுறைப்படுத்தப்பட்டது. குறித்த வெள்ளை அறிக்கை ஒன்றைக் கொண்டுவந்து அதைப் பாராளுமன்றத்திலும் சட்டமன்றத்திலும் விவாதத்திற்கு வை. தலித்துகளுக்கான இட ஒதுக்கீடு பூர்த்தி செய்யப்படாமல் நிலுவையிலுள்ள காலிப் பணியிடங்களைத் தலித்களைக் கொண்டு ஒரு போர்க்காலத் துரிதத்துடன் உடனடியாகப் பூர்த்தி செய்.

| | மருத்துவத்துறை | | மற்ற துறைகள் | |
|---|---|---|---|---|
| | 1994 | + 1999 | 1994 | + 1999 |
| **மொத்த ஆசிரியர்கள்** | **7131** | **8402** | **2016** | **2062** |
| பெண்கள் | 2154(30.20%) | 2280 (38.6%) | 455 (22.56%) | 508 (24.63%) |
| கருப்பர்கள் / / இதர சிறுபான்மையினர் | 681 (9.54%) | 1150 (13.68%) | 246 (12.2%) | 282 (13.67%) |
| **பயிற்சியாளர்கள் / ஆராய்ச்சியாளர்கள்** | **5192** | **5900** | **566** | **651** |
| பெண்கள் | 1894 (36.5%) | 2280 (38.6%) | 153 (27%) | 183 (28.1%) |
| கருப்பர்கள் / / இதர சிறுபான்மையினர் | 1574 (30.31%) | 2210(37.5%) | 160 (28.3%) | 221 (33.9%) |


படிப்பகம்

www.padippakam.com



# திறப்பு

*—தமிழ்மணவாளன்*

**கா**ற்றுக்குக் கறுப்புமை பூசியது போலிருந்தது இருட்டு. என்னை நானே காணமுடியாத இருட்டின் பயணத்தில் கால்கள் பரபரப்பாய் அடியெடுத்து வைக்கின்றன. காலில் மிதிபடும் சிறிய சருகுகூடப் பேரதிர்வாகிக் கலைத்துவிடக்கூடிய நிசப்தம்வெளியெங்கும் உறைந்து கிடந்தது. ஒளியும் ஒலியுமற்ற அந்தக்கும்மிருட்டுச் சூழல் உருவாக்கிய அசாதாரணத்தை அரூபக்கவளங்களாய் விழுங்கியபடி நடந்து கொண்டிருந்தேன்.

ஒரு கட்டத்தில் பயணம் என்னையொரு வாய் பிளந்த குகைப்பாதைக்குள் இழுத்துக்கொண்டது. கரிய இருட்பாம்பாய் நீளும் குகைப்பாதை. அடர்ந்த மலையை நீள் வெட்டாய்க் குடைந்தாற்போல் அதன் உள்வாங்கல். இறுகிக்கிடக்கும் மனசைக்குடைந்து, தகர்ந்த கல்லும் மண்ணும் விலக்கி, வெளிப்போதலின் சாத்தியம் உருவாகும் போலொரு தொலைந்த நம்பிக்கை.



இருட்டைத் துழாவும் பார்வையில் தொலைவின் எல்லைக்கப்பால் திடீரென ஒரு வெளிச்சக்கோடு. அதைப்பார்த்த மாத்திரத்தில் துணுக்கென்று அச்சம் படர்ந்தது. அதுவே ஒரு முரணாய் ஆச்சரியப்படவைத்தது. வெளிச்சம் எப்போது அச்சத்தின் நிழலாயிற்று? எப்போது நெருப்புத்தாளில் பற்றிய 'கறுப்புக்கோடாய் உருமாறிற்று?

அச்சம் பற்றி சற்று அசைபோடத்தோன்றுகிறது. அது உருவாகும் காரணம் எப்போதும் துல்லியப்பட்டதாய்த் தெரியவில்லை. உள்ளூறும் அச்சத்திற்கு, தருணத்தின் விளைவுகளில் மட்டுமின்றி, பின்னோக்கிய பெருங்காலத்தின் நீட்சியிலும்கூடக் காரணங்கள் வேர்கொண்டிருக்கக் கூடும்.

பிறக்குமுன் கர்ப்பவாழ்க்கை ஓர் இருட்குளம் தான். பிறந்தபின் வெளிச்சத்தைக் கண்டுணரும் தருணம் எப்படி வசப்படுகிறது? ஒற்றைப் புள்ளியி லிருந்து புலன்கள் கிளைப்பதெப்போது? கிலுகிலுப்பையை ஆட்டினால் குழந்தை பார்த்துச்சிரிக்கிறது. சப்தம் அதை வசீகரிக்கிறது. வண்ணங்களை உள்வாங்கிக்கொள்ளும் தருணங்கள் சந்தோஷத்தின் மத்தாப்புகளாகின்றன. வெளிச்சம் வண்ணங்களாகின்றன. பிள்ளை தாய்பார்த்துச் சிரிப்பதும் அழுவதும் வெளிச்சத்தின் நுகர்வாகிப் பின் நுகர்வின் வெளிச்ச சாட்சியாகத்தான். ஆயினும் அதன் முதல் அறிமுகம் குழந்தைமையின் அறிதுயில் உறைதலின் ரகசியக் குறிப்பேட்டில் ஒளிந்து கொள்கிறது. இருட்டிலிருந்தே வெளிப்போந்தாலும் வெளிச்சமே இருட்டின் பிரக்ஞையாகிறது.

வெளிச்சத்திற்கும் இருட்டுக்குமான உறவென்ன? வெளிப்படையாய் உணரப்படுவதைப்போல் எதிர்மறைதானா? இருட்டின் உரிதலே வெளிச்சமெனில், எது வெளிச்சத்திலிருந்து இருட்டுக்குமாறும் கணமாகிறது? இருளை எதிர்மறையாக்குவதால்தான் இருளும் இருளினூடுமானபதிவுகள் சாட்சியம் புதைக்கும் மௌனங்களாகின்றனவா? வெளிச்சத்தின் புலர்தல் தான் அதற்கான மதிப்பும் அங்கீகாரமுமா?

இந்த விசாரத்தை முந்திக்கொண்டு தூரத்து வெளிச்சக்கோடு மெல்ல மெல்ல நெருங்குவதாய்த் தோன்றியது. அதன் நெருக்கத்தை என் நடைமட்டுமே சாத்தியப்படுத்தியிருக்க முடியாது. எனில் வெளிச்சமும் என்னை நோக்கி வந்துகொண்டிருக்கவேண்டும். இப்போது அதன் தோற்றம் தீக்கயிற்றை மிதக்கவிட்டாற்போல சிற்றலையாடியது.

தூரம் குறையக்குறைய ஒளிக்கோடு மெல்ல மெல்ல உப்பி, உடைந்து, தீப்புள்ளிகளாயின. என் அச்சமும் அவ்வாறே புள்ளிகளின் வியாபகமாய் மயிர்க்கால்களில் 'சுருக்' கிட்டது. ஒரு நிதானத்தில், ஏந்திய தீப்பந்தங்களோடு ஒரு கூட்டமே முன் நகர்வதாய் அதன் வியாபகச் சித்திரம் முழுமையை எட்டிக்கொண்டிருந்தது.

அச்சத்தினூடே மனம் அசைபோட்டுக்கொண்டுதான் இருக்கிறது. ஒருவேளை அதுவே என் மீட்சிக்கான முயற்சிகள் போலத் தோன்றியது.

வித்தியாசமானதொரு வெளிச் சமாய் அறிமுகமான சிறுவயது ஞாபகம் ஒன்று. அது வக்கீல் வீட்டுக்கல்யாணம். கிராமத்தில் ரொம்பப் பிரசித்தம். ஊருக்குள் மின்சாரம் நுழைந்த சமயமோ அல்லது ஜெனரேட்டர் கைங்கர்யமோ, பிரம்மாண்டமான பந்தலில் வரிசையாகத் தூண்களெங்கும் டியூப் லைட்டுகள் கட்டப்பட்டிருந்தன. வெள்ளை வெளேர் என்று வாழைத்தண்டு விளக்குகள் எரியத்தொடங்கின. ஒருசேர இருபது முப்பது டியூப் லைட்டுகள் எரிய, அந்த இரவு கிராமமே வித்தியாசமாய் வெளிச்சமானது. இவ்வளவு அழகாக வெளிச்சத்தை வடிவு செய்ய முடியும் என்பது லாந்தர் கண்களுக்கு நம்பமுடியாத ஆச்சரியமாயிருந்தது. இளம்பிராயத்து எதிர்பால் ஸ்பரிசத்தில் கிடைக்கும் முதல் கிளுகிளுப்பைப் போல் நினைவில் சிரித்தது அந்த வெளிச்சம்.

வெளிச்சம் எப்போதும் நம்பிக்கையின் சின்னம். சூரியன் வணங்கப்படுவதன் பொருள் அதுதானோ? நாளின் செயல்பாடு சூரிய சாட்சியாகத்தொடங்கினாலும், அதன்பிறகு அது தொடரத்தான் செய்கிறது. நாளின் நீட்சியாக இரவைக்கடந்துதான் பொழுதின் சுழற்சிகள் இயல்பில் சாத்தியமாகின்றன.

தீப்பந்தக்காரர்கள் யாரெனத் தெரியவில்லை. அவர்கள் பயணம் எதற்கென்றும் யூகிக்க முடியவில்லை. அத்தனைபேருக்கெதிரே தனியனாய் நான் என்ற உணர்வு நெஞ்சை 'டொக் டொக்' கென்று தட்டிக்கொண்டிருந்தது. அவர்கள் ஆயுதபாணிகளா, அல்லவா என்பது கூட முக்கியமாகப் படவில்லை. எனக்கான ஆபத்து தீப்பந்தமேந்தி வருகிறதா



படிப்பகம்

www.padippakam.com

என்பதுதான் கொக்கியமாக இறங்கி இருட்டுக்கும் வெளிச்சத்துக்குமான ஒரு யுத்த வியூகம்போல வளைத்தது.

நோயுற்ற குழந்தையின் சந்தோஷ அசைவுபோல அப்போது கண்ணாமூச்சி ஆட்டம் நினைவுக்கு வந்தது. இருட்டுக்கும் வெளிச்சத்துக்குமான ஆட்டம். விலகி ஓடும் வெளிச்சப்புள்ளிகளை கைகளை நீட்டித் துழாவிப்பற்றிக்கொள்ளத் துடிக்கும் இருட்டின் முயற்சி. விளையாட்டின் மறைவில் வினயம் எப்போதும் தன் இருட்குடையில் காத்துக்கொண்டுதான் நிற்கிறது.

இத்தனை நாளும் நம்பிக்கை தருவ தாயிருந்த வெளிச்சம் இந்தக் கணத்தில் அச்சம் உமிழ்வதாய் முரண்பட்டதில் கலவரக்கிடங்கானது மனம். என்னைச் சுற்றிலும் அபாயம் வியூகம் அமைத்துக் கொண்டாற் போலவும், அபாயமும் நானும் ஒருவரையொருவர் குறிவைத்து நெருங்கும் ஆட்டக்காரர்கள்போலவும் நான் அந்த ஆட்டத்துக்கு நிர்பந்தமாய்த் தள்ளப்பட்ட ஆட்டுக்குட்டிபோலவும் ஒருபதற்றம். இருட்டின் பயணத்தில் கொண்டிருந்ததைரியம் ஒருவகைகட்டாயத்தின் பேரில் பெறப்பட்டதாகும். எதிர்கொள்ளப் போவது என்ன வென்று தெரியாதவரை தொடரும் தைரியம் அது. எனினும் பல தருணங்களிலும் அவ்வகை தைரியமே வாழ்வின் கட்டாயமாகிறது.

அருகில் வந்துவிட்டன தீப்பந்தங்கள். சில்லிட்ட உடம்பில் வியர்வை சுரந்த போது, தீப்பந்தங்களோடு அவர்களும் தெரிந்தார்கள் - என்னைப்போல் மனிதர்கள்.

என்னை அவர்கள் கடந்த போது தான் கண்டேன் எனக்கு முன்னால் ஒரு பள்ளம் வெட்டப்பட்டுக் கிடந்ததை.

இது எப்படி இங்கே! என்னுள் நான் இதுவரையும் பறித்துக்கொண்டிருந்த பள்ளம் அது. அச்சமும் அவநம்பிக்கையும் அடிபட்டு வீழ்ந்தகணத்தில் என் உள்ளிருந்து எகிறிக்குதித்து என் பாதையில் விழுந்துவிட்ட பள்ளம், 'தாண்டு' என்னும் தண்டனைக் குரலோடு.

எனக்குப்பின்னால் தீப்பந்தங்களோடு அவர்கள் போய்க்கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவன் மட்டும் மீண்டும் என்னைநோக்கி ஓடிவந்து தன் பந்தத்தை என்கையில் திணித்துவிட்டு, "பார்த்துப் போ" என்று தட்டிக்கொடுத்தவனாய், ஓடிச்சென்று அவர்களோடு சேர்ந்து கொண்டான்.

வெட்கம் என்னைத் தின்றது, வெளிச்சம் தன் நன்றியைக் கேட்டுப் பெறுவதில்லை என்பதால். ●

# எரிந்த காட்சி... எரியாத காட்சி

I. சுவாச ஊற்று பொங்கி விரல்களின் விரல்தொடும்
உயிரின் பிற உறுப்புகள் விரும்பி விழிக்கும்
கனவுக்குடில்கள் நொறுங்கிய
பூமியின் விசைவழியில்,
பிதுங்கி வான்குத்தும் நிலத்தின் முனையில்
நிலவு தேயும்
கீரல் அற்ற நட்சத்திரவனம் எரியும்
புகை மரண ஊர்வலம் மிதக்கும்
பதிவை நகர்த்தியபடி நீர்த்திரை நகரும்
கறை கன்னத்தில் கால் எத்தி தேடுமொரு
நாளைப் பொழுதில் கண்ணீரும் இருக்கும்
அக்கணம் ஒட்டும் ஈரம் இதயத்தாளின் இறுதி
பக்கத்தின் மூலையில்...
இன்னும் புரியாத
சுவாச ஊற்று பொங்காத விரல் தொடாத
உயிரின் பிற உறுப்புகள் விரும்பா
வழிப்பிணம் எரியும் சுடுகாட்டருகில்
எப்போதும் திரியும் எல்லோர் காற்றும்...

II. நெலம் மடக்கிப்போட்ட
நாள் முதலா
வேலிகாத்தான் வளக்க
ரொம்ப யோசிச்சும் முடியல...

தூரமா வானத்துக் கீழாண்ட
யாரோ ஓட்டி வச்சிட்டாப்ல
எப்போதும் தெரியுது மல ...

பேக்டரி கட்ட
யாரும் வர மாட்டாக
ஏன்னா, சேரில அஞ்சி
ஊருல பத்து குடிசங்க...

குருரு வந்தா பறவ வரும்...
எல்லாம் கெடைக்கும்
தூசு தும்பு போத்திக்காம...

விமானம் போவும் போது
பாத்து சிரிப்பேன்...
சீக்கிரம் குடிச போடணும், ஆசதான்...

ஆனாங்காட்டி....
பறப்பய குடிசய தாண்டி
பாத்தயான்னு கேப்பாகளோ?
எரிப்பாகளோ...?

ஊரு சனங்களுக்கு வரப்போவுதாம்
என் நெலத்துக்கு மேலாண்ட
புது சுடுகாடு.

III. மலம் அள்ளிய கை கழுவி
சாப்பிட்ட முனிமக்கா
கைகளிலும் சாம்பார் வாசம்.

–கவின்



படிப்பகம்

www.padippakam.com

மதிப்புரை :

# அம்பையின் அரசியல் காழ்ப்பும் விருப்பும்

**(காட்டில் ஒரு மான்-ஐ முன்வைத்து)**

*— காசி மாரியப்பன்*

'காட்டில் ஒருமான்' எழுதிய அம்பையின் கதைகள் கருத்தைச் சுமக்கும் கதைகள் என்ற நண்பரின் அபிப்பிராயத்தோடு இதைத் தொடங்கலாம்.

## I

பாலியல் பற்றிப் பேசுவதற்கென்று தனித்துறையாக அகத்திணை இருந்தாலும் கூட வெள்ளி வீதியார், ஆண்டாள் எனச் சில பெண்களால்தாம் உணர்வுகளைச் சொல்லமுடிந்தது. அம்பை வெளிப்படுத்துவதோ தைரியமான காமம். 'முத்துக்குமரனை அணைத்து திண்ணையில் கிடக்கவிரும்பும் இறுக்கி முடுக்கப்பட்டு அதிர்வுறும் காமம்.' அம்பை காட்டும் திருமகளுடையது (84) அரவணைப்பதற்குமேல் ஏதுமில்லை குடும்ப எழுத்தாளர்களுக்கு. தான் விரும்பும் ஆணின் பிருஷ்ட அளவுபற்றி எழுதுவது அம்பையால் மட்டுமே முடிந்திருக்கிறது 'பிதுங்கி வழியாமல் சற்று தொள தொளத்தது போல, அதில் மடிப்பு விழச் செய்யும் பிருஷ்டங்கள். ஆண்களுக்குப் பின்பாகம் முறுக்கிக்கட்டினாற் போல் அமுங்கி இருக்கவேண்டும்," என்று உறுப்புகளின் மேடு பள்ளங்கள் குறித்த பதிவுகளை முன் வைக்கமுடிகிறது. 'வாடி உலர்ந்து போன பழம் போல லேசாகக்கிடந்த மென் சிவப்பு ஆணுறுப்பைச்' சொல்ல முடிகிறது(29).

ஆண்மை(?)யை நிர்ணயிக்கும் கத்திபோன்று 'கல்லாய் உறைந்து யோனியைச் சிதைக்கும். ஆண் குறி அம்பையால் இகழப்படுகிறது. மென்மையான 'மொட்டுப்போன்ற குறிகள்' மீது எதிர்ப்பேதுமில்லை. மென்மை X வன்மை என்ற இருமைகளின் குறியீடுகளாக இவற்றைக் குறுக்கிவிட முடியவில்லை. 'மெல்ல உருப்பெறும் முலைகள்' அங்கவை, சங்கவை எனப் பெயர் பெறுகின்றன (77).

'கட்டுடைக்கும்' காலத்தில் கொட்டை இல்லாத மகவுகளே தமிழ் எழுத்தில் அதிகம். ஆண்களின் கொட்டைகளைத் (மர்ம ஸ்தானம்) தாக்கும் நாயகிகளைப் பாமாவும் அம்பையுமே காட்டியுள்ளனர். (தாக்குவதற்குத் தோதான இடமும்) அதுதான்.

அம்பை விரும்பும் அத்தையின் 'மிதமான சூட்டுடம்பில் ரசங்கள் ஊறுகின்றன. சாறு கனியும் பழத்தைப்போல் ஒரு ஜீவ ஊற்று ஓடுகிறது (70). பெண்ணின் உடலைத் தழுவி ரசிக்கும் தருணம் வசீகரம்.

## II

விறைப்பு, நீள அகலங்கள், வளைவு, வீக்கம் போன்றவைகளோடு நிறம் மனிதர்களை நிர்ணயிக்கிறது. கறுப்பைத் துக்கத்தின் நிறமாக மாற்றிய பழுப்புத் தோலர்களுக்கிடையில் ஆறே வார சிவப் பழகுக்குள் பலர் குப்புறக் கிடக்கையில், கறுப்பின்கண்மிக்குள்ள அழகு அம்பையின் கண்களில் பட்டுத் தெறிப்பது சந்தோஷமாயிருக்கிறது. சுருண்ட முடியர்களின் தாமரைக் கண்கள் மின்னும் வெளேர்மேனி விரும்பும் வெகுஜன அபிப்பிராயத்துக்கு எதிராகப் பட்டுக்கரியமேனி விரும்புவது அம்பையின் தனித்திறன்.

பொன்னவிர்மேனி சுபத்திரைமாது மேலான பாரதியின் வெள்ளைப்பிரியம் தி. ஜானகிராமனுக்குப் பொழுதன்னைக்கும் உண்டு. கறுப்புத்தோல் குறித்த அருவெறுப்பு ஊடகங்களில் வலியுறுத்தப்படுகிறது. ரெட் ஆக்சைடுகளை உடலெங்கும் பூசும் கனவான்களாக வெள்ளைத்தோலில் மின்னும் கதாநாயகர்கள் வர; கறுந்தமிழச்சிகளின் தோல் வெளுக்கப் பூசும் கிரீம்கள் விற்கும் தமிழ்நிலத்தில் கருமையின் மீதான துவேஷம் கடுமையாகவே உள்ளது. திருடர்களும் கொள்ளையர்களும், எள்ளிநகையாடப்படும் கோமாளிகளும் கறுப்பர்களாக வெள்ளைத்திரையில் வருகிறார்கள்.

"அருளனின் கறுமை நிறம், ஈரமான வெள்ளைச் சட்டையின் ஊடே ஏறி இறங்கும் மழை நனைந்த கரிய தோள்கள், தங்கம் அத்தையின் அழகுக்கறுப்பு, கருந்தந்தத்தில் எண்ணெய் பூசினாற்போல, கறுத்த அழகான மூக்கில் ஒளிரும் வைரம், எவ்வளவு அழகு அந்தக்கறுப்பு, பட்டுக்கரியமேனி" என அம்பையின் கதைகளெங்கும் கறுமைக்கவனிப்புகள் விரிகின்றன.

## III

அம்பையிடம் திராவிடக் காழ்ப்பு செயல்படுகிறது. பாரீஸ் ஸுஸனின் தூயதமிழ்ப்பேச்சு திராவிட அழகியலை 'நகைப்பு'க்கு உள்ளாக்குகிறது.

தமிழுக்காகக் கல்லடிபட்ட தமிழ்ப்பண் பாட்டுப் பேச்சுக்காரர் பண்பாட்டை 'வேஷ்டி'க்குள் தேடுவதாக நக்கலடிக்கப்படுகிறார் (124). பெண்ணைத்தூங்க விடாமல் - சேவை செய்ய வேண்டுமெனக் கூறும் தமிழ்ப்பண்பாடு, முத்துக்குமரனைத் தேடிவரும் தமிழர்களின் செயலாக இருக்கிறது (88). விருந்தோம்பல் பேசும் நெல்லை அழகப்பன் மீது இகழ்ச்சி வெளிப்படுகிறது. முலைகளைக் கீறும் படிமங்களை உருவாக்கும் கவிஞனின் கொடுமை (89) களிலிருந்து அண்ணாதுரையின் மறைவையொட்டி தமிழ்ப் பெண்ணொருத்திக்கு விடுதலை கிடைக்கிறது. திராவிடக் கலாச்சாரத்தின் முன்னணிக்காரரான அண்ணாவின் மறைவை விடுதலையோடு தொடர்புபடுத்துவது(91) அம்பையின் அரசியல்.

திராவிடக்கட்சிகளின் நடப்புச் சீரழிவுகளை முன்வைத்து திராவிடக் கலாச்சாரத்தைப் பழிப்பது பொருத்தமானதன்று. திராவிடப் பண்பாடு முகிழ்த்த காலப்பின்னணி அறிதற்குரியது. அவர்கள் முன்வைத்த தமிழ்ப்பண்பாடு பிராமணியப் பண்பாட்டுக்கு எதிராகக் கண்டடைந்த புதியவெளி. அக்கிராசனர்களைக் காரியாலயத்திலிருந்து புறம்தள்ளிய நீசர்களின் பாஷை அது. அடுக்குச் சொற்கள், ஆடம்பரம், பகட்டு, டாம்பீகம் இன்னபிற 'உயர்தனிச் செயற்கை'களாக அவர்கள் கண்டடைந்த மொழி அமைந்தாலும்கூட பிராமண மொழியரசியலுக்கு எதிராக அமைத்துக்கொண்ட மொழி. அரசியல் தளத்துக்கு மொழியை இழுத்துவந்த தனித்தன்மை அம்பைக்குச் சிரிப்பாணியாகப்படுகிறது.

திராவிடப் பண்பாட்டில் ஆணாதிக்கம் விறைத்துத்தான் நின்றது. ஆயின் அதன் 'சீர்திருத்தத்தன்மை' வைதீகத்தைக் கலங்கடித்தது. பிராமணியச் சடங்குப் பெருமிதங்களுக்கு எதிராக தமிழர்வீரப் பெருமைகளைச் சரியாகவே அது கண்டடைந்தது. திராவிடக்


படிப்பகம்

www.padippakam.com

கட்சிகள் பெரியாரைத் தலைமுழுகிவிட்டாலும்கூட முன்னணி வீரத்துறவிகளுக்கு எரிச்சலூட்டும் கட்சியாக இருக்கத்தான் செய்கிறது.

**IV**

பெண்கள் சுமக்கவேண்டிய 'போலி'யான தாய்மைப்பாரத்தை முணுமுணுப்புகளோடு உதறும் அம்பைக்கும் குழந்தைகளுக்குமான நெடுஞ்சரடு ஊசலாடுகிறது. பட்டுக்கரியமேனி குழந்தை ரேசல் பொங்கிப் பொங்கிச் சிரித்துத் தாயிடம் போக மறுத்து அம்பையிடம் தாவுகிறது (103). பல்நிகழ்வுகளைச் சந்தித்த தன்தாயின் புடவைக்கரையை ரேசல் மேல் படர்த்துகிறார். அப்பாவின் இடதுகையில் அழுந்தித் தொங்கும் கால்களின் கொலுசுகளைக் காட்டும் புகைப்படம்(92) மகிழ்ச்சியைத் தருகிறது. பிறர் தோளில் உறங்கும் பச்சிளங்குழந்தை ஈர்க்கிறது.

**V**

பொழுதுகள் குறித்து அறிதல் கவனத்திற் குரியது. தமிழில் பகல்உயர்வானது. இரவு தாழ்வானது என்று இரவுகளை அழிவுகளாக உருவகப்படுத்தவதும் உண்டு.

பரிதி துலங்கும் வெள்ளொளிப்பகலில் நடமாடும் பெண்கள் இரவில் வெளியே வர மறுக்கப்படுகிறார் கள். இரவுகளில் பெண்களின் இயக்கத்தைச் சுட்டுவது அரசியல் செயற்பாடாக அமையும். 'எங்கயிருந்தோ கூப்பிட்டு வந்து கொன்னு(35) போடும் ஒட்டகம் இரவில் ஓலம் எழுப்பிச் சாகிறது. மேத்யூ அஸ்தமனப் பொழுதில் சாகிறார். அழிவையும் இரவையும் தொடர்புபடுத்துகிறார் அம்பை.

வெளி குறித்த (space) அம்பையின் நுட்பம் அலாதி யானது. பெண்களின் இயக்கமும் கதைப்புலமும் இல்லவெளிக்குள் (domestic space) மட்டுமே பொதுவாக சித்தரிக்கப்படுதலுண்டு. இவ்வாறு, முடக்கப்படும் கதை நிகழ்வுக்கு எதிராக பலதரப் பட்ட இடங்களில் பெண்களின் வாழ்க்கை சுழலுவதை அம்பை காட்டுகிறார். வனம், விலக்கப்பட்ட பகுதியாகப் பெண்களுக்கு அமைகிறது. முனிவர்கள் புத்தொளி பெறும் இடமாக வனம் கருதப்படுகிறது. வீட்டுக்கு எதிர்நிலையிலான காட்டில் வாழ முற்படுகிறாள் அம்பை காட்டும் பெண். மலையில் நடக்கும் வாழ்க்கை, லிங்க் ரோட்டில், கடலோரத்தில், மத்ரீதின் ரெடீரோ பூங்காவில், வெளிநாட்டில், பெங்களூரில், காட்டில் என பலப்பல வெளிகளில் பல்வேறு மனிதர்களோடு பெண்களின் வாழ்க்கை. எனவேதான் ஓரிடத்தில் படுத்துக்கிடக்கும் பெருமாளை விட அங்குமிங்கும் அலையும் சிவனை அம்பைக்குப் பிடிக்கிறது.

ஆயின் ஊரெல்லாம் சுற்றியலைந்தாலும் மண் மீதான பற்று அம்பைக்கு உண்டு(59) மண்மூடிய பிணக்குழி மேல் ஒரு பெண்குழந்தை வந்து புரளுகிறது (29). உலகமெல்லாம் சுற்றினாலும் வீட்டுத் தோட்ட மண் பாரீஸுக்கு இடம் பெயர்கிறது.

எழுத்தின் ஒவ்வொரு வளைவையும் சுளிவையும் அரசியலோடு கவனப்படுத்தும் அம்பையிடம் ராமவெறி மீதான இகழ்ச்சி (39) வெளிப்படுவதும் இயல்புதான். ஆயின் இயல்பான வாசிப்புக்கு அரசியல் செயற்பாடு குந்தகம் ஏற்படுத்தவில்லை என்பதோடு முடிக்கலாம் இதை.

---

காட்டில் ஒருமான், அம்பை, காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி. சாலை, நாகர்கோயில்-1, விலை ரூ. 75.

# மனலெழுத்தை அலையழிக்கும் நெய்தல் வாழ்க்கை



***கண்ணன்–காளிங்கராயன்***

தமிழகத்தின் அறியப்பட்ட வரலாறு நெடுகிலும் கடல்சார்ந்த வாழ்க்கையின் பதிவுகள் ஆங்காங்கே விரவிக்கிடக்கின்றன. நாகரிகங்களின் தோற்றமும், அயலக மாந்தரின் தடம்பதிப்பும், காலனிய ஆட்சியின் தொடக்கமும் இப்பட்டினங்களினூடாகத்தான் நிகழ்ந்தன. பரதவர் இருப்பும், அதற்கான அவர்களது எத்தனங்களும் சங்க இலக்கியம் முதல் நேற்றைய 'கடல்புரத்தில்' வரை பதிவுசெய்யப்பட்டுள்ளன. ஆயினும் அவை எவரின் நோக்கிலானவை? எதற்கான பதிவுகள் என்கிற வினாக்கள் எழுகிற இம்மறுவாசிப்புக் காலகட்டத்தில் ஸ்ரீதரகணேசனிடமிருந்து மற்றுமொரு நெய்தல் நிலப்பதிவாக வெளிப்பட்டிருக்கிறது 'வாங்கல்.'

முத்தம்மாள்புரச் சேரியில் "கால்வைத்தால்" "சை" என முகஞ்சுளிக்கும்படியான தெருவிலிருந்து சூரியன் பனங்காட்டுத்தேரியில் விழும்போது தொடங்கும் நாவல் "ஆறுக்கு நாலு' இடத்துக்காகப் பிணத்தை வைத்து நடக்கும் மறியலுடன் முடிந்து போகிறது.

கடற்கரைக்கு காத்துமட்டுமே வாங்கவரும் முதலாளி கைத்தான் பிள்ளையது வம்சாவளிகளின் வாழ்க்கையாக விரியும் நாவல் அவரின் இளையமகன் தொம்மைபர்னாந்துவின் அக/புற நடவடிக்கைகளி னூடாக நகர்கிறது. கதையாடலில் பங்கேற்பாளர் அனைவரும் சமூகப்படிநிலையில் பரதவர்க்குக் கீழான மக்களாகவே படைக்கப்பட்டதிலிருந்து முத்தம்மாள்புரம் தேங்கிநிற்பதை உணரமுடிகிறது. பரதவர் / நாடார் / பறையர்எனும் புற அடையாளங்கள் வெளிப்பட்டு நிற்கையில் கதை மாந்தர்கள் நமது அகவுலகில் அவரவரளவில் அதை மீறும் எத்தனிப்பு களைச் செய்து கொண்டேயிருக்கிறார்கள். பலப்போது தோல்வியடையவும் செய்கிறார்கள்.

'சேரிப்பயனா'? என்ற முதல் கேள்வியிலே அதிர்ந்துபோகிற 'பக்கிள்' பரதவப் பெண் லூர்துமேரியை நோக்கிய ஏணிப்படிகளில் பயணிக்க ஏங்குகிறான். கொம்பையா பிரிஸ் மாந்திரீகம், மருத்துவம் என 'படித்து' தமது நாசுவவாசனையிலிருந்துதப்பிக்கொள் கிறார். தாமஸ்பர்னாந்து கூட பரதவர் சூழலை தன் சினிமாப்பெட்டி மூலம் தாண்டிப்போக முயல்கிறான். ஏற்கனவே நாடாக்குடியை சேர்ந்த லிங்கதுரை இதிலி ருந்து 'வெளியேறி' கம்ப்யூட்டர் படிக்க தூத்துக்குடி போய்விட்டான். அதேவேளையில் சமூகம் வழங்கி யுள்ள புனிதபிம்பங்களை தாங்கிநிற்கும் பாத்திரங்கள் தலைகீழாகக் கவிழ்ந்து கெக்கலியும் காட்டுகிறார்கள்.

பங்குசாமி எலிசிராணியின் இளமையும் வறுமை யும் நிறைந்த சதையைப் புசிக்கிறான். வழமையான குடும் பப்பெண் எலிசி தன் குழந்தைகளின் பசிப்பிணியாற்ற கணவனை வைதுகொண்டே பங்குசாமியிடம் காந்தி


படிப்பகம்

www.padippakam.com

நோட்டுகளுக்காக தன்னையிழக்கிறாள். இது குறித்து அவளுக்கு குற்றவுணர்வு ஏதும்எழுவதில்லை. ஆனால் பங்குசாமியை குற்றவுணர்வு வதைக்கிறது. இந்துப் பறைச்சியான பொட்டுப்பாட்டியின் சவத்துக்கு கல்லறைத்தோட்டத்தில் இடந்தராமல் சட்டத்திற்குள் கிறித்துவப் பரதவப் பிரதிநிதிகளான ஊழியக்காரிகள் விழுந்து கிடக்கின்றனர். பங்குசாமியின் ஆன்மிகக் கள்ளத்தனம் போலவே மின்னடிச்சாம்பானின் 'சேவையை'ப் பெறும் அவருக்குப் பக்கத்திலேயே வீடுகட்டித் தருவதாகச் சொல்லும் கைத்தான்பிள்ளையின் கனிவுக்குள்ளும் கள்ளத்தனமிருப்பதைக் கண்டு கொள்ளலாம்.

வாங்கலை நிறுத்தும் முயற்சியின் தொள்ளாளியில் திட்டமிட்ட பரம்பரைப் பொய்க்கு முன் பஞ்சத்துக் குப்பொய்பேசும் பிரசீன் Local மாந்திரீகம் எடுபடாமல் போகிறது. லிங்கண்ணன் தன் அம்மாவுக்கு அனுப்பிய பணத்தை போஸ்ட்மாஸ்டர் தங்கையா பர்னாந்து கள்ளத்தனமாக அபகரிக்கிறார். ஆனால் தனிமனிதர்களின் முரண்பாடுகளும், மோதல்களும் பெருஞ்சிக்கல் எதையும்ஏற்படுத்துவதில்லை. தன் களவானித்தனம் வெளிப்பட்டவுடன் தங்கையா திமிராக பணம் தரமறுக்கும்போதும், தொள்ளாளியின் பொய்கள் வெளிப்பட்டபோதும், சம்பாடிஇறாலை மறைத்து, விற்றதாக ஒப்புக்கொள்ளும்போதும் எவ்வித வன்முறைக்கான வித்துகளும் உயிர் மீதான கொலை வெறியும் வெற்றிகரமாக விதைக்கப்படுகிறது. ஒருங்கிணைப்பின் / ஒழுங்கமைப்பின் உடனடிச்செயல்வேட்கையுடனான வேட்டையென விளக்கம் பெற்றுள்ள வரலாற்றுச் சூழலில், கூட்டுறவுச் சங்கக் கட்டிடத்தின் உரிமையாளர்தாக்கப்படுவதும், முதலாளிகளுக்கு எதிராக ஏலங்கூறுபவர் மிரட்டப்படுவதுமான நிலை உருவாகிறது.

'வாங்கல்' எனும் கடல்கொந்தளிப்பின் பேரலை ஊரையே குலைத்துப்போட்டு விடுகிறது. எவரும் எதிராகச் செயல்பட்டு வெற்றிகொள்ள முடியாதபடி உறுமுகிறது. இந்த இயற்கையை மீற எவருக்கும் துணிவில்லை. பாறையைத் தகர்த்தெறிந்து வாங்கலை நிரந்தரமாக ஒழித்துவிட சூசை முன்வைக்கும் நவீன அறிவியல் சார்ந்த யோசனையை தொள்ளாளியின் மாந்தரீக மரபு வெற்றிகொள்கிறது. வறுமையாடும் நெய்தல் நிலத்தில் கலை செத்துப்போகிறது. அதிகபட்ச கேளிக்கையாகவும், இயலாமை கொல்லும் மருந்தாகவும் குச்சில் சாராயம்தான் அமைகிறது. பின்னர் அதுவும் மறுக்கப்படுகிறது. இதையெல்லாம் மீறி பெஞ்சமினும் சிங்கராயனும் வாங்கலை எதிர்த்து கடலுக்குள் நுழைகிறார்கள். கடலம்மையின் தீராத தாகத்திற்கு பெஞ்சமின் பலியாகிறான். சிங்கராயனை காறிஉமிழ்ந்த கடலம்மை இறுதியாக சாந்தம் கொள்கிறாள். இயற்கை முன்பும், பணத்தின் முன்பும். தன்னிறைவு பெற்ற வரலாறுள்ள ஒரு சமூகம் இறுதியில் தோல்வியடைகிறது.

கதைகளில் பெண்களின் சித்தரிப்பு வரையறைகளுடனேயே இருப்பதை அவதானிக்க முடிகிறது. திரேசம்மா உலக்கை குத்திக்கொண்டிருக்க, பிலோமி காப்பிபோட, மரியநெக்கிளா தோசை சுட, லூர்து மேரியும், மெட்டில்டாவும் பள்ளிக்கூடம் போய்வந்து வீட்டில் ஒத்தாசைசெய்ய என்பதாகவே இயக்கங்கொள்கிறது அவர்களின் உலகு. பறைக்குடிப் பெண்கள் மட்டுமே உடல்நோகும் நேரடி உற்பத்தி சார்ந்த வேலைகளைச் செய்வதாக பதிவாக்கப்படுகிறது. நமது சமூகம் முழுதும் அடித்தட்டுப்பெண்கள் கள உழைப்பாளிகளாகவும், இடைநிலை, மேல்தட்டு பெண்கள் குடும்ப உழைப்பாளிகளாகவும் உள்ளார்கள். குறிப்பாக பரதவர் வாழ்வில் கடலாடுதல் மட்டுமே ஆண்களாகவும், அதை சமூகமயப்படுத்துதல் பெண் தொடர்பானதாகவும் முன்னர் இருந்திருக்கிறது. மீனுக்கும் உப்புக்கும் நெல்பெற்ற பாண் /பரதவ மகளிரை தொல் இலக்கியங்களில் பார்க்கமுடிகிறது. ஆனால்எலிசியையும், மரிய நெக்கிளாவையும்தான் ஸ்ரீதரகணேசனின் வாங்கல் காட்சிப்படுத்துகிறது.

கதாசிரியரே ஒப்புக்கொள்வதைப்போல பெயர்கள் எல்லாம் தேய்ந்துபோன கலாச்சாரத்தின் இடுகுறியீடுகளாகவே இருக்கின்றன. மின்னடிச் சாம்பான் கோயிலைத்தொழுகிறார். பக்கத்தில் அந்தோணியார் கோவில். பறையர்கள் இந்துக்களாகவும், பரதவர்கள் கிறித்துவர்களாகவும் - பெயர்களில் கூட படைக்கப்பட்டுள்ளனர். இத்தகைய சூழலில் 'வடக்குளத்தானின் பூர்வீகத்தை நோண்டிப் பார்த்தால் இந்து சாயம்தான் மிஞ்சும்" என்பன போன்ற உரையாடல்கள் சிக்கலை ஏற்படுத்தக் கூடியவை. வரலாற்றை 'இந்து' வரையில் நகர்த்திக் கொண்டுபோய் அப்படியே விட்டுவிடுதல் ஆபத்தானதுங்கூட.

அரசுப்பணியில் கடைநிலை ஊழியராக இருப்பினும் மகாலிங்கம் மட்டுமே தலித்தின் இழிநிலையை எண்ணி எரிச்சலடைகிறார். வேலைக்கு விண்ணப்பிக்க லிங்கதுரை வீட்டிற்கு அட்ரஸ் வாங்கப்போன பக்கிள், முத்தம்மாள்புர தொட்டிச்சியின் பேரன் என நாடாக்குடி பாட்டியிடம் அறிமுகப்பட்டு "பட்டைச் சோறு" திங்கவேண்டிய இழிநிலையை எண்ணி கோபங்கொண்டு வெளியேறுகிறான். தீண்டாமைக்கு / ஒடுக்குமுறைக்கு ஆளான வலியினூடாக அவற்றை எதிர்த்து தீவிரமாய்ச் சிந்திக்கையில் - லூர்து மேரி வடிவில் கதைசொல்லி வந்து பக்கிளுக்கு உபன்யாசம் செய்வதே நிகழ்கிறது. பேச்சியம்மையைக் காண பறச்சேரிக்குச் செல்லும் தொம்மைபர்னாந்துவின் கால்கள் தயங்கிச் சரிவதும், அவன் கண்கள் மட்டும நிறமான அழகிதேடி சலித்துப்போய் இறுதியாக 'கருப்பு' நிறத்தையே ஒருவகை அழகு என சமாதானஞ் சொல்லி நகர்கையில் ஆதிக்கசாதி ஆண்குறியும், அழகியல் உணர்வும் துருத்திக்கொண்டு நிற்பதாகவே எண்ணத்தோன்றுகிறது.

சுயம்புத்தேவனின் சாராயக்குப்பி மட்டுந்தான் பேதம்பாராமல் எல்லோருக்கும் ஒரே மாதிரிபோதையைத் தருகிறது. லூர்து மேரியின் லோட்டா காப்பியோ, மரிய நெக்கிளாவின் கனிவான சாயாவோ, லிங்கதுரை வீட்டு பட்டைச்சோறோ, பேச்சியம்மை 'வெளி'யிலிருந்து வாங்கித்தரும் சோடாக்கலரோ அதற்கு ஈடில்லை.

கடந்த ஒரு நூற்றாண்டளவில் இயங்கி வரும் தமிழ் உரைநடை மொழியமைப்பிலிருந்து முற்றிலும் மாறுபட்ட தளத்தில் தலித்சிறுகதைகளும், நாவல்களும் செயல்படவேண்டிய அவசியமிருக்கிறது. மொழியின் செவ்வியல் தன்மையிலிருந்து மீட்சி பெற்று, வட்டார வழக்கின் ஆதிக்கசாதிக்கூறுகளை புறமொதுக்கி விட்டு, புதிதான ஒரு உரைநடை மொழியைக் கட்டவேண்டிய கூடுதல் பொறுப்பு - தமிழின் தலித் படைப்பாளிகள் முன்பு வைக்கப்பட்டுள்ள பெரும் சவாலாகும். மலையாளத்தில்தான் தென்டித்திரிந்த அனுபவங்களிலிருந்து எவ்வித அடையாளமுமற்று பஷீர் இதனைச் செய்தார். கன்னடத்தில் தேவனூரு



படிப்பகம்

www.padippakam.com

மகாதேவ 'நவ்ய' இலக்கிய காலத்திலேயே இதற்கான வித்தை ஊன்றினார். குஜராத்தி மராட்டிய மொழிகளில் தலித் இலக்கியம் தோற்றங்கொண்டபோதே உருவான தன்வரலாறுகளில் இதற்கான "பிரக்ஞை" ஒன்று உருவாகிவந்ததை மொழிபெயர்ப்புகளிலிருந்து கண்டுகொள்ள முடிகிறது.

தமிழில் தலித்கவிஞர்கள் தங்களுக்கான புதிய கவிமொழியைக் கண்டடைவதில் முனைப்புடன் செயலாற்றி வெற்றியடைந்திருக்கிறார்கள் எனச் சொல்ல முடியும். ஆனால் உரைநடையில்-முக்கியமாக புதின இலக்கியத்தில் அத்தகைய முயற்சிகள் தீவிரப்படுத்தப்படவில்லை. என்றே கருதவேண்டியுள்ளது. பாமாவின் "கருக்கு, சங்கதி" அறிவழகனின் "கழிசடை" போன்ற சில படைப்புகளை இத்தகைய புதிய உரைநடைக்கான தொடக்கமாக மட்டுமே கொள்ளமுடியும். அது வளர்ந்து விரிவடையாத நிலையே நீடிக்கிறது. என்பதற்கு தற்போது ஸ்ரீ.க. சான்றாக விளங்குகிறார்.

ஸ்ரீதரகணேசனின் மொழியும், கதையோட்டமும், நிகழ்ச்சி சுழிப்புகளும் திறமையான திரைக்கதை உத்தியையே கொண்டிருக்கின்றன. இது சோசலிச எதார்த்தவாத நாவலாகத் தோற்றம் கொண்டிருக்கிறது. இவரது மொழிநடை நவீனத்துவத்தின் அதே செவ்வியல் தன்மையினை விடாமல் பற்றிக் கொண்டிருக்கிறது. உரையாடல்களில்நேரடியாக இடம்பெறும் (அமங்கலம் கலந்த) அடித்தட்டு மக்களின் தூத்துக்குடி வட்டாரவழக்குச் சொற்கள்கூட படைப்பாளியின் செவ்வியல் மனப்பதிவால் மணலெழுத்தை அலையடித்துச் செல்வதைப்போல அழித்துச் சென்று விடுகிறது. ஸ்ரீ.க. வின் அழகியல் உணர்வும். சமூகமதிப்பீடுகளும் அவரது பெண்கள் குறித்த சித்தரிப்பின் மூலம் அப்பட்டமாக வெளிப்படுகிறது. சேரிக்குள் செல்லும் தொம்மை பர்னாந்துவின் பார்வையில்....

'பார்த்த மாத்திரத்திலேயே ஒரு நல்ல அழகியை இனங்கான முடியவில்லை... ஒருவருக்குக்கூட நிறம் கிடையாது. எல்லாபிள்ளைகளும் கறுப்புதான்.. ஆனால் அந்த குனட்டலான சிரிப்பு அழகாகத்தான் இருந்தது (பக்கம் - 65).

மற்றோரிடத்தில் இதே தொம்மைபர்னாந்து அந்தோணி வாத்தியாரின் மகளைக் காணும்போது.....

"பெண்ணுக்கு அழகு, ஆரோக்கியம், நிறம், லட்சணம் வேண்டும் என்பார்கள். இது அத்தனையும் அவளிடம் இருந்தது. கனிவு ததும்புகிற முகம். அடர்த்தியும் நீளமும் கொண்டகூந்தல். சராசரி பெண்ணுக்குள்ள வளர்த்தி. நல்ல சிவப்பு நிறம் (பக்கம் - 168).

என்று வர்ணனை போகிறது. பக்கிள் எனும் தலித் இளைஞன் அடிப்படையில் ஆதிக்கசாதி நடைமுறையின் மீது கோபம் கொண்டவன். அவனது பார்வையில் பரதவப்பெண் லூர்துமேரி பற்றி ஆசிரியர் விவரிக்கிறார்.

"லூர்து மேரி சிரித்தாள், அவளதுபுன்சிரிப்பில் தேன் தடவியது போல இருந்தது பக்கிளுக்கு. மனசு இனித்தது. அழகு, அறிவு, இளமை, நளினம் எல்லாம் சேர்ந்த ஒரு பெண்ணை இப்பத்தான் பார்ப்பது போலிருந்தது."

சிவப்பு நிறம் - நீண்டகூந்தல் - கனிவு - நளினம் போன்றவைதான் ஒரு பெண்ணுக்கு அழகு என்ற திடமான நம்பிக்கை ஒரு முற்போக்கு படைப்பாளியிடம். செயல்படுவது வியப்பளிக்கிறது. இதற்கு இவர் தேர்ந்துகொண்ட யதார்த்தவாத உத்தியின் நேரடிச் சொல்முறையுங்கூட காரணமாக இருக்கக்கூடும்.

ஆனால் அதே நேரம் கடல்குறித்த விவரிப்புகள், பெஞ்சமினும் சிங்கராயனும் வாங்கலை எதிர்த்து மச்சத்திற்காகக் கடலாடிச் செல்வதை காட்சிப்படுத்துகையில் இவரது மொழியும் மெல்ல மெல்ல மேலெழும்பி வந்து நம்மை இழுத்துச் செல்வதை உணரமுடிகிறது.

இறுதியாக ....

நாவலாசிரியர் எதையும் குலைத்துப்போடவில்லை... எல்லாவற்றையும் கண்டு சாட்சியாக நின்று இயன்றவரை அப்படியே பதிவு செய்திருக்கிறார். ஆனால் கதைமாந்தர்கள் முடிவெடுக்கும் கட்டங்களில் எல்லாம் கதைசொல்லியே புகுந்துகொண்டு பேசிச் செயல்பட வைக்கிறார். அதோடன்றி திரட்டுதல் - போராடுதல் போன்ற நடவடிக்கைகளின் இன்றைய வடிவங்களையும், உத்திகளையும் மட்டுமே அவர் முழுதும் நம்பியிருப்பதாகத் தெரிகிறது. இது விவாதிக்க வேண்டிய பிரச்சனையாகும்.

எனினும் போலீசுக்காரர்களின் "லத்திக்கம்புகளுக்கு," முன்னே எதிர்நின்று "அடிடா பார்க்கலாம்" என்று உறுமும் பெண்களையும் போலீசை கோமணத் தோடு கட்டிவைத்து அடிக்கிற பெண்களையும் காண முடிகிறது. இச்சீற்றத்தை இருக்கிற சமூகத்திற்கெதிரான 'வாங்கலா'க்வே காண வேண்டியிருக்கிறது.

வாங்கல், - ஸ்ரீதர கணேசன் , ஸ்நேகா, 348, டி.வ.கே. சாலை, இராயப்பேட்டை, சென்னை-14., பக் 168 விலை ரூ. 75.

## கீழக்காயம்...

எதற்கோவென்றுதான் அதற்கும்
வந்தேன்.
தவிர்த்தது இதையா? தளர்ந்துபோனேன்
அங்கே நிமிர்ந்தும் எங்கோ விழுந்தேன்
மணவறை நுழைவுத் தோரணமானேன்
கதவுகள் மூட அறுந்து தொங்கினேன்

பொய் முகம் கண்டு என்முகம் உடைந்தேன்
அழைத்தபோதும்
அஞ்சி அகன்றேன்
இங்கே இருந்தும் எங்கோ தொலைந்தேன்

அப்போதெல்லாம் நீ
என்னவாயிருந்தாய்?
ஏதோ புரிந்தேன்

அருமை தெரிய
அவஸ்தையோடிணைந்தேன்
வெளுக்கா மனத்தை
வண்ணத்தில் தோய்த்தேன்
எல்லாம் கடந்து
உன்னை
நேசித்துமிருப்பேன்

– நாசர்



படிப்பகம்

www.padippakam.com



# ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் நோக்கில் பெண்கள்

*— எ.எம். சாலன்*

**உ**லகின் பல பாகங்களில் பெண்களின் மீதான ஒடுக்குமுறை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருப்பது நாம் எல்லோரும் அறிந்த சேதியே. பெண்ணடிமைத்தனம், பாலியல் ரீதியான ஒடுக்குமுறை, சமத்துவமின்மை - என அவர்கள் அனுபவித்துக்கொண்டிருக்கும் துன்பங்கள் எண்ணிலடங்கா.

இன்று, இவைகளுக்கு எதிராகப் பெண் இயக்கங்கள் பல, உலகின் பல மூலைகளிருந்தும் குரல் கொடுக்க ஆரம்பித்துள்ளன. இதன் விளைவாக இன்று நாம் ஒத்துக்கொண்டுள்ள ஆணாதிக்கச் சமூகத்தில் பல வெடிப்புகள் ஏற்படத் துவங்கியுள்ளன.

இவைகள் ஒரு புறம் இருக்க, நம் நாட்டில் இன்னொருபுறம், புதியசிந்தனைகளின் தாக்கத்தினால் பெண்கள் விழிப்புணர்வு பெற்றுப் பழைய சம்பிரதாயங்கள், ஆசாரங்கள், அனுஷ்டங்கள் போன்றவைகளை உதறித்தள்ளிவிடாதபடி அவைகளைத் தக்கவைத்துக்கொள்ளும் முயற்சிகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேற்கண்ட செயலுக்குக் கருத்தியல் ரீதியாக மிக முக்கியப் பங்களிப்பைச் செய்தவர்கள் அல்லது செய்து வருபவர்களின் பட்டியலில் இடம் பெறுபவர்கள் நம்முடைய சித்தர்களும், வேதாந்திகளும், மதப்பண்டிதர்களும் புரோகிதன்மார்களுமே.

இவர்கள் போக, நம் இதிகாசங்கள், புராணங்கள், வேதங்கள், உபநிஷத்துகள், தேவன் அல்லது தேவியை மையமாகக் கொண்டு எடுக்கப்படும் திரைப் படங்கள் போன்றவைகளும் மறைமுகமாகப் பெண் விடுதலைக்கு எதிராக எடுத்து கையாளப் படுவதையும் காணமுடிகிறது.

இந்துமதத்தைத் தீவிரமாகப் பிரச்சாரம் செய்து வந்தவர்களில் மிகவும் முக்கியமான ஒருவர் ராமகிருஷ்ண பரமஹம்சர். அவர் தான் செய்த உபதேசங்களில் பல இடங்களில் நம் நாட்டுப் பெண்களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். அவை பின் வருமாறு :

"கிருகஸ்தர்களே, ஜாக்கிரதையாக இருங்கள். ஸ்திரீகளிடம் அதிக நம்பிக்கை வேண்டாம். அவர்கள் வெகு தந்திரமாய் உங்களை வசப்படுத்தி விடுவார்கள்" (ராமகிருஷ்ண பரமஹம்சர் அருளிய உபதேச மொழிகள் 1121 உபதேசங்கள்) மயிலாப்பூர் ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தின் தலைவரால் பிரசுரிக்கப்பட்டது) உபதேசம் 69.



நம் உலக வாழ்க்கை என்பதே ஆணும் பெண்ணும் இணைந்தது தானே? ஆண் இன்றி பெண்ணோ, பெண் இன்றி ஆணோ, இவ்வுலகில் தோன்றவோ, வாழவோ முடியாது. இது உயிரியலின் அடிப்படை விதி. விஷயம் இப்படியிருக்க ஆண்களைப்பெண்களிடமிருந்து விலகியிருக்க, மேற்கண்ட உபதேசம் தூண்டுவதைக் காணலாம்.

மேலும் அவர் சொல்வதாவது;

"புகை சூழ்நத அறையில் எவ்வளவு ஜாக்கிரதையுடன் நீ இருந்தாலும், உனது சரீரத்தில் கொஞ்சமாவது கரியேறத்தான் செய்யும். அதுபோல ஒருவன் எவ்வளவு சாமர்த்யமாயும் ஜாக்கிரதையாயும் இருந்தாலும் ஸ்திரீ சங்கத்தினால் அவனுக்கு காம இச்சை கொஞ்சமாவது உண்டாவது நிச்சயம்," (உபதேசம் 70).

ஒவ்வொருவரும் பெண்களிடம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். அப்படி இருந்தால் மட்டும் போதாது; அவர்கள் மீது ஆசையும் ஏற்பட்டு விடாதபடி மிகக் கவனமாகவும நடந்து கொள்ள வேண்டும். என்பதை மேற்கண்ட உபதேசம் ஆண்களுக்குச் சுட்டிச்செல்கிறது.

ஸ்திரீ என்பவள் யார்? நம் ஒவ்வொருவருக்கும் உயிர் தரும் பிரம்மா, பாசத்தைக் கற்றுத்தரும் சகோதரி. கேலியால் நம்மை நெகிழச் செய்யும் மதினி, மிருகத்தனமான நம் உணர்ச்சிகளையெல்லாம் கட்டுப்படுத்தி வரும் மனைவி இவர்கள் அனைவருமே ஸ்திரீகள்தாம்!

இவர்களில் எவரிடம் நாம் அதிக ஜாக்கிரதையுடன் நடந்து கொள்ள வேண்டும்? யார்மீது ஆசை ஏற்பட்டு விடக்கூடாது? என இந்த சந்நியாசி நம்மை எச்சரிக்கிறார்? ஆக, இந்த சாமியார்களின் முக்கிய நோக்கமே, ஆண்களாகிய நம்மை இல்லறவாழ்க்கையைத் துறக்கச் செய்து, துறவறத்தை நோக்கி இழுப்பது ஒன்று மட்டுமே என்பது புரிகிறது.

இன்னொரு இடத்தில் "புதிதாய்ப் பிறந்த கன்றுக்குட்டி, தாய் ஊட்டும் காலத்தைத் தவிர மற்றைப் போதெல்லாம் வெகு குதூகலத்துடன் துள்ளிக் குதிக்கின்றது. பெரிதாகி, நுகத்தடியை வைப்பதற்காகக் கழுத்தில் கயிற்றைக் கட்டினவுடன் அதன் குதூகலங்களெல்லாம் போய்விடுகின்றன அதன் முகத்தில் துக்கக்குறி தோன்றுகிறது. உடம்பு எலும்பாய் மெலிகின்றது. அதுபோல உலக விஷயங்களில் (இங்கே அவர் உலக விஷயம் என்று குறிப்பிடுவது இல்லற வாழ்க்கை அல்லது உலக இன்பங்களையே)) ஈடுபடாதிருக்கும் வரையில்ஒரு பையன் கவலையற்றுச் சந்தோஷச் சித்தனாகவே இருப்பான்.



படிப்பகம்

www.padippakam.com

கல்யாணமாகி உலகக் கட்டொன்று ஏற்பட்டு குடும்பப்பொறுப்பை வகிக்க வேண்டி வந்ததும் அவனுடைய சந்தோஷங்களெல்லாம் பறந்தோடி விடுகின்றன (உபதேசம்192).

மேற்கண்ட கூற்று இராமகிருஷ்ண பரமஹம்சருடைய உள்நோக்கத்தை வெட்ட வெளிச்சமாக்குகிறது.

குடும்ப உறவுகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் மனிதர்களைப்பற்றிய அவரது பார்வையும் ரொம்ப விசித்திரமானதாகவே இருக்கிறது.

உதாரணத்திற்கு,

"லௌகீகனுடைய மனம் சாணிக்குழியில் உள்ள புழுவுக்குச் சமானம். அப்புழு அங்கேயே எப்பொழுதும் வாழ்கின்றது. அங்கேயே வாழவும் பிரியப்படுகின்றது. யாரேனும் ஒருவர் அப்புழுவை அங்கிருந்து எடுத்துப்போய் ஒரு தாமரைப்பூவின் மேல் வைப்பாரேயானால் அந்த நல்ல வாசனையாலே அது மரணமடையும். அதுபோல, லௌகீகனானவன் உலக விஷய இச்சைகளாகிற அசிங்கத்திலிருந்து ஒருநிமிசங்கூட விலகி வசிக்க இயலாதவனாவான் (உபதேசம், 214).

நம்நாட்டிலுள்ள சாதாரண மக்கள் பலரும் தங்கள் குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டுக்கொண்டே, ஈஸ்வரனையும் தொழுதுவருபவர்கள். இது ஒரு சராசரி இந்தியனின் பொது சுபாவமும் கூட. அவர்களைப் பொறுத்தவரையில் "தெய்வப்பற்று' என்பது தாகத்திற்குத் தண்ணீர் குடிப்பதுமாதிரி. அவர்களில் பலரும் உலகப்பற்றுக்கு முக்கியத்துவம் கொடுப்பவர்கள். இதைத் தளரச்செய்வதுதான் நம் சந்நியாசிகளின் பிரதான நோக்கம்.

அவர் மேலும் தொடர்கிறார்.

"பெண்ணாசையைத் துறந்தவன், உலகத்தையே துறந்தவனாவான். அவனுக்கு ஈஸ்வரன் வெகு சமீபத்திலிருக்கிறான்," (உபதேசம், 541).

இதன் மூலம் அவர், ஒருவனை குடும்பம், மனைவி, பிள்ளைகள் - ஆகிய அனைவரையும் துறந்துவிட்டு சந்நியாசி வாழ்க்கயை மேற்கொள்ளும்படி வற்புறுத்துவதாகத் தெரிகிறது.

இவ்வுலகில் வாழ்ந்துகொண்டிருக்கும் மனித உயிர்களுக்கும், ஏன், வேறுபல ஜீவராசிகளுக்குகூட ஆண் - பெண் உறவு என்பது தவிர்க்க இயலாத ஒன்று (ஒரு ஆண், ஆணுடனும், ஒரு பெண் இன்னொரு பெண்ணிடமும் கொள்ளும் ஒருபாலுறவை - இந்த இடத்தில் நாம் சற்று விலக்கி வைத்துக்கொள்வோம்)

இப்படியிருக்க, நம் பெண்ணினம்தான் ஆண்களை ஈஸ்வரனின் பக்கம் திரும்பவிடாமல் செய்கிறார்கள் என, அவர்கள் மேல் குற்றத்தைச் சுமத்துவதை அறிவுள்ள ஒருவரும் ஒத்துக்கொள்ள மாட்டார்கள். அந்த சாமியார்த் தனமான பார்வையும் அவ்வளவு சரியானதல்ல.

"உன் விவேக புத்தியில், பெண் சரீரம் எதனால் ஆனது என்பதைப் பரிசீலனை செய்துபார். எலும்பும், தோலும், சீழும், ரத்தமும் சேர்ந்து ஆனது. மிருகங்களுக்கு இருப்பது போலவே, மல ஜல துவாரங்களும் சளியும், பீளையுமிருக்கின்றன. என்றாலும் என்ன ஆச்சரியம் மனிதன் கடவுளை மறந்து இவ்வித ஆசாபாசங்களிலேயே மனதை செலுத்துகிறான்" (உபதேசம், 542) என, உபதேசம் பண்ணி விட்டு.

எனவே,

"உண்மையைக் கேட்டு புத்திபூர்வமாக அறிந்துகொண்டு அநித்தியமாகிய உலக பந்தங்களை அகற்றவில்லையானால், அவ்வறிவால் என்ன பிரயோஜனம்?" என்றும் நம்மை நோக்கிக் கேட்கிறார் பரம்ஹம்சர்.

மேலே நாம் பார்த்தவற்றை ஒரு கதை சொல்வியைப் போல, பல கதைகளின் மூலமாக அவர் நமக்குச் சொல்கிறார்.

அதிலொன்று பின் வருமாறு :

"தட்சிணேஸ்வரத்திலுள்ள பஞ்சவடிக்கு ஒரு சாது வந்து எப்போதும் வேதாந்த விஷயங்களையே பேசிக்கொண்டிருந்தான். அவன் ஒரு பெண்ணிடம் முறைகேடான உறவு வைத்திருப்பதாகக் கேள்விப்பட்டு, அவனிடம் சென்று,

"வேதாந்த விஷயமாக நீ பெரிய பிரசங்கங்கள் செய்கிறாய். ஆனால் இந்த சனங்கள் உன்னைப்பற்றி ஏதோதோ சொல்கின்றார்கள். அது சரியானதா, என்றேன்?

"அதனால் என்ன? அதில் ஒன்றும் குற்றம் இல்லை, என்பதை நான் கண்டேன். உலகமே எப்போதும் அநித்தியம், பொய்யாக இருக்கும்போது எனது இந்த வாழ்க்கை மாத்திரம் உண்மையாகுமா? அதுவும் பொய்தான் என்கிறான் (உபதேசம், 743)

"உலகே மாயம், வாழ்வே மாயம்" என, எல்லாவற்றையும் மறுத்துப் பேசிக்கொண்டு திரியும் 'தூய வேதாந்திகளே, இதையும் பொய்யெனக் கருதிக் கொள்ளுங்களேன்" என, அந்த லோகாயதச்சிந்தனையைத் தூக்கிப்பிடிக்கும் "வேதாந்தி' கருதினான் போலும்!

-ஆக, இந்தப் பூமண்டலத்தில் மனிதகுலம் அரும்பாடுபட்டுக் கட்டியெழுப்பியுள்ள 'மனிதகுல வாழ்வு' என்ற மாபெரும் கட்டிடத்தை, நிரந்தரமானது, நித்தியமானது, சிறந்தது என நாம் ஒருபுறம் உரக்கக்குரல் கொடுத்துக்கொண்டிருக்க, இன்னொரு புறம் நம் நாட்டு வேதாந்திகளும், மதப்பண்டிதர்களும், புரோகிதன்மாரும் 'அது அநித்தியமானது' என்று பிரச்சாரம் செய்து வ்ந்திருப்பதை, செய்துகொண்டிருப்பதைத் காணமுடிகிறது.

வாழ்க்கைக்குச் சுவையூட்டுவதில் காதல் திருமணத்திற்கும் பெரும்பங்கு இருக்கிறது. அதுபோலவே பழைய வருணாசிரம தர்மத்தின் மிச்சசொச்சங்களைத் தகர்த்தெறியும் வலிமை கலப்புத்திருமணத்திற்கு உண்டு.

- இப்படி இருக்க, இம்மாதிரி விஷயங்களை பரமஹம்சர் எவ்வாறு அணுகுகிறார் எனப் பாருங்கள்.

"பிறனிடம் இச்சைகொள்ளும் ஒரு பெண், ஆரம்பத்தில் தன் காதல் விஷயமாக வெகு ஜாக்கிரதையுடன் நடந்துகொள்கிறாள். காதல் வளர வளர, இவ்வித உணர்ச்சி கொஞ்சம் கொஞ்சமாக அவளை விட்டு நீங்குகின்றது. பிறகு தைரியமாக தன் வீடு, வாசல்களையும் விட்டு நடுத்தெருவில் அவனோடு நடந்துசெல்லவும் துணிந்துவிடுகிறாள்.


படிப்பகம்

www.padippakam.com

"இதன் பிறகு காதலனுக்குத் தன் மேலுள்ள அன்பு குறைந்து புறக்கணிக்க முயன்றால்" உனக்காக நான் என் வீட்டை விட்டு வெளியே வந்தேன். இப்போது என்னை நீ புறக்கணிக்கப் பார்க்கிறாயே? என் ஜீவனுக்கு ஏதாவது வழி செய்து வைக்கிறாயா, இல்லையா? என்று அவன் கழுத்தைப் பிடித்துக் கொண்டு அதிகாரத்துடன் கேட்கிறாள்...." (உபதேசம், 755) என விவரித்துக்கொண்டே செல்கிறார்.

இதிலிருந்து நாம்பெறும் சேதியென்ன? ஒன்று, இதன் மூலம் நம்நாட்டில் காதல் வளர்ந்து விடக் கூடாது. இன்னொரு கோணத்தில் பார்த்தால், காதல் இங்கே கொச்சைப் படுத்தப்படுகிறது.

இரண்டு, இங்கேயும் பெண்கள் மட்டுமே விமர்சிக்கப்படுவதைப் பார்க்க முடிகிறது.

இதன் பொருள் 'ஆண்களே, பெண்களிடம் உறவு வைத்துக்கொள்ளாதீர்கள்' என்ற சாமியார்த்தனமான உபதேசம்தானே?

பிறரால் நோகடிக்கப்படும் பொழுது புழுக்கள்கூட சற்று தலையை உயர்த்திக்காட்டி தங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்க, தங்களை வளைத்தெடுத்து ஆசைகள் பூர்த்தியானதும் உதறித்தள்ளிவிட்டுச் செல்லும் ஆண்களிடம் "எங்களுக்கு ஒரு வழியைச் சொல்லிவிட்டுப் போ' என, பிடித்துநிறுத்தி தங்கள் வாழ்க்கைக்காகப் போராடும் பெண்களின் பிரச்சனை இங்கே பரமஹம்சரால் குறைத்து மதிப்பிடப் படுவதைப் பார்க்க முடிகிறது.

'காரியம் முடிந்ததும்' பெண்ணை உதறித்தள்ளிய ஆண் கம்பீரமாக ஒருபுறமும், நியாயம் கேட்டுப் போராடும் பெண் பரிதாமாக இன்னொரு புறமும் நின்று கொண்டிருக்க, பரமஹம்சர் ஆதிக்கம் செலுத்தும் ஆண்கள் பக்கம் நின்று கொண்டிருப்பதை இந்த இடத்தில் நாம் காணமுடிகிறது.

இது தரும் சேதியென்ன? எனவே, ஆண்களே, பெண்களை நம்பாதீர்கள்' தானே?

**தகவல் :** ராமகிருஷ்ண பரமஹம்சர் அருளிய உபதேச மொழிகள் (1121 உபதேசங்கள்) மயிலாப்பூர், ஸ்ரீராமகிருஷ்ணமடத்தின் தலைவரால் பிரசுரிக்கப்பட்டது.

**மதிப்புரை :**

# கிழக்கு கடற்கரைச் சாலையில் கேசம் கலைத்தோடும் பயணம்

*— தமிழ்மணவாளன்*



கூ பஞ்சாங்கம் அவர்களை ஒரு திறனாய்வாளராக அறிந்த அளவிற்கு கவிஞராக நான் அறிந்ததில்லை. அவர் எழுதிய மூன்றாவது கவிதை நூலாக 'பயணம்' வெளிவந்திருக்கிறது. திறனாய்வு மனோபாவமும் படைப்பு மனோபாவமும் இயைந்து போவது எந்த அளவு சாத்தியமாகும் என்பதில் எனக்கு எப்போதுமே ஓர் ஐயம் உண்டு.

'பயணம்' என்பது மனித வாழ்வியக்கத்தின் முன்னகர்வு அடையாளமாகும். ஒவ்வொருவர் வாழ்விலும் பயணம் ஓர் இடையறாத நிகழ்வாக தொடர்ந்த வண்ணமே இருக்கிறது. அறுபடாத அப்பயணங்கள் எங்கெல்லாமோ கொண்டு சேர்க்கின்றன. எவற்றையெல்லாமோ சென்று காண்பிக்கின்றன. எந்தவொரு பயணமும் பிரிவை அல்லது சந்திப்பை முன்-பின் வைத்தே நிகழ்கின்றன. அவற்றுக்கிடையேயான இடைவெளியை இணைப்பதாகவே பயணங்கள் நிகழ்கின்றன. பயணங்களின் ஊடாகப்பதிவாகும் காட்சிகள், காட்சி மாயைகள் அந்தந்தப் பயணத்தின் காரணம் கொண்டும் பதிவாகும் மனோபாவம் உருவாவது தவிர்க்கவியலாதது.

இரண்டுமே திருச்சிக்குச் சென்றடைந்த பயணங்களாயினும், திருமணத்திற்கான மாப்பிள்ளையாக, அம்மாவின் மரணச்செய்தியை சுமந்து சென்றவனாக இரு முழு இரவுப் பயணங்களுக்கு இடையேயான முரண் மனோபாவம் நினைவுக்கு வருகிறது. ஒன்றிற்கொன்று முற்றிலும் வேறுபட்ட பயணச் சூழல்களாய் அனுபவித்து இருக்கிறேன்.

பயணத்தின்போது பைகள், பெட்டிகள் மட்டுமின்றி சந்தோஷம், துக்கம், கோபம், அதிர்ச்சி, எதிர்பார்ப்பு போன்ற எத்தனையோ உணர்வுகளையும் உடன் எடுத்துச் செல்ல வேண்டியிருக்கிறது.

நம் பயணத்தின் வேகத்தை அசாத்தியமாக விஞ்சிச் சென்று விடுகிறது. நினைவின் பயணம்.

சென்னை பாரிமுனையிலிருந்து பாண்டிச்சேரிக்குப் பேருந்தில் ஏறி அமர்கிறோம். கிழக்குக் கடற்கரைச் சாலை வழியாக 'சிவ்'வென்ற காற்றினூடே அவர் உறங்கிப் போவதற்கு முன்னர் சற்றுநேரம் பிரயாணம் குறித்தும், அவற்றினூடாக நிகழும் சம்பவங்கள், பிரச்சினைகள் பற்றியும் கூறிக் கொண்டே வருகிறார். (நல்லவேளை விபத்தின்றி பேருந்து புதுச்சேரி சேர்கிறது)

உணவகம் நில்லாப்பேருந்துபோல, ஒரே துரிதத்தில் வாசிப்பு முடிந்து விடுகிறது. 'பயணம்' குறித்தான பல்வேறு செய்திகளைக் காட்சிகளாகப் பதிவு செய்திருக்கிறார்.

எல்லோரும் அறிந்த, அனுபவித்தவைகளே அநேகமாக இருப்பது பலமாகவும், அதுவே பலவீனமாகவும் அமையக் கூடும்.

'ஹோ'வென்று பேரிரைச்சல் எழுப்பி அலைவாங்கும் வியாபித்த பெருங் கடலை, அது கிளப்பும் காற்றை, கடந்தோடும் மரங்களை, வயலை, வெளியையென எத்தனையோ காட்சிகள் கவனத்தில் கொள்ளத் தக்கனவெனினும், இவரின் பார்வைகள் முழுவதும் பரவி இருப்பவர்கள் மனிதர்கள், மனிதர்கள். அதுவே இவரின் அடையாளத்தைக்கூட காண்பிக்கிறது. மனிதர்களை நேசிப்பவராக இவர் இருக்கிற காரணத்தால் நமக்கு வாசிக்கக் கிடைப்பவர்களாகவும் அவர்களே இருக்கிறார்கள்.

காட்சிப் பதிவுகளாகவே நிறைந்திருக்கும் வரிகளில் கவிதை பரிணமிக்கும் பொழுதுகளைக்கவனிப்பது மிகவும் முக்கியமாகும்.


படிப்பகம்

www.padippakam.com

பயணத்தின் இடையில் பல வேறு மொழி பேசுகிற மனிதர்களைச் சந்திக்கநேர்கிறது. இந்தி, கன்னடம், மலையாளம், தமிழ் இன்னும்பல மொழிபேசிக்கொண்டிருக்கிறார்கள். இப்படி பல தரப்பட்ட மொழிகளில் உரையாடிச் செல்லும் மனிதர்களை இரு பெரும் பிரிவுகளாகப் பிரித்துப் பார்க்க முடிகிறதிவரால்...

**இறங்கிய கிழவி**
**வீடுபோய்ச் சேருவாளா?** (பக்கம் 16)

எனத் தவிக்கும் கவி மனமும்,

பெருந்துப்பயணத்தின் நெரிசல் பற்றிய கவிதையில்,

**பக்கத்திலிருப்பவரின்**
**இடம் வந்தது**
**பிய்த்துக்கொண்ட உறுப்பாய்**
**இறங்கினார்**

என்ற வரிகளையும் குறிப்பிட வேண்டும்.

**சுத்தமாய் குளித்து**
**சாமி கும்பிட்ட பிறகுதான்**
**பயணம் தொடங்குகிறது.**
**முழுசாய்க் குளித்துத்**
**தலை துவட்டிய பிறகுதான்**
**பயணம் முடிகிறது.**
**இடையில் பெற்றது**
mG ; F k£L«jhd h? (பக்கம் 11)

மனித வாழ்வை தொடக்கம் முதல் இறுதிவரை 'குளித்தல்' அல்லது 'கழுவுதல்' என்னும் நிகழ்வுக் குறியீட்டில் காட்டி விடுகிறதாய் உணர முடிகிறது. தொடக்கத்திலும், முடிவிலும் தூய்மைப்படுத்திக் கொள்ளுதலுக்கான செயல்பாட்டைச் சொல்லி, அதற்கு முற்றிலும் எதிர்மறையான, செய்த காரியத்தால் தொலைத்திருக்க வேண்டிய அழுக்கை.

**இடையில் பெற்றது**
**அழுக்கு மட்டும்தானா?**

என்று முரணை அனுபவமாக்கி விடுகிறது.

'அழுகையாய் வருகிறது' என்னும் கடைசி வரி அவ்வனுபவத்தால் விளையும் வாசக மனோநிலையை ஒரு வழிப் பாதையாய் இயக்க முற்படுகிறது.

கவிதை வாசகதளத்தில் ஏற்படுத்தும்பேரனுபவத்தை, உருவாகும் உணர்வை (அது கோபமாய், அதிர்ச்சியாய், அலுப்பாய், ஆவேசமாய் இன்னபிறவாய் உருவாகும் சாத்தியமுண்டு) அழுகையில் கரைக்கத் தூண்டுவது சலிப்படையச்செய்கிறது.

**திருமணமென வொன்று முடிந்தது**
**ஓரத்தில் உட்கார்வது ஒழிந்தது**
**குழந்தையென வொன்று வளர்ந்தது**
**ஓரப்பயணம் எட்டாத தூரமாயிற்று**
**பார்த்தால்....**
**மையத்தில் வந்து நிற்கிறேன்.** (பக்கம் 47)

என்ற கவிதை பேருந்து இருக்கையில் மையம் நகர்ந்ததை மட்டும் உணர்த்துவதாகக் கொள்ளமுடியாது. குடும்ப வாழ்க்கை, ஒரு மனிதனை மையம் தள்ளி உருவான ஓர் அரணாய் அமைகிறது என்பதாகவும் கொள்ளலாம்.

முழுமையான கவிதானுபவத்தை ஏற்படுத்திய கவிதையை அடையாளம் காண முனைகையில், 'சக மனிதன்' அதாவது 'சக பயணிகள் யாரையும் நம்பாதீர்கள் / அவர்கள் திருடர்களாகக் கூட இருக்கலாம்' என்று நிலையத்தில் அறிவித்துக் கொண்டிருக்கும் கவிதையைச் சொல்லலாம். கவிதை இப்படி முடிகிறது.

**யார் பக்கத்திலேயும் போய்**
**உட்கார பயமாக இருக்கிறது**
**அவர்கள் திருடர்களா**
**என்பதிருக்கட்டும்**
**அவர்கள் நம்மைத் திருடர்களாக**
**நினைப்பார்களோ**
**வெட்கித் தலைகுனிய நேர்கிறது.**

எந்த ஒரு செயலுக்கும், சொல்லுக்கும் அவற்றுக்கான எதிர்மறை எண்ணங்கள் இணையாய் உடன் நகர்ந்த வண்ணமே இருக்கின்றன. ஆடையைப் பற்றிய பேச்சினூடாகவே மறைந்துள்ளிருக்கும் நிர்வாணம் போல. மனித சிந்தனையின் போக்கு இப்படியாகவே எதிர்மறைகளின் கூட்டாகவே இயங்குகிறது.

பொருளாதாரத்தில், வசதி வாய்ப்பு அதிகரிக்க, அதிகரிக்க தோழமை உணர்வு மங்கிப்போய் விடும் என்பதான சமூகத்தில் நிலவும் கருத்தை மையமாய்க் கொண்டு, நடக்கும்போது உள்ள தோழமை ஸ்கூட்டரில் செல்லும்போது குறைவதாகவும், காரில் போகையில் அதனினும் குறைவதாகவும் விமானப் பறத்தலில் தோழமை உணர்வும் பறந்துபோவதாகவும் பேசி,

**"உன்னிடமுள்ள வண்டியின்**
**பெயரைக் கூறு**
**நீயாரெனக் கூறுகிறேன்"**

என்று முடிகிறது.

மனிதனை யாரென அறிந்து கொள்வது எப்படி இவ்வளவு எளிதாகுமெனப் புலப்படவில்லை. இயலுமெனில் எவ்வளவு சரியாக இருக்குமென்றும் தெரியவில்லை. சக்கரங்களின் ஆரமும், விட்டமும் மனித பயணத்திற்குப் பொருட்டாகலாம். மனிதமும், நேயமும் அதற்கும் மேலான ஒரு தளத்தில் பயணம் செய்யக்கூடியவை. செய்யவேண்டும் என்றே படைப்பு மனம் அவாவுகிறது.

சொற்களின் இணைப்பு எவ்விதமாய் புதிய பரிமாணத்தை எய்துகின்றன என்பதை 'நோயுண்ணும் முதியவர்கள்', 'சாவினைச் சாதித்து விடுகிறார்கள்', 'மலையாய் உயிரில் உட்காரும்', போன்ற தொடர்களில் உணர்ந்து சிலாகிக்க முடிகிறது.

முன்னே செல்லும் 'பாப்பா'வை முந்திச் செல்ல வேகமெடுப்பதுமாய்,

**இடுப்பில் பிசைந்து வைத்த**
**கோதுமை மாவாய்த்**
**தசை மடிப்புகள் / தார்ச்சாலையில்**
**படமாய் விரியும்**

என்பதுமாய் வாலிப சுகமான வரிகளும் உண்டு.

'பயணம்' குறித்து கனிசமான பதிவுகள் நிகழ்ந்த பிறகு, அதுகுறித்தே மேலும் எழுதிப் பார்க்கலாம். என்னும் படைப்பு மனத்தின் கட்டாயத்தை படிக்கும் போது உணரமுடிகிறது.

ஆயினும், ஒற்றை இழைமையத்தில் கவிதைகளை ஒரு சேரப் படிக்கும்போது ஏற்படும் மெல்லிய சந்தோஷத்தையும் ஒதுக்கிவிட முடியவில்லை.

கவிதைகள், தொடர்பயணம் மேலும் தேவையின்றி அப்படியே வாசிப்பதற்கு ஏதுவாய் இருக்கின்றன.

---

பயணம்
- க. பஞ்சாங்கம் (பஞ்சு)
செல்வன் பதிப்பகம், 25, 20-வது தெரு, புதுச்சேரி-8. விலை ரூ. 34/-

www.padippakam.com

# காற்றில் வீசிய மல்லிகைச்சரம்



—வே. எழிலரசு

சொற்கள் உலகை இயக்குகின்றன. சொல்லினால் உலகம் கட்டுண்டு கிடக்கிறது. 'சொல்' தாளம், இசை, ஒழுங்கு, ஓசை வேட்கைகளால் நிரம்பிகிடக்கிறது. பிறிதொரு சொல் அல்லாமல் தானே சர்வமும் என சொல் இறுமாந்து நிமிர்கிறது. கூர்முனைத் தெளிவோடு குவிந்து, அர்த்தச் செறிவோடுவிரிந்த கூம்பெனப் புடைத்த சொல்லின் படிம இடுக்குகளில் புனைவும் தத்துவமும், சிந்தனையும் தன் மெல்லிய சாட்டையை இறுக்கமாக பிணைத்துக்கொள்ள, முனையின் முடிச்சிறுக்கி காற்றில் விசை கொண்டிருக்கிறான் கவிஞன். பம்பரமெனச் சுழல்கிறது கவிதை. சுழற்சியின் வேகத்தில் ஒளியின் சித்து ஊடுருவ, குழம்பிய வண்ணங்களின் சேர்க்கையில் வெண்மை ஒளிர்கிறது. நிறமற்ற நிறத்தருணங்களாய் தன்னைச் சுழற்றி விழிமணிப்பாவைக்கு விசைகொடுக்கும் கவிதைகள் பல **'அலமாரியில் ஓர் ராஜ கிரீடம்'** தொகுப்பில் சுழல்கின்றன. 'அகம்' 'அபிமானம்' உனக்கு மட்டும்' தூக்கம் வராதவென்' போன்ற கவிதைகளை இவ்வகையில் சொல்லலாம்.

மரபின் செழுமை தமிழ்மணவாளனின் இலக்கிய இயக்கத்தின் பின்னணியாக இருப்பதால் இவரால் நவீனத்தின் தலைவாசலிலும் நின்று சொற்சிலம்பமாடிட முடிகிறது. இவரின் கவிதையில் பிரதானமாக பிரயோகிக்கப்பட்ட சொல்லொன்று தனது முழு விஸ்வரூப தரிசனத்தையும் வாசகனுக்கு முழுமையாக உணர்த்தி முடிக்கும் முன்பாகவே, இன்னொரு சொல் விளைந்து மாற்று தரிசனத்தை முன்வைக்கிறது. 'சொல்' எழுத்துகளின் கூட்டுச் சேர்க்கை மட்டுமல்ல, அனுபவத் தாதுக்களின் கலவையும்தான் என்ற மெய்மையை வாசகனுக்கு உணர்த்தியவர். இஃதொன்றும் புதிதோ புதுமையோ குறையோ அல்ல. 'துறந்தார்' என்னும் சொல்லினை துறவியர்க்கு அடையாளப்படுத்தும் வள்ளுவப் பேராசான் காதல் பசலைநிறத்தையடைய அவள் மேனியைத் தவிக்கவிட்டுப் பிரிந்துசென்ற காதலனையும் 'துறந்தார்' என்றே அடையாளப்படுத்தி, விடுதலையின் பேரின்பப் பெருநிலையின் சர்வசுதந்திர முனையையும், வேட்கையின் நெருஞ்சி விதையான மறு முனையையும் மொழியின் எள்ளலில் சொல்லி நகரும் புலமையின் வழி மரபே எனலாம்.

காற்று, நீர், மண், தீ, வான் என்கிற ஐந்து இயற்கைப் பொருட்களைக் கொண்டது இவ்வுலகமும் இவ்வுலக வாழ்வும். வரும்வழியில் யார்வீட்டு / அடுக்களை சன்னலில் அப்பிய / மீன் குழம்பு வாசம் நாசி நுகர / காற்றின் பரோபகாரம் நிகழ்கிறது (ப41). அலுங்காமல் குழந்தை நகர்த்தி / மெல்ல எழுந்து / கதவு திறந்து / ஒழுகும் குழாயடி போகும் / அவரின் கால்கள் / நீரின் - அடர் திரவ அழுத்தங்களை இதயம் விம்ம விம்மச் சொல்கிறது. கிராமத்துக் குப்பை மேட்டில் பறங்கிக்கொடி படர்ந்து கிடக்கும் (31) குடியேறும் நாளின் முந்தைய இரவில் (மண்ணின் தாய்மை விகசிக்கும் கருணையைச் சொல்லி நகர்கிறது) கொளுத்தும்போது (தீயினில் தூசாகும் மனதில் விகாரங்களைப் படிமமாக்குகிறது) (ப.91). **எண்ணிக் கொண்டிருக்கிறேன் / சிரத்தையோடு / கண் சிமிட்டும் நட்சத்திரங்களை / நள்ளிரவில் / ஆகாயம் பார்த்து மல்லாந்துபடுத்தபடி (ப.70).** (வான் விரிக்கும் கற்பிதங்களில் வசமிழந்து மொழி புத்துரு கொள்கிறது) வாழ்வின் வரங்களும் சாபங்களுமாய் நகரும் நிகழ்வுகளையும் அனுபவங்களையும் தனக்குள் இருத்தி காட்சி ரூபங்களாக்கும் கவிதைகளிவை. படைப்புகளின் ஆளுமையில் பல முகங்கள் தெரிகின்றன. வாழ்வின் ரசானுபவத்தை ஊற்றிய குவளையின் சிறு துளியும் சிந்தி வீணாகி விடாமல் சர்வ எச்சரிக்கையோடும் தொண்டாட்ட மனோபாவத்துடனும் பருகும் இரசிகனின் அழகு முகம் - பொறுப்புகளின் கூடுதல் சுமைகளால் அழுந்தும் தோள்களை அரவணைக்கத் தோழமை தேடும் குடும்பியின் சலிப்புற்ற சிழடுதட்டிய முகம்.

அவலங்களைக் கண்டு நாளும் மனம் வெதும்பி விமர்சனங்களை முன் தயாரிப்புகளாக்கிக் கொள்ளும் போராளியின் புன்னகையற்ற இறுகிய முகம்.

நிகழ்வன யாவும் நிகழ்ந்தே தீரும். யாம் செய்வதற்கு யாதொன்றுமில்லை என்ற பேரமைதி மனநிலையில் தன்னை உறைய வைத்துக்கொண்ட அத்வைதியின் மௌன முகம்.

இயற்கையின் இயங்கியலோடு வாழ்வின் மர்ம முடிச்சுகளை மோதியுடைத்து தர்க்கம் விளைவிக்கும் சிந்தனையாளனின் துறுதுறுத்த முகம்.

இச்சை, அன்பு, சோகம், காதல், பிரிவு அக்கறை, பாசம் போன்ற உணர்விழுப்புகளில் சுழன்று தன்னை கரைத்துக்கொள்ளும் சராசரியின் முகம் என பல்வேறு பரிமாணங்களோடு தொகுப்பு தன் சாத்தியங்களைத் தொடர்ந்து நிகழ்த்திக்கொண்டேயிருக்கிறது.

தாய்மையின் அளவில்லாக் கருணையை சொல்லாமல் சொல்லும் கவிஞர் தமிழ்மணவாளனின் கவிதை **இரவுப்பயண ஞாபகக் குறிப்புகள்**. பூடகமான மொழியில் மெல்ல மெல்ல நகரும் இக்கவிதை அதன் இறுதி வரிகளில் சட்டென வழி தொலைத்து நின்றுவிட்டது போல் நிற்கிறது. பெரும்பாலும் நவீன கவிதைகள் முற்றின்மை என்னும் தளத்தில் இயங்குபவை. ஒவ்வொரு முறை வாசிக்கும் பொழுதும் அப்போதைய மனநிலை, சௌகர்யங்கள் வளர்த்துக்கொண்ட தெளிவு இவைகளுக்கேற்ப விரிகின்ற செவ்வியல் தன்மை கொண்டவை. ஆனால் 'ஞாபகக் குறிப்புகளும்' 'அம்மாவின் மரணம்' கவிதைகளிலும் மேற்கொண்டு நகர முடியாமல் நம்மைப் பதுமைகளாக்கிவிடுகின்றன. எத்தனை முறை வாசித்தாலும் புதிய அனுபவங்களைத் தராமல் அதிர்ச்சியையே கையளிக்கின்றன. ஞாபகக் குறிப்புகளில் பொங்கிப் பீறிடும் வெளிச்சக் கதிர்களின் பரவலில் நமது பார்வைக்கு ஒரு குருட்டுத்தனம் வந்து விடுவதால் மேற்கொண்டு நகரமுடியாமல் நின்றுவிடுகிறோம். 'அம்மாவின் மரணம் திடீரென்று கவியும் இருளால் பார்வையிழந்த சூழ்நிலையேற்படுத்தி நகர்வின்மையை உருவாக்கி விடுகிறது. 'இரவுப்பயண ஞாபகக்குறிப்புகள்' கவிதையில், 'குழலில் கமழும் மூத்திர நாற்றம், 'ஏதோ ஒரு


படிப்பகம்

www.padippakam.com

வீட்டுத்திண்ணையில் அமர்ந்திருக்கும் பெண்ணின் காத்திருப்பு காட்சி' 'மனிதர்கள் சேர்ந்திருக்கும் போது ஏற்படும் இரைச்சல்' 'கல்யாணம், மரணச்செய்தி, பிரசவ சேதி, பெண்பார்ப்பு வைபவம் - என்று இனங்காண முடியா குழப்ப ஒலிகள்', 'மன அடுக்குகளில் அசிரத்தையாக போட்டு வைத்த சம்பவங்கள் சந்தர்ப்பத்திற்காகக் காத்திருந்ததுபோல் சிரத்தையோடு மேலெழும் நினைவுகள், 'அர்த்த இராத்திரி தொலைக்காட்சி இம்சைகள்,' 'இந்திய அரசியல்' என்று இரவின் பயணம் நீண்டு கொண்டே பசுமாடு அசைபோடுவதுபோல, ஆனால் எல்லாமே இருட்டாக இருட்டாக இருட்டாக மூத்திர நெடியாக நீள்கிறது. திடீரென்று வெளிச்சமான காலைப் பொழுது வந்துவிடுகிறது ஆக்ஸிஜன் தளும்பும் சுகந்த காற்று பரவுகிறது. கவிதை அதன் இறுதிக்கட்டத்திற்கு வந்து விடுகிறது.'வாசல் தெளித்து கோலமிடும் அம்மா', 'இருக்கின்றன இன்னும் கொஞ்சம் கிராமங்கள் அழகாகவே.' மேலும் நகர்தலுக்கான அவசியமின்றி நிறைவான நம்பிக்கைகளை அமுதப்பாலாக்கி வழியவிடும் கவிதை.

எலும்புகளின் குருத்தை ஊடுருவும் குளிர், குழப்பமான எண்ணங்கள், கலவரமான கனவுகள் அனைத்தையும் காலைப்பொழுது போக்கடித்து குளிர்ச்சி தவழும் சூழலைப் பரவவிடுகிறது. அம்மா இந்த வயதிலும் குளித்து முடித்து வாசலில் கோலமிடுகிறார்கள். ஆக தமிழின் கலாச்சார மரபின் கலை வடிவங்களிலொன்று அம்மாவால் இன்னமும் காப்பற்றப்படுகிறது. 'கோலம்' அரசியல், படாடோபம், விளம்பரம் கலக்காத எளிமையான, அழகான வரவேற்புப் பதாகை. மன உணர்வுகளின் 'மா'வோவியம். அம்மாவிற்கு மகனின் வருகையைக் கண்ணால் கண்டு தெரிந்துகொள்ள வேண்டுமென்ற அவசியமில்லை. காலடிகளின் பதிவொலிகளும் தேவையில்லை. உணர்வின் விம்மலொன்று போதும். அடுத்து நெகிழ்வு. அதற்கொப்பாக அழகான கிராமங்கள்.கிராமங்களின் அழகு பசுமையென்பதும் அந்த பசுமையே மானுடத்திற்கான பால்மடியென்பதும் அறியப்பட்ட ஒன்று. இப்பொழுது கவிதை பூரணத்துவம் பெற்றுவிடுகிறது.மேற்கொண்டு நகர அவசியமில்லாமல், சொல்ல வேண்டியதை சொல்லியாயிற்று என்ற நிறைவுடன் கவிதை நிறைவு பெறுகிறது.

...

அவனின் அருகுணர்ந்து
நிமிர
கனத்த நெஞ்சின் சுமை
கரையும்
நீரில் விழுந்த
உப்புப் பொதியாய்
இருக்கின்றன
இன்னும் கொஞ்சம் கிராமங்கள்
அழகாகவே

அம்மாவின் இருத்தலைக் கொண்டாடும் கவி மனது, சன்னலோர இருக்கை வழியே நீண்ட இரவில் உலகத்தை வேடிக்கை பார்க்கிறது. அம்மாவின் மரணம் கவிதையிலும் 'விடியல் தாமதித்த நெடு இரவின் இருள் சாம பயணம் வருகிறது. ஆனால் வேடிக்கை பார்க்கிற மனோபாவமில்லாததால் கவிதையின் சாளரம் மூடப் பட்டு விடுகிறது.

எனக்காக / பள்ளிக்கூடம் சென்றுவரும்போது / தினம் தினமும்/கல்லூரி படிக்கும்போது / வாரந்தோறும்/ என்று நீள்கிற கவிதையின் அடுத்த வரியாக,

சென்னை வந்த பிறகு சில
மாதங்களுக்கொரு முறையும்
காத்திருந்தவள்
காத்திருந்தாள் புறப்படத்தயாராக

ஞாபகக் குறிப்புகள் கவிதையில் அம்மாவின் வாசல் கோலம் மகனின் வருகையைக் கொண்டாடும் அம்மாவாலான கவிதை என்பது இங்கே புரிந்து விடுகிறது.

உயிர்தந்த, உடல்தந்த
உலகம் தந்த அம்மா
தாங்கவியலாத துயரம்
என்றாலும்
நிகழ்ந்து விடுகிறதே
என்றேனும் ஒரு நாள்
அம்மாவின் மரணம்

இக்கவிதையில் 'மரணம்' என்ற சொல்லின் தாக்கத்தைவிட 'என்றேனும்' என்ற சொல்லின் தாக்க அதிர்வுகள் அதிகம்.மரணம் ஓர் முற்றுண்மை.அதற்குப்பின் ஒன்றுமில்லை, ஞாபகக் குறிப்புகள் தவிர. எனவே தீராத பக்கங்களாய்ப் புரளும் சோகத்தின் சாரத்தை உறிஞ்சிய சொற்களோடு முடிகின்ற கவிதை மேலும் நகரவொட்டாமல் அப்படியே நின்றுவிடுகிறது. நம்மையும் நிறுத்திவிடுகிறது. உயிர்களின் இயக்கத்தை ஒருதுளிக்கூறு நொடியாவது நிறுத்தித்தான் வைக்கும் என்றேனும் ஒரு நாள் நிகழ்ந்துவிடும் அம்மாவின் மரணம்.

புனைவு, நிகழ்வு - என பின்னப்பட்ட கவிதைகள் (ஓர் இரவில், இன்னொரு வீட்டில், ஆட்டம், தெரியுமெனக்கு, திருஷ்டி) கூடிய ஆயுளோடு மொழியின் பயணத்தின் படைப்புலக ஆளுமையை சுவீகரித்துக்கொள்ளும் சாத்தியம் கொண்டவை. 'மாறாதிருப்பது / போலீஸ்காரரின் பூட்ஸ் மட்டுமே' என்ற வரிகளில் மட்டுமே கவிதை ஆயுதமேந்த எத்தனிக்கிறது. மற்ற எல்லா இடங்களிலும் சர்வ ஜாக்கிரதையோடு 'ஆயுதம்' தொலைந்துபோய் விடுகிறது.

**காற்றில் வீசிய மல்லிகைச் சரமாய்**
**சீராய் பறக்கும் பறவைக்கூட்டம்.**

என்பதின் காட்சிப் படிம அழகு சுட்டப்படாமலிருந்தால் நண்பர் ஜெயராஜ் கோபித்துக்கொள்ளலாம். கவிதைகளில் படைப்பாளன் யாருக்காகவோ எதற்காகவோ காத்துக்கொண்டிருப்பதும், (வருகை, ராஜகிரீடம்) அல்லது யாராவது ஏதாவ்து (ஆறுமணிக்கு கோயில், மறக்காமல் பிஸ்கட்) படைப்பாளனுக்காகக் காத்திருப்பதுமாக சதா நிகழ்ந்து கொண்டிருக்கிறது. கவிஞரின் அடுத்த படைப்புக்காக வாசக உலகு காத்திருப்பதை மறைமுகமாய்ச் சுட்டியபடி.

---

*அலமாரியில் ஓர் இராஜகிரீடம்*
*- தமிழ்மணவாளன்*

கோமளவல்லி பதிப்பகம், 18, பத்மாவதி நகர்,
மாதவரம் பால்பண்ணை, சென்னை-600 051.
விலை 30/-


படிப்பகம்

www.padippakam.com

சிறுகதை :

# குதிரில் உறங்கும் இருள்

– பாப்லோ அறிவுக்குயில்

தெரு மனித சஞ்சாரமின்றி அமைதியாக இருந்தது. இரண்டு மின் கம்பங்களில் ஒன்றில் மட்டும் பூச்சிகள் கும்பலாய் மொய்க்க, குழல்விளக்கு கீழிறங்கும் பனிக்கு ஒளியூட்டிக் கொண்டிருந்தது. இன்னொரு கம்பமோ ராசாத்தி வீட்டின் முன்னால் குழல் விளக்கின்றி இருள் அப்பியபடி நின்றது. வெயிலில் கொதித்துக்கிடந்த ஆட்டுக்கல் பனியில் குளிர்ந்து போன சுகத்தில் உறங்கிக்கொண்டிருந்தது. அவ்வப் போது வீசும் காற்றால் பூவரசில் பழுத்திருந்த இலைக ளெல்லாம் பனியொழுகியபடியே உதிர்ந்து செம்மண் ணைப் பூசிக்கொண்டு தரையில் கிடந்தன. கொள்ளி டத்தில் மணல் அள்ளி நிரப்பிக்கொண்டு கரையிலிருந்து மேடேறிக் கொண்டிருந்த லாரியின் உறுமல் இரவின் மௌனத்தை உரித்துக்கொண்டிருந்தது. பனிவாடையைத் தாங்க முடியாமல் ராசாத்தி வீட்டு திண்ணையில் வந்து படுத்தது தெருநாயொன்று. வீறிடும்குழந்தை யின் அழுகுரலால் திடுக்கிட்டு, தலையைத்தூக்கிப் பார்த்துவிட்டு, இங்கில்லை என்றவுடன் முணகியபடி மீண்டும் உடலைச் சுருட்டிக்கொண்டு, விட்ட இடத் திலிருந்து தூக்கத்தைத் தொடர்ந்தது.

நடுச்சாமமாகி இருந்தும் ராசாத்தி மட்டும் தூக்கம் வராமல் புரண்டபடி இருந்தாள். அரிக்கேன் விளக்கு சன்னமாய் முணுக் முணுக்கென்றபடி இருந்தது. ஒளி மங்கலாகிக்கொண்டே வந்து, திரியும் எரியத் தொடங்கி, திக்கங்காகி, முன்னிலும் ஒளியிழந்து, திரி கருகி இருள் படர்ந்துகொண்டிருந்தது. எழுந்து அரிக்கேனை ஆட்டிப் பார்த்தாள். சீமத்தண்ணியைக் குடித்துவிட்டு திரி வெறுமனே தகரத்தில் மோதியது. கண்ணாடியைத் திறந்து தீயை விரலால் நிமிட்டி, கரியைப் போக்கிவிட்டு, நெகாயாய் விளக்கு மேடையைத் துழாவி 'ரெட்டக்கிளியை' லாவியெடுத்து உரசி, பளீரிட்ட இருள் கிழிசலினூடே பார்வையைச் செலுத்தி, குதிரின் அடியிலிருந்த மெழுகுவத்தியை எடுத்து துளித்தியை திரியில் வழியவிட்டு, வீடெங்கும் அடர்ந்திருந்த இருளை தற்காலிகமாய், தானிய மில்லாத குதிரினுள் அடைத்து வைத்தாள், ராசாத்தி. சாணி மெழுகப்பட்ட தரை மேடும் பள்ளமுமாய் ஒழுங்கற்று இருந்தது. ஆறாம்வகுப்பு படிக்கின்ற மேகலா நன்றாக அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தாள்.

இமைகள் கவிழ்ந்து மூடியிருந்தாலும், விழிகள் ஓயாமல் இருள் உலகில் சஞ்சரித்தபடியே உருண்டு கொண்டு இருந்தன. மனம் ஒரு குவியத்தில் பதியாமல் விழிப்பு நிலையில், ஆயிரமாயிரம் எண்ணங்களையும் இழந்துபோன நிகழ்வுகளையும், தொடர் சித்திரங் களாய் நிழலுருவங்களின் அசைவுகளை ரசித்தபடி, சலனத்தோடும் பிரிவின் தகிப்போடும் காத்திருத்தல் தரும் சுகமான வலியை நீட்சியடையச்செய்து அனுபவித் தபடியே இருந்தது.

பழுப்பு ஒளி சுவரில் அசையும் விரல்களைக் கூட பூதாகாரமாய் உருப்பெருக்கி, நிழல் ஓவியத்தை வரைந்தபடி, திரியின் அசைவில் வீடெங்கும் ஒளியை ஊஞ்சலாட வைத்தபடி ஒளிர்ந்துகொண்டிருந்தது. விட்டத்திலிருந்து தொங்கும் உறிகூட சர்ப்பம் தானோ வென ஒருகணம் திடுக்கிட வைத்தாலும், கூரிய கவனிப்பு இல்லையென்று சமாதானம் செய்தது. ஒருவாரகாலமாகவே வீட்டுவேலைகளில் கவனமில் லாமல் இருந்ததினால் கொடிக்கயிறெங்கும் அழுக்குத் துணிகளும், தாழ்ப்பாள் கூடுகளில் துலக்காத பாத்திரங் களும், அழுக்கேறி தூசுபடிந்து அறையெங்கும் 'நெடிகமழ'க் கேட்பாரற்ற பொருள்களாய்க் கிடந்தன. "அந்த சாண்டக் குடிக்கி வரப்போவ இருந்திருந்தான்னா இப்படி வூடு நாறிகிடக்கவாப்போவுது?" ஒரு வாரமாய் வீட்டுப்பக்கம் தலைகாட்டாத தன் 'ஆளை' மனதிற்குள் வைதுகொண்டிருந்தாள் ராசாத்தி. உள்ளே படுத்திருந்தாலும் வாசல்படியில் ஏதேனும் ஆளரவம் கேட்கிறதாவென்று, செவி-நிலைப்படியி லேயே கவனம் செலுத்தியபடி இருந்தது.

விடிநிலாக்காலம். எங்கும் இருளின் இழைகள் பொட்டு வெளிச்சத்தைக்கூட கசியவிடாமல், அடர்த் தியாய் பின்னிக்கிடந்தது. ஒருவாரகால ஏமாற்றம் தந்த வலியைத் தாங்க முடியாமல், காலையிலேயே காளவாய் போடும் இடத்திற்கே ஆளைத்தேடிக் கொண்டு சென்றிருந்தாள். "முன்னப்போல இப்ப யெல்லாம் வூட்டுப்பக்கம் ஆளயேக்காண முடியலியே" என்று இவள் மூக்கை சிந்தியதற்கு, "காளவா வேல கடுமையா இருக்கு ராசாத்தி. கல்லு வேவுறவர கிட்டயிருந்து நான்தான் பாத்துக்கிடணும், வேவாம கல்லு சேதாரம் ஆயிட்டா பொழப்பு கெட்டுப் போயிடும். இன்னையோட கல்லுகொளுத்தற வேல முடிஞ்சிடும்; நாளைக்கு வூட்டுக்கு வந்துடுறேன்" என்று சமாதானம் சொல்லி அனுப்பி வைத்திருந் தான். அவனுக்குப்பிடிக்குமே என்று நெத்திலி கரு வாட்டையும் மொச்சையையும் போட்டு, மணக்க மணக்கக் குழம்பு வைத்திருந்தாள். ரேஷன் அரிசிச் சோறு என்றால் ஆங்கமாய் ரெண்டுவா திங்கமாட் டானே என்று, அரிசிமண்டிக்கே போயி சன்னரக அரிசியா பாத்து வாங்கி வந்து சோறாக்கி வைத்தி ருந்தாள். கருவாட்டுக்குழம்பு தெருவே மணக்க கொமாளித்துக்கொண்டிருந்தது. மகளுக்கு மட்டும் சோறுபோட்டுக்கொடுத்து விட்டு, தனக்கும்- அவனுக் குமாய் சோறெடுத்துத்தனியாக வைத்துவிட்டுக் காத்திருந்தாள்.

இரவு நீ...ண்டுகொண்டே சென்றது; அவளின் ஆள்தான் வருவதாய்த்தெரியவில்லை. மனசெங்கும் பரவிய துயரம் ததும்பி வழிந்தது கண்ணீராய். வாய் விட்டழுதால் தூங்கும் மகள் விழித்துகொண்டு, என்ன ஏதென்று கேட்கலாம், பள்ளிக்கூடம் போகிற மகளோட தூக்கம் தலைந்துவிடக்கூடாதென்று, பீறிட்ட அழுகையை அடக்கி விசும்பலாய்க் கசிந்தாலும், வாய்க்குள்ளேயே கமறிக்கொண்டாள். விம்மலின் வேகத்தால் நெஞ்சு வலித்தது. முதல் கோழி குரலெடுத்த பிறகுதான் தனியாக மூடிவைத்திருந்த சோற்றில் தண்ணி ஊத்தி விட்டு, முந்தானையைச் சுருட்டி தலைக்கு வைத்துக்கொண்டு உடம்பைக் கிழே சாய்த்தாள். மனம் மட்டும் ஆற்றமாட்டாமல் முணு முணுத்தபடியே இருந்தது. இரண்டுமாத காலமாய் தீண்டப்படாமல் கிடந்த உடலின் வெப்பம் மெல்ல எழுந்து ஆவலோடு ஆர்ப்பரித்து, துடித்து, கசிந்து, 'சோறில்லை' என்றவுடன் ஏமாற்றத்துடன் துவண்டு, சலனத்தை இழந்து தளர்ந்து கிடந்தது.



படிப்பகம்

www.padippakam.com

உடம்பின் அவஸ்தையைத் தாங்கமாட்டாமல், மனம் தவியாய்த் தவித்தது. காலையில் எழுந்து மகள் எழுப்பி விட்ட பிறகுதான் விடிஞ்சது தெரிந்து, வாரிச்சுருட்டியெழுந்து வாசலில் சாணிதெளித்துக் கூட்டத் தொடங்கினாள்.

இரவெல்லாம் விழித்துக்கிடந்ததால், விழிகள் சோர்ந்து திகுதிகுவென்று எரிந்து தொலைத்தது. சவுக்காரக்கட்டியை எடுத்துக்கொண்டு கொள்ளிடக் கரைக்குச் சென்றாள் குளித்து விட்டு வரலாமென்று. துண்டைத் தோளில் போட்டுக்கொண்டு தாயின் பின்னாலேயே சென்றாள் மேகலா.

"என்ன ராசாத்தி, சௌக்கியமா?" உப்பு வியாபாரம் செய்கின்ற தங்கவேலு கரிசனமாய் சிரித்தார்.

"என்னவோ இருக்கேன்யா - ஓம் புண்ணியத் துல." சுரத்தில்லாமல் பேசியவளை ஒருகணம் நின்று உற்றுப் பார்த்து விட்டு, "ராவெல்லாம் என்ன கண்ணுமுழிப்பா?"

"அடச்சீ. மவவேற நிக்கிறா. கொஞ்சம்கூட வெவஸ்த இல்லாம பேசுறியே." குரலில் கடுமை தெரிந்தாலும், உப்புக்காரனின் துளைக்கும் பார்வையும் வருடும் வார்த்தையும் மனசுக்கு ஆறுதலாகத்தான் இருந்தன.

"அட கோவிச்சிக்காத ராசாத்தி-வூட்ல மொழுவுற கழுவுற வேல இருக்காதா... நான் அதச் சொல்லுறேன், நீ என்னடான்னா தப்புத் தப்பா அர்த்தமெடுக் குறியே..."

"என்னையா, காத்தாலியே யேவாரத்துக்கு வந்துட்டே?"

"வேற வேலயென்னா. நாலுகாசு பாத்தாதானே இருக்கிறத கரயேத்த முடியும். அதவுடு ராசாத்தி. ஒஆளு 'வரப்போவ' இருக்கான்ல..."

"நானே வெம்பி வேக்காடா கெடக்கறேன், நீவேற நிண்டி நோனிக்குப் பட்டம் கட்டுறே"

"நீதான் புடிகுடுக்க மாட்டேங்குற. 'வேலய பாத்துட்டு' அப்புறம் சொல்லு ராசாத்தி."

"ச்சீ போய்யா" பதிலெதுவும் சொல்லாமல், கொள்ளிடக்கரையில் தனக்கு முன்னே போன மகளை நோக்கி நடக்கத் தொடங்கினாள் ராசாத்தி.

நேற்றைப்போல இன்றைய இரவையும் காத்திருத்தலோடு கழித்துவிடக்கூடாதென்று, 'அந்தாளு வருவானா? மாட்டானா? ரெண்டுல ஒண்ணு தெரிஞ்சி கிட்டுதான் வரணும், என்று தீர்மானமாய் முடிவெடுத்திருந்தாள்.

தண்ணீர் சலசலவென ஓடிக்கொண்டிருந்தது கொள்ளிடத்தில். ஆங்காங்கே மணலைக் குடைந்து லாரியில் லோடேற்றி, எங்கோ வரிசை வரிசையாய் அனுப்பிக் கொண்டிருந்தனர். உடைந்து கிடக்கும் சிமெண்ட் கட்டையில் இரண்டொரு கிழவிகள் துணிகளைத் தப்பிக்கொண்டிருந்தனர். காலை வெயிலில் தண்ணீர் ஜ்வொலித்துக்கொண்டிருந்தது. கெண்டைக் குஞ்சிகளும் - கெளுத்திகளுமாய் இடுப்பளவு தண்ணிரில் மேய்ந்தபடி நீந்திக் கொண்டிருந்ததை நீர் கண்ணாடிப் படிகமாய்க் காட்சியாக்கியபடி இருந்தது. ஊரில் இப்படி ஆசைதீர குளிக்க முடியுமா? பொட்டமண் குளம், குட்டையாகி சேறு குழம்பிக் கிடக்கும். எருமையும் பன்றிகளும் அடைந்து கொண்டு, உளை குழப்பி, தண்ணீரை சகதியாக்கி வைக்கும். இருந்தாலும், சாதித்திமிர் தங்களைத்தவிர 'காலனியாட்கள்' யாராவது குளத்தில் கால்வைத்து விட்டால் அவ்வளவுதான்....அடி பின்னி விடுவார்கள். 'பீ திங்கிற பண்ணி எறங்கி அடையலாம் - விட்டை போட்டு கொளத்த நாறடிக்கலாம் - பீ திங்கிற பண்ணிவாருக்காக நாக்க தொங்கப் போட்டுகிட்டு அலையிற 'ஈசப்பசங்க...' கல்யாண புதிதில் ஊர்த் தெரு குளத்தில் இறங்கி குளித்துக்கொண்டிருந்த போது, ஈசப்பய ஒருத்தன் வந்து, எந்தத்தெருடீ நீ என்று எகத்தாளமாய்க் கேட்டதோடு, துணிகளை எல்லாம் சேத்தில் திணித்து விட்டு, வஞ்சியபடியே கிட்டவந்து மாரப்புடுச்சி திருவினானே..... சே ஊரா அது. சாதிபாத்து ஒதுக்கி வெக்க தெரிஞ்ச கம்னாட்டிவளுக்கு சாதிக்காரிய படுக்கக்கூப்புடும்போது மட்டும் சாதி வேத்தும தெரியிலியாக்கும்....

ஒருவனை ஓட ஓட செருப்பால் அடித்தது நினைவுக்கு வர களுக்கென்று சிரித்துவிட்டாள். குளித்துக்கொண்டிருந்த பெண்களெல்லாம் ஒரு மாதிரியாய்த் திரும்பிப் பார்த்தார்கள். "என்னம்மா சிரிக்கிற?" என்று மேகலா அம்மாவின் முகம் பார்த்துக் கேட்டாள் "நேரமாச்சி, சீக்கிரமா குளிச்சிட்டு வாடி," என்று நேரடியாகப் பதிலொன்றும் சொல்லாமல், மகளை அழைத்துக்கொண்டு கரையேறினாள் ராசாத்தி.

தலைசீவி, சாமந்திபூவெச்சி, மகளை பள்ளியோடத்துக்கு அனுப்பி வைத்துவிட்டு, ராமநாதன் காளவாய்க்குக் கல்லறுக்கச் சென்றாள் ராசாத்தி. வெயில் ஏறிக்கொண்டே இருந்தது! மனதிலும்தான். வேலைசெய்யும் பெண்கள் கேலியோடும் கிண்டலோடும் மளமளவென்று வேலை பார்த்துக்கொண்டிருந்தனர். கை கட்லாகட்டையில் மண்நிரப்பி அழுத்தி ஈரசெங்கலை அச்சில் வார்த்துக்கொண்டிருந்தது. ராமநாதன் வீட்டு பண்ணையாள் வந்து ஆண்டை கூப்பிடுகிறார் என்று சொல்லி விட்டுச்சென்றான். கல்லறுத்துக் கொண்டிருந்தவர்களெல்லாம் தங்களுக்குள் குசுகுசுத்துக்கொண்டார்கள்.

என்னவோ ஏதோவென்று மோட்டார் கொட்டாயிக்குச் சென்றாள். தென்னந்தோப்பில் ராமநாதன் ஆண்டை நார்க்கட்டிலில் குந்தியிருந்தார். முறுக்கு மீசையும் வெற்றிலைக் காவியேறிய பல்லுமாய் இளித்தபடி காத்திருந்தார் ஆண்டை.

"வா ராசாத்தி வா வா,"

"கும்புடுறேங்க மொதலாளி.... கூப்ட்டீங்கன்னு கட்டாரு சொன்னாரு."

"ஆ...ஆங், இப்படி ஒக்காரு, ஒங்கிட்ட பேசணும் னுதான் கட்டார கூபட்டாறச் சொன்னேன்."

"இந்தாளு அப்படி என்னாத்த பேசப்போறான் மிஞ்சி மிஞ்சிப்போனா ஒஞ்சாமான் நல்லாருக்கு செத்த எடங்குடுங்கிற மாதிரி, வார்த்தைய ஒளிச்சி நல்ல மனிசனாட்டம் நயமா பேசுவான். வேறென்ன?... எனெத்தான் பேசப்போறான்னு கேட்டுத்தான் பாப்போமேன்னு மோட்டார்தண்ணி ஓடுற வாய்க்


படிப்பகம்


www.padippakam.com

கால் மேட்டில் மண்ணில்லாத இடமாய்ப் பார்த்து, அருகுவேரோடி தழைத்து பச்சைகட்டி இருந்த இடத்தில் தன் குந்தாணி சூத்தை அமுத்தி குந்தினாள்.

“நீ இந்த ஊருக்கு வந்த நாளா நானும் பாத்து கிட்டுதான் இருக்கேன் ராசாத்தி, சின்ன வயசிலேயே புருஷனப் பறிகொடுத்திட்டு கைப்புள்ளையும் நீயும் வந்தப்ப, வெசனப்பட்ட சனங்கஞல நானும் ஒருத்தன்னு ஒனக்குத் தெரியாது ராசாத்தி. கட்டார்ர அனுப்புச்சி உன்னியும் புள்ளையும் கூட்டி வந்து யெங்கொட்டாயில தங்கவச்சி, ஊட்டுவேல தோட்ட வேலைய பாக்கச்சொல்லுலான்னு நெனச்சேன், நம்ப பறபெரியவன் மவன் கோஞ்சாமி ஊடெடுத்து ஒன்று தங்க வெச்சிருக்கிறான்னு. சொன்னானுவ.....ம்..... அதான் பேசாம இருந்துட்டேன்.”

“அதுலான் முடிஞ்சிப்போன கத. இப்ப சொல்ல வர்ற விசயம் என்னென்னு சொல்லுங்க முதலாளி....” போயி கல்லறுக்கணும். நாழியாவுது....”

‘ம்’ சொல்லுதேன்.... முந்தா நாளு கோஞ்சாமி என்னெப் பாக்க வந்தான். தெரிஞ்சோ தெரியாமலோ ராசாத்தி வாழ்க்கையில குறுக்கிட்டுட்டேன் மொதலாளி. அவளால எங்கூட்டுல பெரச்சின வர்றது.... புள்ளை வோ பெருசாவுது. இனியும் நீ அவவூட்டுக்குப்போனா நானும் யேம்புள்ளவுளும் ஆயி வூட்டுக்குப்போறத தவிர வேற வழியில்லன்னு எம்பொஞ்சாதி சொல்லுறா... ராசாத்திய பாத்து இத சொல்ல மனசில்ல.... அதான் ஒங்ககிட்ட சொன்னேன். அவள தொட்ட பாவத்துக்கு ஆயிரமோ ரெண்டாயிரமோ கொடுத்துடுறேன். நீங்க தான் அத்துவுடனும் முதலாளின்னு, சொல்லிட்டுப் போயிருக் கிறான். நீயென்ன சொல்லுற ராசாத்தி?” கூப்பிட்டு இப்படியொரு செய்தியை முதலாளி சொல்லுவாருன்னு எதிர்பார்க்காதவளாய் அதிர்ந்து போயி ருந்தாள். என்ன பேசுவதன்றே தெரியாதவுளாய் குழம்பிப் போயிருந்தாள். தீக்குள் விரலை வைத்ததுபோல் துடித்துப் போனாள்.



“அவரே முடிவெடுத்த பின்னாடி நான் என்னாத்த சொல்ல முதலாளி. நான் என்ன கட்டிகிட்டு வந்தவளா உரிம கொண்டாட... எல்லாம் தல எயித்து...” துயரத்தின் அடர்த்தியை மனதிற்குள் பூட்டிவைக்க முடியாமல்.... விசும்பலால் வெளியே றியது கண்ணீர்.

“இப்ப அழுது என்னாவப்போவுது ராசாத்தி, அவங்கிட்ட சொல்லி ஆயிரமோ ரெண்டாயிரமோ வாங்கித்தர்றேன். கவலப்பட்டு இனி ஆவபோவ தென்ன சொல்லு. ஒன்னால கீழத்தெருவுல இருக்க முடியிலன்னா சொல்லு, யேந்தோட்டத்துலியே ஒரு குடிசயப்போட்டு குடுத்துடுறேன்.... ஒனக்கும் ஒரு பாதுகாப்பா இருக்கும்....

“யோசிச்சி சொல்லுதேன் முதலாளி -ரொம்ப நாழியாயிடுச்சி. நான் வர்றேங்க...” முந்தானையால் முகத்தைத் துடைத்துகொண்டே முதலாளியைப் பார்த்து ஒரு கும்பிடு போட்டுவிட்டு கல்லறுக்கிற களத்திற்குத் திரும்பினாள். கொழுந்து வெற்றிலையில் சுண்ணாம்பைத் தடவியபடியே ராசாத்தி நடந்து போவதை வைத்த கண் வாங்காமல்பார்த்துக்கொண்டிருந்தார் முதலாளி.

கூலியாட்கள் ஒவ்வொருவரும் முதலாளி ஏன் கூப்பிட்டு அனுப்பினாரென்று விசாரித்தார்கள் கேட்டவர்களிடம் சால்சாப்பாய் ஒரு பதிலை சொல்லிவிட்டு, கல்லறுக்கத் தொடங்கினாள். விரியும் விரல்களும் மண்ணைப் பிசைவதிலும், கட்லாவில் ஈரமண்ணை நிரப்பி செங்கல்லை வார்ப்பதிலும் கவனமாய் இருந்தாலும் மனம் தன் ஆளைப்பற்றிய யோசனையிலேயே இருந்தது.

பள்ளிக்கூடம் விட்டு வந்து பையைத் திண்ணையிலுள்ள ஆணியில் மாட்டிவிட்டு, வாசலை, விளாரிமெலாரால் கூட்டி விட்டு மேகலா தண்ணீர் தெளித்துக் கொண்டிருக்கும்போதே ராசாத்தி மோட்டரில் குளித்துவிட்டு ஈரசேலையோடேயே வந்து உள்வீட்டிற்குள் நுழைந்து, சேலை மாற்றிக்கொண்டு வந்து திண்ணையில் குந்தினாள். வேலை செய்தவரை போதுமென்று மகளைப் படிக்கச் சொன்னாள். தெருவிளக்குகள் கண்ணை ஒரு கணம் சிமிட்டி விட்டு எரியத் தொடங்கின. எதிர் வீட்டுக்குச் சென்று முக்காலிட்டர் சீசாவால் ஒரு சீசா சீம தண்ணியை கடன் வாங்கி வந்து அரிக்கேனில் ஊற்றியதுபோக மீதியை சிம்னியில் ஊற்றி நிரப்பி விட்டு, சீசாவை உள்வீட்டு ஆணியில் மாட்டினாள். நீலம் இழையோட சீமைத்தண்ணி சீசாவின் அடியில் கால்வட்டமாய் சுழன்ற நிலையில் தளும்பி, பின் அடங்கியது.

திண்ணையோரத்தில் கிடந்த விறகுக்கூட்டிலிருந்து ஒரு மெலாரையும் நான்கைந்து குச்சிகளையும் எடுத்து அடுப்பில் ஒடித்து வைத்து, அலுமினிய தேக்சாவில் உலை வைத்தாள் ராசாத்தி. முதலாளி கூறிய வார்த்தைகளே நெருப்பில் சூடேறி வெடிக்கும் வாகை நெற்றுகளைப்போல் மனதில் ஓயாமல் தெரித்து காயமுண்டாக்கிக்கொண்டிருந்தது. மகள் வாய்ப்பாட்டை மனனம் செய்து கொண்டிருந்தாள். தான் எப்படி சின்னப்பட்டு சீரழிந்தாலும் சரி, இவளை எப்படியாவது படிக்க வைத்து தன் காலுல நிக்க வைக்க வேண்டும்.

எங்கு சுத்தி எப்படி வந்தாலும் கடைசியில் அந்த ஆளைப்பற்றிய நினைவில்தான் வந்து நிற்கிறாள். உலை தளாபுளாவென்று கொதிக்கத் தொடங்கியது. கழனிவிட்டு கல்லரித்து வைத்திருந்த அரிசியை உலைநீரில் கொட்டி வடித்திட்டால் மூடி வைத்து விட்டு, அடுப்பின் காங்கலை விட்டு எட்ட நகர்ந்து கொண்டாள்.



படிப்பகம்

www.padippakam.com

நெஜமாவே அந்த ஆள் அப்படி சொல்லி இருக்குமா? இல்ல இந்த மீசக்காரப்பயதான் இட்டுக்கட்டிச்சொல்லுறானோ? தீர்மானிக்க முடியாமல் மனம் குழம்பித்தவித்தது. என்ன ஆனாலும் சரி அவனுக்காக நேற்றுப்போல் காவக்காத்துக்கிட்டு இருக்கப்படாது. நேரில் போயி என்ன? ஏதுன்னு பேசிட வேண்டியதுதான் என்று சமையல் வேலையில் வேகம்காட்டினாள் ராசாத்தி.

சாப்பிட்டு முடித்த சுருக்கு தெரியாமல் மகள் அசந்து தூங்கிக்கொண்டிருந்தாள். பாவாடை விலகிக் கிடந்தது. சரியாக எடுத்துப்போட்டாள். அவளை அறியாமலேயே பெருமூச்சு அனலாய் வெளியேறியது. போர்வையை எடுத்து மகளைப் போர்த்தி விட்டு, துண்டால் முண்டாசு கட்டிக்கொண்டு மூங்கில் பிளாச்சு கதவை இழுத்து சத்தங்காட்டாமல் சாத்திவிட்டு, எரவாணத்தில் சொருகி வைத்திருந்த கருக்கருவாளை கையிலெடுத்துக்கொண்டு தெருவில் இறங்கி விடுவிடென்று நடக்கத் தொடங்கினாள்.

தெருவிளக்கு வேவுக்காரனைப்போல் நின்று கொண்டிருந்தது. தெருவைக் கடந்து குறுக்குவழியில் புகுந்தாள். ஆண்களே போகத்தயங்கும் பாதையில் இவளின் பாதங்கள் வேகமாய் முன்னேறின. பணியில் கிடந்த பூண்டுச்செடிகளில் பாதம் அழுந்தியதும், குளிரின் தீண்டல் கால்வெடி நரம்பை ஜிவ்வென்று சுண்டியிழுத்தது. தளிர்களின் மென்மையும் முள் செடியின் சுரீரென்ற தைத்தலும் அவளின் பாதங்களுக்கு ஒன்றாகவே இருந்தது. கும்மிருட்டு திக்குத்திசை தெரியாமல் மிரட்டின. ஆனாபழத்தின் வாசம் மூக்கைக்கவ்வியது. கவனமாய்ப்பார்த்து நடந்து சென்றாள். அந்தச் செடியிருக்கும் இடங்களில் 'பெயர் சொல்லாததுகள்' ஊர்ந்து கொண்டிருக்கும் என்பது செவிவழிச்செய்தி. எங்கிருந்தோ காற்றில் மிதந்து வரும் நரியின் ஊளை துணிச்சலைக் கொஞ்சம் கெல்விப்பார்த்தாலும், பிடிவாதமும் மனத்திடமும் அவளை தயக்கமின்றி முன்னேற வைத்தன. கருக்கருவாளை இறுக்கமாய்ப்பற்றியிருந்தாள். மின்னும் நட்சத்ரங்களைப் பார்த்து திசையறிந்து. கீழ்த்திசை பார்த்து எட்டி நடையைப் போட்டாள். மகள் முழித்துகொண்டால் பயந்துவிடுவாள், 'அவள் முழிக்காங்காட்டியும் ஒண்ணுல ரெண்டு கேட்டுகிட்டு, போனசுருக்குத் தெரியாமல் ஊடுவந்து சேரணும்' அந்தோணியாரை நினைத்து வேண்டிக்கொண்டாள். 'அவரு உசுரோட இருந்திருந்தாயெனக்கு இந்தெ நெல வருமா?' கணவனின் இழப்பும் பிரிவின் வலியும் நீர்ப்படலமாகி நிழலாடின.

குறுக்கு வழியைக் கடந்து-கொள்ளிடக்கரையில் ஏறி செம்மண்பாதையில் நடக்கத் தொடங்கினாள் வன்னிமரத்தின் விரிந்த கிளைகள் பெண்ணொருத்தி தலைவிரி கோலமாய் நிற்பதைப்போல் தெரிந்தது. கரையோரத்தில் கம்பீரமாய் நிற்கும் பனைகள் எழுப்பிய சரசரவென்ற ஒலிகூட, இறுகிக்கிடந்த அவள் மனதில் சிறு துணுக்கலைக்கூட உண்டாக்காமல், வெற்று முணுமுணுப்பாகவே காற்றில் கரைந்தது.

பல்லாண்டுகளாய் வெட்டப்படாத இலவமரங்கள் நெடிதுயர்ந்து கிளை விரித்து ஆலமரங்களைப்போல் பிரம்மாண்ட தோற்றத்தைப் பெற்றிருந்தன. கிளையெங்கும் அடர்பச்சை இலைகள் ஊடாக பழுத்துப் போயிருக்கும் இலைகளைப் பார்க்கும்போது, வெளிர் மஞ்சள் நிற மலர்களால் கொழித்து நிற்கிறது. மரம் என்று எண்ணத்தோன்றும். மரத்தின் கம்பீரமும் அழகும் இருளில் கரைந்துபோய் செம்மண் பாதையையே தன் படர்ந்த கிளையால் மறைத்து, பாதையே இல்லாததுபோல் இருளை கவிழ்த்துவிட்டு குகைக்குள் நடப்பது போன்ற பிரமையைத் தந்தது.

செம்மண்சாலையில் பதிந்து கிடக்கும் பீக்கருவை விஷமுட்கள், காலைப் பதம்பார்க்கும் கலிச்சைகள், குறுக்கும் நெடுக்கும் இரைதேடி ஓடும் விரியன், நல்லது, கொடிய நஞ்சை சுமந்த கருவாலைகள் இதுபோன்ற கிலிபடிந்த எண்ணங்கள் துளியும் எழாதபடி, சிந்தை முழுவதிலும் அந்த ஆளைப்பற்றிய நினைப்பு மட்டுமே பரவியிருந்தது. அவனை எப்பொழுது முதன் முதலாய் கூடிக் கலந்தோம்....அவளுக்குள் சித்திரங்களாய் விரிந்து கொண்டிருந்தான்.

கட்டியவனை விபத்தில் பறிகொடுத்து விட்டு, இரண்டு வயது குழந்தையோடு புருஷன் வீட்டில் அல்லாடியவளை, 'துக்கிரிப் புடிச்சவ, எப்பொ அடியெடுத்து வெச்சாளோ அப்பவே எங்குடும்பம் ஊருசிரிக்க கேபலமா ஆயிடுச்சி' என்று மாமனாக்காரரும்,' எந்த நேரத்தில் ஆளானாவோ எம்மவனுக்கு எமனா வந்து சேந்தாளே....' என்று மாமியாக்காரியும், ஒவ்வொரு நாளும் பொழுதுமாய் வசவுச் சாட்டையை மாற்றி மாற்றிச் சுழற்றி மனசெங்கும் ரணமாக்கி மகிழ்ந்தார்கள். இது போதாதென்று பொண்டாட்டி இருக்கும்போதே ராவானால் படுக்கக்கூப்பிட்டு வம்பிழுப்பான் பெரியகொழுந்தன் புருஷனுக்கு விரித்த முந்தானையை இன்னொருவனுக்கு விரிப்பதா? முடியாது' என்று மறுத்த ஒரே குற்றத்துக்காக ஊரானை இழுத்துப்பேசி 'வேசி' என்று பட்டம் கட்டினார்கள். வேலைப்பளுவையும் வாசாப்பையும் தாங்கிக்கொண்டாவது வாழ்த்து விடலாம். ஆனால் ஊர் உறவுக்கு முன்னால் வேசியாக்கி, எல்லோருக்கும் முன்னால் சீலையை அவுத்து உதைத்துத்தள்ளி அவமானமாக்கியபின், இந்த உயிரை வைத்துக்கொண்டு இனியும் வாழ்வதா? என்று உயிரை மாய்த்துகொள்ள வேண்டி புருஷன் வீட்டு விட்டு,உறவுகளை விட்டு கைக்குழந்தையோடு ஓடிவந்தபோது 'தற்கொலை பற்றிய எண்ணங்கள் கோழைகளின் மூளையில்தான் பிறக்கும் உன்னையும் உன் குழந்தையையும் நான் காப்பாற்றுகிறேன். என் பின்னால் வா' என்று ஆறுதல் சொல்லி அழைத்து வந்து ஆதரவு குடுத்தது அந்த ஆள்தானே..... அதுவா இப்படி சொல்லியிருக்கும்? ஆயிரம்கேள்விகள் மூளை நரம்புகளைக் கொத்தித் தொலைத்தபடியே இருந்தன.

நடக்கநடக்க குகை விரிந்துகொண்டே சென்றது. குகையெங்கும் வரையப்பட்டிருந்த சித்திரங்களெல்லாம் இவளைப் பார்த்துச் சிரிப்பதுபோலவே இருந்தது. முறுக்கிய மீசையும் காமம் ததும்பும் கண்களுமாய் இவளையே பார்த்து முறைத்துக் கொண்டிருந்தான். திரும்பி மீசைக்காரனைப் பார்த்ததும் திடுக்கிட்டு எப்படித் தப்பிப்பது என்று யோசித்தபடி நின்றாள். மீசைக்காரனின் கரிக்கோடால் வரையப்பட்ட உதடுகள் மெல்ல அசையத் தொடங்கின. குகையை விட்டு வெளியேறும் வழிதெரியாமல் அதே இடத்திலேயே நின்றபடி மலங்க மலங்க விழித்துக்


படிப்பகம்

www.padippakam.com

கொண்டிருந்தாள். அசைந்த உதடுகளை முண்டிக் கொண்டு வெளியே வந்த வார்த்தைகளை, அவனருகில் வரையப்பட்டிருந்த பெண் தன் கையில் வைத்திருந்த பாசிமணியின் இடையிடையே கோர்க்கத் தொடங்கினாள் ஒவ்வொரு மணியாய் கோர்க்கப்பட்ட வார்த்தைகள் நாகக்கல்லைப்போல் ஒளிவீசின. அவளின் ஆடை காற்றில் விலகும் போதெல்லாம், பெருமூச்சால் சூடேறி பெருத்துக்கிடந்த கொங்கைகள் பார்க்கும் நபர்களைச் சுழற்றிப்போட்டன. இப்பொழுது மீசைக்காரனின் கரங்கள் அவள் தோளை இறுகப்பற்றித் தழுவத் தொடங்கின.

"ஆருமத்த அனாத நான்," என்று அரற்றினாள்.

"ஏங்கொழுவுக்கேத்த நெலம் நீ," போதையோடு பாராட்டினான். அதற்குள் மீசைக்காரனும் - அவளும் வெற்றுடம்போடு வார்த்தைகளைத் தொலைத்துவிட்டு உடல்களால் உரையாடிக்கொண்டிருந்தார்கள். தான் எங்கிருக்கிறோமென்று நினைத்த உடனேயே மேலும் குழப்பமாகி, ஓவியமாகிப்போன தன் உடலை தொட்டுத் தொட்டு ஆச்சர்யப்பட்டுக் கொண்டாள் ராசாத்தி.

செருமிக்கொண்ட பிறகு மீசைக்காரன் பேசத் தொடங்கினான், "பயப்புடாத புள்ளே, ஒன்ன அந்தராசியா உட்டுட மாட்டே."

"கம்முனாட்டி தானேன்னு என்னையும் எம்மவளையும் கைவிரிச்சிடாதய்யா," தேய்ந்துபோன கிராமபோன் ரெக்கார்டாய், குரலூசி ஒரே இடத்தில் அதே வார்த்தையை மீண்டும் மீண்டும் குழறியபடியே ஒலித்துக்கொண்டிருந்தது.

ஓவியமாயிருந்த ராசாத்தி துகிலுரிந்த நிலையில் மல்லாந்து கிடந்தாள். மீசைக்காரன் மூர்க்கமாய் தழுவியதோடு, தன் அழுக்கேறிய கோவணத்தை உருவிக் கெடாசிவிட்டு, அவளை அருகே இழுத்து தன்னையே அவளுக்குள் நுழைத்துக்கொண்டு, வார்த்தைகள் இல்லாத காட்டில் இரண்டாம் முறையாக முயங்கிக்கிடந்தான். இருள்குகையில் அவனும் அவளும் ஒன்றாகப் பிணைந்துகிடந்தார்கள். யாருமற்ற வனாந்தரம் அவர்களைத்தன் மடிக்குள் பாதுகாப்பாய் ஒளித்துக்கொண்டது. அவனின் தீண்டலும், வியர்வைகவிச்சையும் உசுப்பேற்றிவிட முனகத் தொடங்கினாள்.

அம்மாவின் குரல் கேட்டு விழித்துக்கொண்ட மேகலா, முதலில் பயந்தாலும் அம்மா தூக்கத்தில் பெனாத்தும் என்று யூகித்தவளாய், "அம்மா.... அம்மா...." என்று தோளைப்பற்றி உலுக்கினாள். மகளின் தொடலும் குரலொலியும் அவள் தூக்கத்தைக் கலைக்கவே, எழுந்தவள் இதுவரை கனாவா கண்டோம் என்று உணர்ந்தவுடன், எழுந்து திண்ணையில் வந்து குந்தினாள். ஒன்றுக்குப்போய்விட்டு வந்து படுத்தவள் விழிகள் திகுதிகுவென்று எரிந்தன. உள்ளுக்குள் படிந்து கிடந்த துயரம் பீறிட ஒப்பாரி வைக்கத் தொடங்கினாள்.

"ஏம்மா அழுவுறே?"

அம்மாவின் ஒப்பாரி மேகலாவை இறுக்கிப் பற்றிக்கொண்டு துயரம் கொள்ள வைத்தது.

"சொல்லுமா, ஏன் அழுவுறே?" அம்மாவின் அழுகைக்குக் காரணம், காளவாயில மேஸ்திரி வேலபாக்கும் அம்மாவோட ஆளு ஊட்டுப்பக்கம் ஒருவாரமா வராததுதான் என்று யூகித்தவளாய், மேலும் கேள்வி எதுவும் கேட்காமல் அம்மாவின் ஒப்பாரியிலேயே கரைந்து போயிருந்தாள்.

மகளை ஆதரவாய் தடவியபடியே, "நாம மோசம்பொயிட்டோம்டீ, ஒப்பஞ்செத்தப்பக்கூட இப்படி நான் தேரோட மாலையாக்கெடந்து தெவைக்கிலடீ. ஒப்பாரி அழுவகூட என்னெ நனைக்கிலடி... வக்கத்து கெடக்கிற நாறக்கூதி ஒனக்கு புருஷன் ஒரு கேடான்னு அடிச்சி தொரத்திட்டாண்டி மவளே. என்னெ அடிச்சி தொரத்திட்டாண்டி..."

நடுசாமமென்னு பார்க்காமல் இவள் தேடிக் கொண்டு போனபோது, காளவாய் போட்டிருந்த கொல்லையில் கட்டிலைப்போட்டு காவலுக்குப் படுத்திருந்தான் கோவிந்தன். இவளைக் கண்டதும் என்ன ஏதென்று ஒரு வார்த்தைகூடப் பேசாமல் வையத்தொடங்கினான்.

நான் என்ன ஓம்புருஷனாடி தேவிடியா, தேடிக் கிட்டுவர்றே. அறுத்த கம்னாட்டினுகூட பாக்காம ஒன்னியும் ஓம்மவளையும் கூட்டிகிட்டு வந்து இங்க ஊடு பாத்து இருக்க வெச்சேனே. அந்த மதமாடி குச்சிகாரி, ஒன்ன உப்புகாரங்கிட்ட மல்லாறச்சொன்னது-

"அய்யோ... அய்யோ. கானாததக்கண்டேன்னு சொல்லுறியே... இது அடுக்குமாயா? ஏம்புருஷனுக்குப் பெறவு ஒங்கிட்டதாய்யா யெம்முந்திய விரிச்சேன்- என்னெப்போயி சொல்லுறியே! அந்தோணியாரே இந்த அக்குறும்ப கேப்பாரில்லியா? நான் வந்த விதியா இது?"

தலையில் அடித்துகொண்டு அழுதாள் ராசாத்தி. "ராமநாதன் மொதலாளிகிட்டதான் சொல்லி இருக்கேன்லடி கம்முனாட்டி செறுக்கி. இங்கே எதுக்கிடி வந்த? தொறக்கவா?"

"ஆமய்யா தொறக்கத்தான் வந்தேன். இப்படி அடவாதையா பழியபோட்டுட்டு அத்துகிலாம்னு நெனைக்காத... கூட்டிக்கிட்டு வந்தப்ப தெரியிலியா நன் கம்னாட்டிதான்னு....அப்ப காணாததக் கண்டமாரில்ல இளிச்சு இளிச்சுகிட்டு வந்தே. இப்ப நான் ஆறுனகஞ்சி பழங்கஞ்சி ஆயிட்டன் இல்லே."

"வாயமூடுறி ஊரு மேயபோனவளே, கமுக்கமா செய்யறதையும் செஞ்சிட்டு இங்க வந்து நடிச்சா காட்டுற."

"யாரடா ஊருமேலே போனவன்னு சொன்னே தேவ்டியாப்பயலே. ஒரு தாயயும் புள்ளயும் நட்டாத்துல கொண்டு வந்து உட்டுட்டு ஓடலாம்னா நெனக்கிற... கம்னாட்டி கம்னாட்டி..."

ஆங்காரமாய் ராசாத்தி பதிலுக்கு வாயடித்துக் கொண்டிருந்த போதே, எழுந்து வந்து நின்னநிலையில எட்டி உதைத்தான். கட்டாந்தரையில் மல்லாக்க விழுந்தவள், சுதாரித்து எழுவதற்குள், தலைமயிரைச் சுழட்டிப் பிடித்து முதுவுலேயும் தொடையிலேயும் சரமாரியாய் உதைக்கத் தொடங்கினான்.

"அய்யா சாமிவளா, கேக்க ஒரு நாதியில்லயா, யாருமத்தவள இப்படி காட்லவெச்சி கொல்லுறானே, அவங்காலுல விரியம்புடுங்க..." மேலும் மேலும் வெறிவந்தவனாய் மாற்றி மாற்றி உதைத்தான். இருட்டில் உதை எங்கு விழுகிறது என்று தெரியாமல் கால் மூர்க்கமாய் அவளைப் புரட்டிப்போட்டுக் கொண்டிருந்தது.


படிப்பகம்

www.padippakam.com

தலைமயிரை இறுகப்பற்றி உலுக்கினான். மயிர்க்கால்கள் பிய்ந்து வலி உயிரைத் தின்றது. ஒவ்வொரு உதை விழும்போதும் காடே அதிரும்படி அலறினாள். இன்னொரு உதை பலமாய் அடி வயிற்றில் - உயிர்நிலையில் விழுந்ததும்தான் - மரண பயம் அவளை பீதியடைய வைத்தது. மகளுக்காக உயிர்வாழவேண்டுமென்ற உத்வேகம், விடுபட்டு ஓடினால் தேவலை என்ற நிலையில் இருந்தவள், வேறு வழியின்றி வலிதாளாமல் வெறி கொண்டவளாய் லாவி அவனின் விதைக்கொட்டையை இறுகப்பற்றிக்கொண்டு நெருக்கத் தொடங்கினாள். அவனும் விடாமல் முஷ்டியால் குத்த ஆரம்பித்தான். மேலும் அவள் இரண்டு கைகளாலும் பற்றி விதைகளைக் கசக்கத் தொடங்கவே, வலிதாளாமல் தலைமயிரை விட்டுவிட்டு அவன் அலறினான். இதுதான் தப்பிக்கக்கிடைத்த வழியென்று அவிழ்ந்த சேலையைக் கூட சுற்றிக்கொள்ள அவகாசம் இல்லாமல், எழுந்து வரப்பில் விழுந்தடித்துக்கொண்டு ஓடினாள்.

"தேவ்டியா முண்ட, ஆளகொல்லவா வந்த? இருடி வர்றே" என்று வேட்டியை உருவிக் கெடாசிவிட்டு துரத்திக்கொண்டு ஓடிவந்தவன், கல்லில் இடறித்தடுமாறி கீழே விழுந்தான். ஆக்ரோஷமான அவன் வார்த்தைகளும் அலறலும், வேகமாய்ப்பாய்ந்து வந்து அவளை எட்டிப்பிடிக்க முடியாமல் காற்றில் தன்னந்தனியாய் தேய்ந்து கரைந்தன.



"அம்மா எப்பொழுது போய் அந்தாளைப் பார்த்தது. நம்மோடுதானே சோறுதின்னு விட்டு படுத்தது," முதலில் எதுவும் விளங்காவிட்டாலும், பிறகு யூகித்துக் கொண்டாள் மேகலா. நம்மைத் தனியாகத் தூங்கப் போட்டுவிட்டு அந்தாளைப்போய் பார்த்து, ஒழ்பாட்டும் ஒதையும் வாங்கிக் கொண்டு வந்திருக்குது. தனக்கு எதுவும் தெரியாது என்று அம்மா ஒவ்வொரு முறையும் "போய்விட்டு" வருது. எல்லாம் வழக்கமானதுதானே. தூக்கம் கண்ணைச் சுழற்றியது. விடியறதுக்கு இன்னும் நேரம் இருக்கிறது. சரி அதுபாட்டுக்கு அழுவுட்டும், நாம எப்படி ஓச்சிவுட முடியும்? சொன்னா கேக்குமா? ராசாத்தியின் ஒப்பாரி தாலாட்டாகி மேகலாவைத் தூங்க வைத்திருந்தது.

காலையில் எழுந்திருக்கும்போது, சாணிதெளித்து வாசலைப்பெருக்கிவிட்டு, அம்மா கோலம்போட்டுக் கொண்டிருந்தது. மேகலா எழுந்து வீட்டின் பின்பக்கம் சென்று மூத்திரம் விட்டுவிட்டு வந்தபோது, கோலத்தின் நடுவே பிடித்து வைக்கப்பட்ட சாணி உருண்டையில் செருகப்பட்ட பரங்கிப்பூ சிரித்துக் கொண்டிருந்தது.

எப்பொழுதும் போலவே ராத்திரி எதுவும் நடக்காததுபோல் அம்மா சிரித்த முகத்தோடு இருந்தது. தால் எப்படி வலியையும் துயரத்தையும் ஜீரணித்துக்கொள்ள முடிகிறது? புரியாத புதிராய்த் தெரிந்த அம்மா எப்பொழுதும் இப்படித்தான் இராவெல்லாம் ஒப்பாரிவைத்து தூங்கவிடாமல் இம்சிக்கும் ஆனால் விடிஞ்சதும் ராத்திரி எதுவுமே நடக்காததுபோல வீட்டுவேலைகளைச் செய்யும். எதிர்வீட்டு சனங்களிடம் சகஜமாகப் பேசும். அம்மாவைப் புரிந்துகொள்ளவே முடியாது. அது ஓர் ஆச்சர்யம்.

இப்படித்தான் ஒருமுறை (அப்ப நான் நாலாம்பு படிச்சிகிட்டு இருந்தேன்) சோறுதின்னு, பானைய ஊத்தி மூடிட்டு அம்மாவும் நானும் படுத்தோம். எனக்கோ தூக்கம் கண்ண சொழட்டிகிட்டு வருது, அம்மா என்னடான்னா படுத்த செத்தைக்கெல்லாம் எழுந்து குந்திகிட்டு ஒப்பாரி வெக்கத் தொடங்கிடுச்சி. ஏன் அழுவுதுன்னு முதல்ல புரியில. அப்புறம்தான் நேத்தே அம்மா சொல்லிகிட்டு இருந்தது நெனவுக்கு வந்தது. அப்பா செத்த நாளிதுன்னு. அழுதுகிட்டேருந்த அம்மா, ஒப்பாரிய எப்ப நிறுத்திச்சி, படுத்திச்சின்னேத் தெரியில. மூத்திரம் முட்டிகிட்டு வரவும் முழிப்பு தட்டிடுச்சி. பார்த்தா படுக்கையில அம்மாவக்காணுல. ஆனா அம்மா குசுகுசுன்னு பேசுற சத்தம் மட்டும் கேட்டுகிட்டே இருந்தது. லாந்தரு கம்மலா எரிஞ்சிகிட்டு இருக்குது. இதுபோல சமயங்களுல ஒண்டியா, எழுந்தா அம்மா அடிக்கும்னு தெரியும். தூங்கிறதாட்டமே கண்ணெ மூடிக்கிட்டுப் படுத்துக்கெடந்தேன். ஆளு ஆருன்னேத் தெரியில. அம்மாகிட்ட அந்தாளு சன்னமான குரல்ல பேசிகிட்டே இருந்தான். செத்தநாழி கழிஞ்சப்புறம்தான் ஆளு ஆருன்னேதெரிஞ்சிகிட்டேன். ஐசு யேவாரஞ் செய்யிற லூர்து அண்ணனோட குரலுதான் அது. அதுயேன் நடுராத்திரியில வந்து அம்மாகிட்ட பேசிதுன்னுதான் தெரியில. அதுவும் தனியா கூடத்துல போயிபேசிகிட்டு இருக்காங்க. ஏன் தனியாப் போயி பேசிக்கிறாங்க? எதுவுமேப் புரியில. எப்பத் தூங்கினேன்னேத் தெரியில. காத்தால பாத்தா பாயெல்லாம் மூத்திரத்தில நனைஞ்சி தெப்பமா கெடக்கு. விடிஞ்சதும் ஏண்டியிப் படி படுக்கையிலேயே பேஞ்சிட்டேன்னு அம்மா அடிச்சதும் எனக்குக் கோவம் வந்துடுச்சி.

"ஒன்னாலதான் நான் பாயிலேயே பேஞ்சிட்டேன்"

"என்னடியிது, அரசியமா இருக்கு. ஒன்ன நாயெப்படி வூட்டுக்குள்ளயே மூத்திரம் உடச்சொன்னேன்..."

"ராவுல மூத்திரம் வந்தா என்ன எழுப்புடி, அப்படி நீ முழிக்கிறப்ப நான் இல்லாட்டிப்போனா நான் வந்தப்பிறவு போவுலாம்னு நீதானே சொன்ன..."

"ஆமா... நீ என்னிய எளுப்ப வேண்டியதுதானே"

"நீதான் ஐசுவிக்கிற லூர்து அண்ணங்கிட்ட பேசிகிட்டு இருந்திய..."

"ஏண்டி தட்டுவாணி, காலங்காத்தால கனா கண்டு பெனாத்துற, இங்க லூர்தும் வல்ல ஒருநோணியும் வல்ல. என்னுகிட்ட சொன்னமாரி வெளியில சொல்லாத. சொன்னா அப்புறம் கனாவே வராது.... என்ன...?"


படிப்பகம்

www.padippakam.com

அதுக்குப் பொறவு அம்மா எப்ப ஒப்பாரி வெச்சாலும், சேர்ந்துகிட்டு அழுவுறதையும், ஏன் எதுக்குண்ணு கேள்வி கேக்கிறதையும் உட்டுட்டேன், அப்பாவைப் பத்தி அடிக்கடி சொல்லி இருக்கு. நான் அப்பாவ போட்டாவுலதான் பாத்திருக்கேன். செவப்பா ஒசரமா அப்பா எவ்ளோ அழகு. அம்மாவாட்டம் மொந்தையா அப்பா இல்ல. அப்புறம் காளவாயில் மேஸ்திரி வேலைபாக்கிற அந்த ஆளுதான் அப்பப்ப வூட்டுக்கு வரும். அந்தாள அப்பான்னு கூப்புடச் சொல்லும். அடிக்குமே, பயிந்துகிட்டு அப்பாம்பேன். ஆனா புடிக்காது. எடையில அந்த ஆளுக்கும் அம்மாவுக்கும் சண்ட.. ஆனா என்னா சண்டன்னு தெரியில. அப்ப ஒருநாள் அம்மா ஒப்பாரி வெச்சிது. அண்ணைக்கும் லூர்து அண்ணன் வந்து பேசிகிட்டு இருந்துட்டுப்போனது. ஸ்கூலுக்கு போறப்ப, தெருவுல வெளையாடுறப்ப காசுவாங்காம ஐசு குடுத்துட்டுப் போவும். ஏன் எனக்கு மட்டும் ஓசியில ஐசு குடுக்குதின்னு தெரியாது. இப்பெல்லாம் அந்த அண்ணங்கிட்ட நான் ஐசு வாங்கிறது இல்ல. அதப்போல கடத்தெருவுல டீ போடுற கணேசு மாமா அப்பப்ப வந்துட்டுப் போவாரு. ஆனா அம்மா அதப்பத்தி எல்லாம் ஒரு வார்த்தகூடப்பேசாது. இன்னாரு ஏன் வந்தாருண்ணு கேட்டுட்டா போச்சி, தட்டுவாணி வாய மூடுரீன்னு மிரட்டிவிடும். அதுலேருந்து அம்மா பேச்ச நான் நம்புறதே இல்ல. அம்மா ஏயிப்படி பொய் சொல்லுது? அப்புறம் ராவானா ஏன் செத்துபோன அப்பா பேரச்சொல்லி அதயே நெனச்சி நெனச்சி அழுவுது? ஒவ்வொரு தாட்டியும் யாராவுது ஒருத்த வந்திட்டுப் போனப்பின்னாடி சாமிபோட்டா கிட்டயும் அப்பா போட்டா கிட்டயும் நின்னு கொமஞ்சி கொமஞ்சி அழுவுது? அப்படி இருக்கும்போது அது ஏன் காத்தால பாக்கும்போது மட்டும் எதுவுமே நடக்காதது போல பொய்பேசி சிரிச்சிக்காட்டுது?

யோசித்துக்கொண்டே வீட்டிற்கு வந்தாள் மேகலா. மகளைக் கண்டதும், முகம் கைகால் கழுவி வரச்சொல்லி, அவித்துவைத்திருந்த தட்டைப் பயிறைத் தட்டில் போட்டுக்கொடுத்தாள். கல்லறுப்பு வேலையை முடித்துகொண்டு, அம்மா சீக்கிரமே வந்துவிட்டதுபோல் தெரிந்தது. கொடிக்கயிற்றில் துவைக்கப்பட்ட துணிகள் தொங்கிக்கொண்டிருந்தன. அந்தத் துணிகளிலிருந்தது பவர்லைட் சவுக்காரக்கட்டியின் மணம் வழிந்து வீடெங்கும் பரவியிருந்தது. பாத்திரங்களெல்லாம் சுத்தமாக விளக்கப்பட்டு பாதி தாழ்ப்பாள் கூட்டிலும், மீதி அடுப்பு மோடையிலும் கவிழ்த்து வைக்கப்பட்டிருந்தன. இவையெல்லாம் பார்க்கும்போது அம்மாவின் மாற்றம் சூசகமாய் எதையோ உணர்த்தின.

நல்லவேளை, அம்மா ஒப்பாரி வைக்காமல் இருந்தது. இன்றாவது அழுகையின் நிமிட்டல் இல்லாமல் தூங்கலாமே என்று நிம்மதியாக இருந்தது. அப்படியே அயர்ந்து தூங்கிப்போயிருந்தாள் மேகலா. ஏதோ அரவம் கேட்டதுபோல். தெரியவே அவளை யறியாமலேயே விழித்தாள். அம்மாவைப் படுக்கையில் காணவில்லை. அம்மாபடுத்திருந்த இடம் வெற்றிடமாகி வெறுமை படர்ந்து கிடந்தது. அரிக்கேன்பாய்ச்சிய ஒளியில் பாயின் வரிக்கோடுகள் நெளிந்தபடி பயமுறுத்தின. பயத்தின் அடியில் தூக்கம் ஓடிப்பதுங்கிக்கொண்டது. உத்திரத்தை வெறித்தபடி காதை உன்னிப்பாய்க்குவித்துப் படுத்திருந்தாள் சிறுமி. மேகலா எதிர்ப்பார்த்தது போலவே கூடத்தில் கிளம்பிய சிரிப்பொலி தங்கு தடையின்றி அவளை வந்தடைந்து சீண்டிப்பார்த்தன.

கூடத்திலிருந்து கசிந்து பரவிய சுருட்டின் மணம் வீடெங்கும் சுற்றியபடியே வெளியே போவேனாவென்று சுழன்று கொண்டிருந்தது. சுவாசித்தறியாத அதன் நெடி மூச்சை திணறடித்தது. வாந்தி வரும்போல் இருக்கவே சிறுமி அடக்கிக் கொண்டாள். மூத்திரம் முட்டிக்கொண்டு வந்து தொலைத்தது. எழுந்து வெளியே போகவும் முடியாமல், அடக்கவும் முடியாமல், உப்பிய வயிறு தரும் நெருக்கடியை சமாளிக்க முடியாமல் ஒவ்வொரு நொடியையும் நரக அவஸ்தையுடன் அனுபவித்தபடி இருந்தாள் மேகலா.

முன்போல இல்லாமல் பள்ளிக்கூடத்தில் கூடப்படிக்கிற தோழிகள் மேகலாவைப்பார்த்தாலே முகத்தை சுழித்துக்கொண்டு விலகிச்செல்கிறார்கள் பேசப்பிடிக்காமல். வாத்தியார்கூட கேள்வி கேக்கிற சாக்கில் 'நீயெல்லாம் எதுக்கு ஸ்கூலுக்கு வர்ற?' என்று வெளிப்படையாய் வையிறார். காலையில் அப்படித்தான், சேர்ந்து போகலாமென்று ஜெயந்தியை கூப்பிடச் சென்றதிற்கு, 'இனிமேல்லாம் ஜெயந்திய கூப்புட வரவேணாம் மேகலா - அவள அவங்கப்பா கொண்டு வந்து விடுவாரு" என்று நைசாய் விரட்டி விட்டது. மேகலா காதுபடவே 'ஆடு திங்கிற தழையதானே குட்டியும் திங்கும்' என்றது. இதன் உள் அர்த்தம் முழுமையாகப் புரியாவிட்டாலும், இதுக்கெல்லாம் காரணம் அம்மாதானென்று புரிந்துகொண்டாள்.

சன்னமாய் கூடத்திலிருந்து வெளியேறிய குரலை கேட்டபடி படுத்திருந்தாள் மேகலா...

"நீ இவ்ளோ சீக்கிரத்துல சம்மதிப்பேன்னு நான் கொஞ்சங்கூட நெனைக்கில ராசாத்தி...."

"என்னய்யா செய்யிறது. ஆளுல்லாத பொம்பள நான்.... எத்தன நாளைக்குத்தான் சாக்கு போக்கு சொல்ல முடியும், எல்லாம் எம்மவளுக்காகத்தான் கெடந்து சீரழியுறேன். அவளையாவது படிக்க வைச்சி ஒசந்த வேலைக்கு அனுப்புனங்குறதுதாய்யா என்னோட ஆச, கனவு எல்லாமே..."

தெளிவாய் ஒலித்த அம்மாவின் குரலில் துயரம் படியத்தொடங்கிய உடனே பிசிறுதட்டிக் கமறுவதை நன்றாகவே உணர முடிந்தது.

"சரி சரி நான் கெளம்புறேன் ராசாத்தி, விடியங்காட்டியும் கெளம்புனாத்தான் காத்தாலயேவாரத்த பாக்க முடியும்..."

குரலுக்கு சொந்தக்காரர் யாரென்று தெரிந்துவிட்டது, உப்பு ஏவாரி தங்கவேலுதான் வந்திட்டுப் போறார் என்று.

விடிஞ்சதும் நாக்கைப் பிடுங்கிறமாறி, இன்னும் எத்தன அப்பனம்மா எனக்கு காட்டப்போறேன்னு கேக்கனுமென்று நினைத்துக்கொண்டிருந்த மேகலா, முதல் முறையாக அம்மாவுக்காக அழுதாள்.

"எனக்கு எதுவும் தெரியாதின்னு நெனச்சிட்டியேம்மா எனக்கு எல்லாமும் தெரியும்மா. பின்னால ஒன்ன உக்காரவெச்சி காப்பத்தவும் தான்..."

கண்களிலிருந்து நீர்த்தாரை வெதுவெதுப்பாய் இறங்கிக்கொண்டிருந்தது. மகள் அயர்ந்து தூங்குகிறாள் என்று தலையை கோதிவிட்ட ராசாத்தி, அவள் அழுவதைப் பார்த்து அதிர்ச்சியடைந்தாள்.

V‹ mG »whbs‹ W bjÇahknyna. ●


படிப்பகம்

www.padippakam.com

கட்டுரை :

# மகாத்மா

– ஜெயந்தன்

சென்ற வாரம் மீண்டும் Madras என்று விலாச மிட்டே எனக்கொரு கடிதம் வந்தது. அதைப்பற்றிக் கொண்டு என் நினைவுகள் மெட்ராஸ் ---சென்னை, பம்பாய்--மும்பை, கல்கத்தா---கோல்கத்தா, என்று போய் கடந்த காலத்திற்குள்ளும் நுழைந்து, தஞ்சாவூர்---டேஞ்சூர், மதுரை---மதுரா, உதகமண்டலம் ---ஊட்டி; திருவனந்தபுரம்---திருவான்டிரம், தரங்கம்பாடி---டிராங்குபார் என்று ஒரு வட்ட மடித்து திரும்பின. சென்னையும், மும்பையும், கோல்கத்தாவும் மீட்சி என்றால், டேஞ்சூரும், திருவான்டிரமும், டிராங்குபாரும் சிதைப்புகள். இந்தச் சிதைப்புகளைச் செய்தவர்கள் வெள்ளையர்கள். இவை உச்சரிப்பின் சிரமத்தினால் எழுந்தது. மட்டுமல்ல, அவர்களது அதிகார ஆணவத்தினாலும் வந்தவை. 'வல்லான் வகுத்ததே வாய்க்கால்' என்பது நிலத்திலும், நீதியிலும் சட்டங்களிலும் மட்டுமல்ல. மொழியிலும் அமைய முடியும் என்பதற்கு ஆதாரம். வெள்ளையர்கள் இங்கு கடைசி வரை வியாபாரிகளாகவே இருந்திருந்தால். வெகு விரைவில் இந்திய மொழிகளை உச்சரிக்கக்கற்றிருப்பார்கள். கலெக்டர்களும், கவர்னர்களும், கர்னல்களும், வைஸ்ராய்களும் இந்த 'நீச பாஷைகளைக்' கருதிக் கொண்டிருக்க முடியுமா?



ஆனால் இதைத் தொடர்ந்து எனக்கு 'அம்பர் சர்க்காவும்' ஞாபகத்திற்கு வந்துவிட்டது. அம்பர் சர்க்கா என்கிற இந்த அம்பர் கைராட்டையைக் கண்டுபிடித்தவர் தமிழ்நாட்டைச் சேர்ந்த சிதம்பரநாதன் என்பவர். இதில் சாதாரண ராட்டையில் இருக்கும் ஒற்றை ஸ்பிண்டிலுக்குப் பதிலாக ஐந்து ஸ்பிண்டில்கள் இருக்கும். இதனால் குறைந்த நேரத்தில் கூடுதல் நூல் நூற்க முடியும். இப்படியொரு மேம்பட்ட ராட்டைக்கான கண்டு பிடிப்புக்காக (ஆனால் அதில் எந்த விதத்திலும் 'மோட்டார்' போன்ற எந்திரங்கள் இருந்துவிடக்கூடாது) அழைப்பு விடுத்தவர் 'கைராட்டையே ஆயுதம்; கதராடையே ஸோபிதம்' எனக் கொண்ட காந்தியடிகள்தான் இந்த அடிப்படையில் முயற்சி செய்துதான் சிதம்பரநாதன் இந்த ராட்டையைக் கண்டு பிடித்தார். இதைக் காந்தி அங்கீகரித்தும் விட்டார். அப்போது அதற்கு அவர் வைத்த பெயர் தான் அம்பர் சர்க்கா. எங்கிருந்து இந்த 'அம்பர்' வந்தது? சிதம்பரநாதனிலிருந்துதான். காந்தி முதலில் இந்தப் பெயரிலிருந்து நாதன்-ஐ-நீக்கினார். பிறகு 'சிதம்பரத்தை' அம்பர் ஆக்கிவிட்டார். (அதாவது தஞ்சாவூர்-டேஞ்சூர் பாணியில்) வெள்ளைக்காரனுக்குத் தமிழ் சரியாக வாயில் நுழையாது. அதோடு இனத்தின் அதிகாரத்திமிர். அவன் எதையும் எப்படியும் உச்சரிக்கும் 'உரிமையை' எடுத்துக்கொண்டான். காந்திக்கு என்ன வந்தது? காந்திக்கோ, இந்திக்காரர்களுக்கோ, இந்தியாவின் இதர பகுதியினருக்கோ 'சிதம்பரம்' வாயில் நுழையாதா? காந்திக்கு தமிழ் என்ன நீச பாஷையா? தான் தமிழ் படிப்பதாகக் கடைசிவரை அடிக்கடி சொல்லிக் கொண்டவராயிற்றே! ஒரு கைநாட்டுப் பேர்வழி போலவாவது தமிழில் 'காந்தி' என்று கையெழுத்துப் போட்டவராயிற்றே! அப்புறம் எப்படி சிதம்பரம். அம்பர் ஆனார்? இந்த உரிமையை காந்தி எங்கிருந்து எடுத்துக்கொண்டார். தெரியவில்லை. அவரைப்போலவே யாராவது மகான்கள் வந்து சொன்னால் உண்டு.

காந்தி நிச்சயமாக 20ஆம் நூற்றாண்டின் முதல் மனிதர்தான். அவர் ஆகிருதி ஐந்து கண்டங்களையும் தழுவியது. காலத்தால் இன்றுவரை நீடிப்பது. இன்னும் பலகாலமும் நீடிக்கும். அதனால்தானோ என்னவோ, கண்டங்களையும் காலத்தையும் போலவே குணங்களும் குணதோஷங்களும் அடுத்தடுத்து அவரிடம் குடிகொண்டிருந்திருக்கின்றன.

அவருக்குத் தாகூர் கொடுத்த 'மகாத்மா' என்கிற 'பட்டம்'; ஏதோ இவர் அவரை குருஜி என்று அழைத்த தற்காக அவர் இவருக்குச் செய்த எதிர்வரிசை மரியாதை அல்ல. மானுட நலத்திற்காகத் தன் உயிரையும் அர்ப்பணிக்கும் இயல்பு கொண்ட மாமனிதர்தான். மகாத்மா என்றால், அது முற்றிலுமாக மோகன்தாஸ் கரம்சந்த் காந்திக்குப் பொருந்தக் கூடியதே. உதாரணத்திற்கு அவரது நவகாளியாத்திரை ஒன்று போதும்.

1946ஆம் ஆண்டு ஜூலை மாதம் முஸ்லீம் லீக் அறிவித்த 'நேரடி நடவடிக்கை' தினம் தொடங்கிய 72 மணி நேரத்திற்குள் கல்கத்தாவில் சுமார் 26,000 இந்துக்கள் கொல்லப்படுகிறார்கள். இதன் எதிரொலியாக இந்துக்கள் பெரும்பான்மையாக உள்ள பீகாரின் வடமேற்குப் பகுதியில், பதிலுக்குப்பதில் என்ற வெறியாட்டம் நடந்தேறுகிறது. இதன் விளைவு நவகாளி. 80% முஸ்லிம்களைக் கொண்ட நவகாளியில் இந்துக்கள் கசாப்பு செய்யப்படுகிறார்கள். வெறுப்பும் நெருப்பும் பற்றியெரியும் அந்த நவகாளியில்தான் வெறுங்காலுடன் நான்கே நான்கு சீடர்களுடன் 116 மைல்கள் நடந்து 47 கிராமங்களை சுற்றிவருகிறார் காந்தி. ஒரு இந்துவான அவர் கழுத்தில் ஒரு அரிவாளோ, நெஞ்சில் ஒரு கட்டாரியோ இறங்கினால் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமேயில்லாத சூழலில் அவர் வீடு வீடாக ஏறி இறங்குகிறார். பாசிபிடித்து வழுக்கும் மரப்பாலங்களில் எல்லாம் கரணம் தப்பினால் மரணம் என்னும் பயணம். பல கிராமங்கள் அவரை வரவேற்கத் தயாராக இல்லை.


படிப்பகம்

www.padippakam.com

'வராதே, திருப்பிப்போ' என்ற கோஷங்கள். ஒரு தடவை ஒரு கிராமத்தில் இவர் வரவேண்டிய பாலத்தில் நரகலைத் தெளித்திருக்கிறார்கள். இவரும் சீடர்களும் அருகிலிருந்த மரக்கொம்பு ஒடித்து, அவைகளைத் துடப்பங்களாகக் கொண்டு அந்த நரகல்களைப் பெருக்கித் தள்ளிவிட்டு அங்கேப் போகிறார்கள். அங்கே அந்தக் கிராமங்களில் அவர் ஒரு முஸ்லீம் மற்றும் இந்து தலைவரை தேடிக்கண்டு பிடிக்கிறார். தனது வேண்டுகோளை வைக்கிறார். மன்றாடுகிறார். அவர்கள் அந்தக் கிராமத்தின் அமைதிக்கு கூட்டுப் பொறுப்பாக இருக்க வேண்டும். யாராவது ஒரு மதத்தவர் தாக்கப்பட்டால், தாக்கிய மதத்தவரின் தலைவர் சாகும்வரை உண்ணாவிரதமிருக்க வேண்டும். இவ்விதம் நவகாளியின் நெருப்பை அணைத்து விட்டே அவர் திரும்புகிறார்.

ஆனால் இங்கே வியந்து சாியவேண்டிய ஒரு கேள்வி என்னவென்றால், ஏன் இந்த மாதிரி நவகாளி பயணங்களை மற்ற காங்கிரஸ் தலைவர்கள் மேற்கொள்ளவே இல்லை? நேரு, படேல் போன்ற முன்னணித் தலைவர்கள் கடும் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தாலும் இரண்டாம் நிலைத்தலைவர்கள் கூட, (உதாரணமாக விநோபா பாவே போன்றவர்கள்) ஆகஸ்ட் 15 பிரிவினைக்குப் பிறகு பஞ்சாப், வங்காளம் என்று கிராமம் கிராமமாகக் கொளுத்தப்பட்டபோதும், மக்கள் ஆயிரக்கணக்கில், வெட்டுண்டும், உறுப்பிழந்தும், கற்பழிக்கப்பட்டும் முலைகள் அறுக்கப்பட்டும், நெடுஞ்சாலைகளில் செத்து நாறியபோதும், தங்களால் இயன்ற 'நவகாளிப்பயணம்' எதையும் ஏன் மேற்கொள்ளவில்லை? இந்தத் துயரம் நிறைந்த பனித்த கண்களோடுதான் நாம் காந்தியை முழுமையாக தரிசிக்க முடிகிறது. 'உலத்தில் ஒரே ஒரு கிறுஸ்துவன்தான் இருந்தான். அவனும் சிலுவையில் அறையப்பட்டு இறந்து போனான்' என்று நீட்சே சொன்னது போல, 'காந்தியவாதி' என்று ஒரே ஒருவன்தான் இருந்தான். அவனும் கோட்சேயின் 3 குண்டுகளுக்குப் பலியாகிப் போனான். என்று சொல்லி முடித்துக் கொள்ளத் தோன்றுகிறது.

ஆனால் அதே நவகாளி பயணத்தின்போது, பகல் போதில் இன்னொரு பகலவனாகப் பிரகாசித்த காந்தி, அதே நாட்களின் இரவுகளில் இருந்தது. இன்னொரு காந்தியாக என்பதை நினைத்துப் பார்ப்பது மிக வேதனையான விஷயம் தான். அவரது சகோதரியின் பேத்தியான, அந்த அழகிய 19 வயது இளம் பெண் மனுவுடன் அவர் கொண்ட உறவுக்காக மனம் சுளிக்காதவர்கள் அவரைத் தவிர வேறுயாருமில்லை. ஆனால் அதை அவர் வெட்ட வெளிச்சமாகச் சொல்லவும் செய்தார். டெல்லியில் ஒரு பிரார்த்தனைக் கூட்டத்திலேயே சொன்னார். ஆனால் அதற்கு அவர் சொன்ன காரணம் சரியானதுதானா. சரியான மனதில் இருந்து வந்ததுதானா என்ற கேள்வி ரொம்பவும் அராஜகமானதாக இருந்துவிடமுடியாது. அவர் சொன்னார்; அது. தனது பிரம்மச்சரிய விரதத்தின்மீது தனது பரிசோதனை என்று. இதை வேறு யாராவது சொல்லியிருந்தால். 'சட், நான்சென்ஸ்' என்று கேட்டவர்கள் சொல்லியிருப்பார்கள்.

பிரம்மச்சரியம் என்றால் பெண் எதிரிலிருந்தாலும் அவள் தன் கண்ணில் பெண்ணாகப்படாமல் இருப்பதாக மனதை வைத்துக்கொள்வதுதான். அப்படிபட்டால் இன்னும் தான் முழுதாக பிரம்மச்சாரியாக ஆகவில்லை என்று பொருள். இந்த சூத்திரம் போதாதா ஒரு பிரம்மச்சாரி தன்னை அறிவதற்கு? அதைவிட்டு, 'பெண்ணே வா. என்னோடு கட்டிப்படுத்துக்கொள். எனக்கு உணர்ச்சி கிளம்புகிறதா இல்லையா என்று சோதனை செய்ய வேண்டும்' என்று கேட்பது எந்த தர்க்க சாஸ்திர விதிகளில் சேர்த்தி? சரி 77 வயதில் ஒரு மனிதன், பிரம்மச்சரியத்தை அனுசரிக்க வேண்டாம். குடும்பஸ்தனாகவே இருக்கட்டும். ஒரு பெண்ணின் உடல் உஷ்ணத்தை அனுபவிப்பதைத் தவிர வேறு என்ன காரியம் செய்துவிட முடியும்? போகட்டும். 77 வயதில் இவர் தனது பரிசோதனையில் வெற்றியடைந்தே தொலையட்டும்; ஆனால் அந்த 19 வயது பருவப்பெண்ணின் நிலை? அவளும் வெற்றியடைந்து அல்லது வெற்றியடைவாள் என்பது இவருக்குத் தெரியுமா? ஓர் உணர்வு பொங்கி வேறு வழியில்லாமல் அடங்கினால் அது வெற்றியா? இன்னொரு கட்டத்தில், தான் இத்தனை வருஷ பிரம்மச்சரியம் காத்தும் ஒரு நாள் காலை தனக்கொரு பெண் தேவை என்ற உணர்வு ஏற்பட்டதாக இவரே சொல்லவில்லையா? அதை அவர் ஒரு கறுப்பு தினம் என்று சொல்லிக் கொண்டாலும். அன்று அவர் ஒரு உடலின் இயல்பை அறிந்திருக்கவேண்டுமே? அப்போது அந்த இளம் பெண்ணின் உடல் பற்றி அவரது கண் திறந்திருக்கவேண்டுமே. எப்போதாவது அவளது திருமணத்திற்கு முயன்றாரா? ஒரு தடவை, அந்தப் பெண், ஏனோ தனக்கு மற்ற பெண்களைப் போல ஆண்களைக் கண்டால் இயல்பான விருப்பம் உண்டாவதில்லை என்று சொன்னது போதும். பிடித்துக்கொண்டார். 'போதும் போதும். வா..வா... நானும் பிரம்மச்சாரி. நீயும் பிரம்மச்சாரி Experiment with பிரம்மச்சரியம் பார்த்துவிடுவோம்.

இதையவர் வெளிப்படையாகவே சொன்னதால் அவரைத் 'திறந்த புத்தகம்' என்கிறார்கள். புத்தகம் திறந்திருப்பது சரிதான். ஆனால் அதன் வாசகங்களும் திறந்திருக்கிறதா என்பது சம அளவிலான பிரச்சினை அல்லவா?

அவர் கொஞ்சம் தமாஷான பேர்வழியும்கூட. அது உணவு விஷயமாக இருந்தாலும். வைத்தியமாக இருந்தாலும் சரி. பல் விளக்குவது போன்ற தினசரி காரியங்களாக இருந்தாலும் சரி. தனக்கு எது சரியென்று படுகிறதோ அதை உபதேசம் செய்ய ஆரம்பித்து விடுவார். ஜலதோஷமா? இந்த மூக்கில் தண்ணீரை இழுத்து அந்த மூக்கில் விடு. அந்த மூக்கில் தண்ணீரை இழுத்து இந்த மூக்கில் விடு. பதினைந்து நிமிஷம் தினம் பல் விளக்கு. பசும்பால் குடிக்காதே. ஆட்டுப்பால் குடி. 'ஒருநாள் திடீரென்று வேப்பிலை குடலுக்கு நல்லதென்று அதை சாப்பிட ஆரம்பித்து விட்டார். இதைப் பார்த்துவிட்டு கவிக்குயில் சரோஜினி நாயுடு சொன்னார்; 'பாபுஜி இவ்வளவு நாள் நீங்கள் ஆட்டின் பாலைத்தான் சாப்பிட்டீர்கள். இப்போது ஆட்டின் தீவனத்தையே சாப்பிட ஆரம்பித்து விட்டீர்கள்.'

அவருக்கு இயற்கை வைத்தியம்தான் வைத்தியம். மீதியெல்லாம் வைத்தியமே அல்ல. தோலுக்கு அடியில் ஊசியை ஏற்றுவது என்பது ஒரு வன்முறை. 'வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால் மாலாக் காதல்...' என்று பேசும் தமிழ்ப் பாடல் ஒன்று. பண்டைய மருத்துவத்திலே வாளால் அறுப்பதும் சுடுவதும் இருந்திருக்கிறது. ஆனால் இவருக்கோ ஊசி ஒரு வன்முறை. மரணப்படுக்கையில் இருந்த மனைவி


படிப்பகம்

www.padippakam.com

கஸ்தூரிபாவுக்கும் ஆங்கில மருத்துவர்கள் ஊசிபோட அனுமதி மறுத்துவிட்டார். அவர் இறந்தும்போனார். காந்திக்கு அப்படியொரு பிடிவாதம். ஆனால் பின்னாட்களில் அந்தப் பேத்தி மனுவுக்கு ஊசிபோட அனுமதியளித்தார். அந்த அளவுக்கு அவருக்கு நன்றி சொல்லத்தான் வேண்டும்.

அவரது பிடிவாதம் மிகக் கொடூரமான ஒன்று. முன் சொன்னவாறு மனைவியின் உயிரைப் பற்றியும் கவலை கொள்ளாது ஆங்கில மருத்துவத்தை மறுதலித்தது போலவே பல கட்டங்களில் தனது முடிவுகளே தீர்க்க ஞானத்தில் குளித்தெழுந்து வந்ததுபோல் பிடிவாதம் காட்டினார். அம்பேத்கரின் இரட்டைத் தொகுதி தேர்தல் முறை கோரிக்கைக்கு எதிராக உண்ணா விரதம் தொடங்கி, அவர் உடல் அபாயக் கட்டத்தை நெருங்கிய போது பலரையும் பிடித்தாட்டிய பயம் ஒருவேளை இவர் இறந்துவிட்டால் அது ஆயிரக்கணக்கான தலித்துகளின் தலைகள் உருளக்காரணமாகி விடுமே என்பது. ஆனால் அவர்களுக்கு 'ஹரி ஜனங்கள்' என்று ஆடம்பரமாகப் பெயர் சூட்டி அழைத்து வந்த அவரோ அதைப்பற்றி எந்தக் கவலையும் இல்லாது படுத்துக்கிடந்தார். கடைசியில் அம்பேத்கர்தான் இறங்கிவந்தார். ஏனென்றால், தான் எந்த மனிதர்களுக்காக ஒரு கோரிக்கையை வைத்தாரோ அதுவே அந்த மனிதர்கள் ரத்தம் சிந்தக் காரணமாக இருந்துவிட அவர் விரும்பவில்லை. தனது சொந்தத் தோல்வி பற்றிய கௌரவக் குறைவு குறித்து எந்த வருத்தமும் இல்லாது அவர் பூனா ஒப்பந்தத்திற்கு ஒப்புக்கொண்டார். இங்கே ஒப்பந்தத்தில் கையெழுத்திட பேனா எடுத்தவர்களில் மகாத்மாவாக நின்றவர் எம்.கே. காந்தியல்ல; பாபா சாகேப் அம்பேத்கர்.

ஆனாலும் பின்னொருநாளில் காந்தி மீண்டுமொரு முறை தன்னை மாமனிதராக நிரூபித்துக்கொண்ட மிகுந்த உணர்வு பூர்வமான தருணம் ஒன்று டெல்லியில் நிகழ்ந்தது. இந்தியாவுக்கு முதலில் டொமினிக் அந்தஸ்து என்ற முடிவு எடுக்கப்பட்டபோது, முதல் கவர்னர் ஜெனரலாக யார் என்ற கேள்வி. நேருவும், பட்டேலும் மவுண்ட் பேட்டனே இருக்கலாம் என்றார்கள். ஜின்னாவும் ஒப்புக்கொண்டு விட்டார். கடைசியில் காந்தி என்ன சொல்வாரோ என்ற சந்தேகம் மட்டும் இருந்தது. இந்த நிலையில் வைஸ்ராய் மாளிகை வந்த காந்தி. மவுண்ட்பேட்டனைப்பார்த்து 'நீங்கள் கவர்னர்ஜெனரலாக இருக்கலாம்,' என்றவர், 'ஆனால் இந்த வைஸ்ராய் மாளிகையிலிருந்து ஆட்சி செய்யக்கூடாது. எளிமையான வீடு ஒன்றிற்குக் குடிபோக வேண்டும். அங்கே உதவியாளர்களும் நிறைய பேர் இருக்கக்கூடாது,' என்றார்.

ஆனால் சில தினங்களிலேயே ருட்யார்ட் கிப்ளிங் இந்திய வரைபடத்தில் இழுத்த பூகம்பக்கோடுகளால் நாடு ரத்தக் குளத்தில் குளித்தபோது அதை அடக்கத்தெரியாது தத்தளித்துப் போன நேருவும் படேலும், அந்தப் பொறுப்பை மவுண்ட்பேட்டனிடமே ஒப்படைத்தார்கள். மவுண்ட் பேட்டனும் பழைய கடற்படைத் தளபதியாக அதிசயிக்கத்தக்க வேகத்தில் செயல்பட்டு நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவர முயன்றார்.

அப்படியொரு நேரத்தில் வைஸ்ராய் மாளிகை வந்த காந்தி. அங்கு இயங்கும் பரபரப்பான அரசு எந்திரத்தையும் அதற்கு இப்படியொரு அகண்ட வசதிகள் கொண்ட இடம் தேவைதான் என்பதையும் உணர்ந்து கொண்டு மவுண்ட்பேட்டனிடம் சொன்னார்.

"நீங்கள் காந்தியின் குரலைக் கேட்காமல் கடவுளின் குரலைக் கேட்டதற்காக நன்றி" மவுண்ட் பேட்டன் கேட்டார், நான் உங்கள் குரலை எந்தவிதத்தில் கேட்கவில்லை?

"வயதான இந்தக் கோமாளி காந்தி இந்த இல்லத்தைத் தவிர்க்குமாறு உங்களிடம் சொல்லவில்லையா"

இருந்தாலும அவரது சகல பலங்களையும் பலவீனங்களையும் மீறிக்கொண்டு அவர் மீது ஒட்டும் பெரிய கறை, இரண்டு உலக யுத்தங்களிலும் கூட இந்தியா படாத துயரத்தின் மூல காரணம், அதாவது இந்தியாவை இரண்டாகத் துண்டாடியது. அவரது மத உணர்வு அரசியலில் கலந்ததுதான். அதாவது அவரது மதம் கலந்தான் அரசியல்தான். பல மதங்கள் வாழும் ஒருநாட்டில். அதன் பொது எதிரியை நோக்கிய போராட்டத்தில் ஒரு மதத்தை அவர் முன்னிலைப்படுத்தியது அவரது நோக்கத்தின் மீதே ஐயத்தை ஏற்படுத்திவிட்டது - முக்கியமாக முஸ்லீம்களிடம்

அவர் தனது இறுதி லட்சியம் ராமராஜ்ஜியம் என்றார். விளக்கம் கேட்டபோது, நான் சொல்வது அயோத்திராமன் அல்ல என்றார். பின் எந்த ராமன்? பிறகு 'அவனுக்கு' ஏன் ராமன் என்ற பெயர் வைக்க வேண்டும்? இந்து காங்கிரஸ்காரர்கள் ஒருவரையொருவர் greet செய்து கொண்டபோது 'ராம் ராம்' என்றார்கள்.

இங்கே சுப்ரமணிய பாரதி. அன்றைய பொதுப் பகைவனைப் பற்றிப் பாடுவதற்குப் பதிலாக 16,17 ஆம் நூற்றாண்டில் இருந்த பகையை ஞாபகப்படுத்துகிறான். 'குருகோவிந்த்ஸிங்விஜயம் பாடி, 'ஆடியே மாய்ந்ததே அவுரங்கசீப் ஆட்சி' என்று முடிக்கிறான்.

'சத்திரபதி சிவாஜி' தன் சைனியத்திற்குக் கூறியது, என்ற பாடலில் முஸ்லீம்களை அவன் குறிப்பிடுவதில் சில :

வேத நூல் பழிக்கும் வெளித்தலை மிலேச்சர்...
ஆலயம் அழித்தலும் அருமறை அழித்தலும்
பாலரை விருத்தரை பசுக்களை ஒழித்தலும்
மாதர் கற்பழித்தலும்...
கலையறு மிலேச்சர்...
நம்மை இன்றெதிர்க்கும் நயமிலாப் புல்லோர்
செம்மை தீர் மிலேச்சர் தேசமும் பிறிதாம்
பிறப்பினில் அன்னியர். பேச்சினில் அன்னியர்...

முப்பதுகோடி இந்துக்களும் பத்துகோடி முஸ்லீம்களும் ஒன்றுபட்டு வாழும் ஒரு நாட்டில், பொதுஎதிரியை நோக்கிய ஒரு போரின் சந்தர்ப்பத்தில் கொஞ்சமும் விவஸ்தையற்று, இங்கிதமற்று, பொறுப்பற்று, உடன் வரவேண்டிய போர் வீரர்களின் முன்னோர்கள் பற்றி வசைபாடுகிறான். கவனியுங்கள்.

"தேசமும் பிறிதாம்; பிறப்பினில் அன்னியர்; பேச்சினில் அன்னியர்" (யாரோ இந்த பாரதியை இந்தியாவின் முதல் ஆர்.எஸ்.எஸ். என்று சொன்னது ஞாபகம் வருகிறது. இந்தக் கவிதைக்குத் தமிழ் நாட்டிலேயே எதிர்ப்பு ஏற்பட்டு, பிற்பாடு பாரதி ஏதோ சமாதானமும் எழுதினான்).


படிப்பகம்

www.padippakam.com

இப்படி செப்பு மொழி பதினெட்டிலும் எத்தனை மகாகவிகளோ, கலா மேதைகளோ, காவிய கர்த்தாக்களோ, எல்லாருமாகச் சேர்ந்து, வரும் சுதந்திர நாட்டில் இவர்களோடு சேர்ந்து மானத்தோடு வாழ முடியாது என்ற உணர்வை முஸ்லீம்களிடம் உண்டாக்கி விட்டது.

நாளாக நாளாக காந்தியிடம் 'மதம்' கூடிக் கொண்டே போனது. பிரார்த்தனைக் கூட்டம் இல்லாத நாள் இல்லை. வைஸ்ராயோடு பேசிக் கொண்டிருந் தாலும் சரி, பிரார்த்தனை நேரம் வந்துவிட்டால் பேச்சை பாதியில் நிறுத்தி எழுந்து வந்துவிடுவார். இந்தப் பிரார்த்தனைகளில் ஏதோ ஒப்புக்கு சில மதங்களில் உள்ள செய்திகள் வாசிக்கப்பட்டபோதும் அசலில் அது ராமபஜனையாகவே இருந்தது.

டில்லியில் அவரது கடைசி உண்ணாவிரதத்தின் போது அவர் உடல் நிலை மிகவும் சீர்கெட்டு சிறுநீரில் அசிட்டின் அதிகமாகியிருப்பதை கவலையோடு டாக்டர் சுசீலாநய்யார் எடுத்துச் சொன்னபோது காந்தி சொன்னது: 'எனது சிறுநீரில் அசிட்டின் இருந்தால் ராமன் மீது என் நம்பிக்கை பூரணமாக இல்லை என்றாகிறது. தவிர உங்கள் விஞ்ஞானம் எல்லாவற்றையும் அறியுமா? போய் கீதையில் பத்தாவது அத்தியாயம் படித்துப்பாருங்கள்.

அதேபோல அவரைக்கொலை செய்ய நடந்த முதல் முயற்சி ஜனவரி 20 இல் தோல்வியடைய, அதன் பிறகு அவரது பிரார்த்தனைக் கூட்டத்திற்கு காவல் போட விரும்பிய அதிகாரியிடமும் அவர் ராமன் பெயரால்அதை மறுத்தார். அவர் சொன்னார்; 'ராமன் தான் எனக்குப் பாதுகாப்பு. அவன் எனது உயிரை முடிக்க விரும்பினால் யாராலும் என்னைக் காப்பாற்ற முடியாது'.

ஆனால் அந்த ராமன், மருத்துவ ஊசியைக்கூட வன்முறை என்று மறுத்த அகிம்சாவாதியான அவரை கொடூரமாக 3 குண்டுகள் மூலம் அழைத்துக்கொண்டது ஏன் என்று யாரும் அவரிடம் கேட்க முடியாமல்போனது ஒரு irony தான்.

சுருக்கமாகச் சொன்னால்அவர் மிக உயர்ந்த பண்புகளும், சில குணதோஷங்களும் கொண்ட ஆனால் மறுசிந்தனையில்லாத மதவாதி. அவருடைய பரிசோதனை எல்லாம் உண்மையோடும், பிரம்மச்சரியத்தோடும்தான். மதத்தோடு அல்ல. அவர் வெறும் பாரிஸ்டராகவே வாழ்ந்து முடித்திருந்தால் தனிப்பட்ட முறையில் பிரச்சனை இல்லைதான். ஆனால் அரசியல் தலைவராக வந்து, அரசியலிலும் மதத்தைப் புகுத்தியபோது அது பெட்ரோலாகப் பற்றிக்கொள்ள, பிறகு அவரே அதை ஓடி ஓடி அணைத்துத்தான் பார்த்தார். முடியவில்லை. அது அவரது மற்றும் இந்திய துணைக்கண்டத்தின் சோகம்.

சரி, இப்போது எதற்கு இந்த போஸ்ட் மார்ட்டம்?

ஒன்று : சரித்திரத்தை மறந்துவிட்டால் அது மீண்டும் ஒருமுறை வந்து தலையில் விழும்.

இரண்டு : சென்ற மாதம் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள், சில ஆர்.எஸ்.எஸ். தலைவர்கள். பாப்ரி மஸ்ஜீத் வளாகத்தில் கோர்ட் உத்தரவையும் மீறிச் சென்று ராமன் வழிபாடு செய்ததைக் கண்டித்து ஆர்பாட்டம் செய்தபோது பா.ஜ. கட்சி உறுப்பினர்களிடமிருந்து எழுந்த 'ராம் ராம்' கோஷம். இது மீண்டுமொரு சாவுப்பறையின் மெல்லிய அதிர்வு. அது போர் முரசாக 'தடிப்பதற்குள் நாடு விழித்துக்கொள்ளவேண்டும். ●

## பிரிபோல் மனசு...

தூக்கமில்லை
தாங்கமுடியவில்லை
தொடரும் கவலைகள்

கண்களை மூடும்போது
கடன்காரர்களின் முகங்கள்
விழித்திருக்கும்போது விபரீத முடிவுகள்

காலை உணவு கால்கிலோ ரவை
நால்வரில் மூவருக்குப் போதாது
பெரியவர் ஒருவர் காலைப் பட்டினி

அரைகிலோ அரசியில் இரவு உணவு
சோத்துப் பாத்திரம் துடைக்கப்படும்
தொடரும் அரைப்பட்டினி இரவுகள்

மேடையேறும் நாளில் மாமிச உணவு
பெரும்பான்மை நாட்களில் ரசம் கஞ்சி
யுகமாய் ஒவ்வொரும் நாளும்

பள்ளி செல்லும்போது சீருடை
விடுமுறை நாட்களில் கிழிந்த ஆடை
பிள்ளைகளைப் பார்க்க மனம் கலங்கும்

ஒழுகும் கூரையைப் புதுப்பிக்க
அக்கா கடிதத்திற்கு பதில் எழுதவில்லை
பத்துமாத வீட்டு வாடகைப் பாக்கி

எழுத முடியவில்லை
பட்டினி கிடந்து செத்த கொடுமை
அம்மாவின் மரணம் நினைவுகளில்

நடக்க முடியவில்லை
சதையை அரிக்கும் இனிப்புநோய்
பிழைப்பு அலைச்சலில் தொடர்கிறது

வறுமை எழுதத் தூண்டுகிறது
ஒத்துழைக்க மறுக்கும் உடம்பு
வைக்கோல் பிரிபோல் மனசு.

சாவுகுறித்து அச்சமில்லை
சே வின் தேசபக்தி எனக்கில்லை
மரணம் வாழ்வதைவிட மேலானது.

*—தலித் சுப்பையா*



படிப்பகம்

www.padippakam.com

# சொர்ணபாரதி கவிதைகள்




## 1 – எதிரெதிர்

சலனமற்ற அக்குளம்
ஆழ்ந்த தியானத்திலிருந்தது.
காற்றினசைவும் மெல்லிய வருடலில் நகர்ந்தது
தியானம் கலைக்காமல்
ஊர்ந்த மேகங்கள் நீரில் தம்மின்
முகங்களின் பிரதிபலிப்பைக் கண்டன.
சுற்றிப் பரவியிருந்த மரங்களின்
அடர் கூந்தலில் பொத்தியிருந்த
புள்ளினங்களும் அமைதிகாக்க
சிறுசிறு குக்கூக்கள் மட்டும்.
அடிச்சேற்றின் ஆழ சுவாசத்திலெழுந்த
குமிழ்கள் மட்டும் அவ்வப்போது
தலைகாட்டி மறைந்தன வெளியே.

எங்கிருந்தோ வந்த நானமர்ந்தேன்
கரையில். என்னுள் இரைச்சலாயின
குளத்தின் தியானமும்
மரங்களின் அமைதியும்.
குலைக்க எண்ணிக்
கரத்தில் பற்றிய சிரட்டைகளை
வீசினேன் பம்பரம் சுழற்றும்
லாவகத்துடன் நீரின்மேல்.
நீரில் தத்தித் தாவிக்
கரையேறின அவை.
செங்குத்தாய் ஒன்றிரண்டு மட்டும்
நீரினுள் அமிழ்ந்தன
தொடர்ந்தேன் கைகள் வலிக்கும் வரை.
தியானமும் காற்றுக்குமிழ்களும் குளத்தில்
குலையாமல் என்னைக் கலைத்தன.
இரைச்சலின் உச்சத்தில்
செவியும் மனமும் செயலற
கைகளை உதறி நகர்ந்தேன்
தியானம் தொடர்ந்தது.

## 2 – தொடர்களில் ஓடியும்

மாநிலங்கள் கடந்தூரும் தொடர்
பயணத்தில் தொடர்ந்துவரும் குரல்கள்.
விழிகளைக் கையில் தாங்கிய கோலில்
ஊன்றிய தாளத்தில் தப்பாத
பாடலுடன் சில்லறைகள் யாசிப்பு.
நிமிடங்கள் தண்டவாளங்களில்
கடக்கும் வேளையில் சுருதியிலெழுந்த
இனிய குரலில் மழலையின் பசிப்பிணி
தளிர்க்கால்களின் தாங்கு சக்தியில்
தடுமாற்றமில்லா சங்கீத சுரங்கள்
அறைகளில் வாயசைத்தால் ஆயிரங்கள்
அவலத்தின் குரலுக்குத் தயங்கிவரும்
நாணயங்கள்
எங்கேனும் ஒரு கே.பி.எஸ். கிடைக்கலாமோ?
காட்சி வழியே பின்னோடும் உலகம்
எல்லைகள் கடக்கவும் குரவை
யொலிகள் கைதட்டலுடன்
இரண்டுமற்றவர்களின் வரிசை
மௌனிகளைக் கலைக்கு சீண்டலுடன்
இவைகளினூடே கால்களினிடையேயும்
புகுந்து பெருக்கித்தள்ளும்
பிஞ்சுக் கரங்கள்.
குப்பைகளோடு கொஞ்சம் காசும்.
தொடரும் சட்டங்களும் மீறும் வறுமைகளும்.
புதிதாய்க் குரலில் ஷு கால்கள் நீண்டன.
கருமையுடன் கருமை சேரப் பிரகாசிப்பு
கருப்புக்கும் ஒளிகூட்டும் இருண்ட
வாழ்வின் பிரதிபலிப்புகள்.
“பூட் பாலிஷ்.”


படிப்பகம்

www.padippakam.com

## கள்ள மௌனமும் கபடத்தின் சிறகடிப்பும்...

உயரமான இடங்களில் கூடுகட்டி
வசிக்கும் பருந்துகளுக்கு
இரையென்பது தமக்குத்
தரையில் தானென்ற
அறிவிருக்கிறது எப்போதும்.

எத்துவாளித்தனத்துக்கென்றே
பரிணாமம் பெற்றவை
மிக உயரமாய்ப் பறக்க வல்ல
அவற்றின் சிறகுகளும்
கூரிய கண்களும்.

கோழியின் குஞ்சுகள்
கோழிக் குஞ்சுகளாகவும்
பருந்தின் குஞ்சுகள்
பருந்துக் குஞ்சுகளாகவுமே
இருக்க முடியுமென்றுணர்ந்து
கள்ள மௌனம் காப்பவை
அவை.

ரத்த வாடை வீசுமவை செய்யும் சப்தம்
எல்லாருக்கும் எரிச்சலூட்டுவதென்றாலும்
யாரால் என்ன செய்துவிட முடியுமென்ற
திமிர் அவற்றுக்கு
கழுத்தில் வெள்ளையுடைய பருந்துகளைக்
கண்டால் கன்னத்தில் போடுவதையும்
மற்ற வற்றுக்குக்
கள்ளப் பிராந்து என்று
பேர் வைப்பதையும் தவிர.

– ம. மதிவண்ணன்

## சோளக்காடு . . .

புழுதிக் காட்டில்
வீறிட்டுக் கிளம்பும்
சுழற் காற்று
மண்ணை அள்ளி
முகத்தில் அப்பும்

பறன்மேல் வேய்ந்த
ஓலைக் கீற்றிடுக்குவழி
எட்டிப்பார்க்கும்
ஒளிக்கீற்று
பொட்டிலறையும்

வரப்புகளினூடே சுத்திவருவதும்
ஒற்றைக் கம்போடு
பறன்மேல் நிற்பதுமான அவன்
மார்பெங்கும் வழிந்தோடும் வியர்வை

கனத்த கரங்களும்
கன்னிப்போன தோள்களுமே
அவனை அடையாளப்படுத்தும்

வழக்கமான அரைவயித்துக் கஞ்சிய
ருசிக்கும்போது
உடல்வலி கணநேரந்தான்

கோழிகூவுவதும்
பொழுது சாய்வதும்தான்
அவனுக்கெட்டிய அறிவு

சோளக் கருதை
கொள்ளையிடும் ஊர்க்குருவிகளுக்கு
சிம்மசொப்பனம் இவன்

எந்தக் காட்டில்
விளஞ்சிக்கிடக்கும் சோளக்கருதுக்கும்
'மாயாண்டி'தான் சரியான ஆளு
ஊரே பேசும்.

இந்நேரம் வரப்புகளினூடே
ஓடிக் கொண்டிருப்பான்

எதற்காகவோ
'களுக்'கெனச் சிரித்துக்கொள்கிறது
சோளக்காட்டுப் பொம்மை.

– வதிலை பிரபா


படிப்பகம்

www.padippakam.com

## தமிழக அரசுக்கு ஒரு கோரிக்கை

மக்கள் மேம்பாட்டுக் கடிதம் எண் : 001/2002
சென்னை – 48.
10–3–2002

மேன்மை தங்கிய முதலமைச்சர் அம்மை. ஜெயலலிதாவுக்கு வணக்கம். நலமறிய ஆசை.

அரியலூர் மாவட்டம் – பெரம்பலூருடன் இணைக்கப்படும் என்று தினமணியில் செய்திபார்த்தேன். அதைக்கைவிட வேண்டும். அரியலூர் மாவட்டம் தனித்தே இயங்கவேண்டும். அதற்கான கோரிக்கையே இக்கடிதம்.

பிப்ரவரி 2002, 4முதல் 9 தேதி வரை நான் அரியலூர் ஆட்சியர் அலுவலகத்தில் 'அரசு ஊழியர்' அதிகாரிகளுக்கு தாழ்த்தப் பட்ட பழங்குடியினர் தொடர்பான இணக்க உணர்வேற்றல் பயிற்சி முகாமில் பயிற்றுனராகக் கலந்துகொண்டேன். அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் இயங்கும் விதமும் மாவட்டச் சூழல் பற்றியும் அறியும் வாய்ப்பு ஏற்பட்டது.

மாவட்ட ஆட்சித்தலைவர் ராகேஷ்குமார் யாதவ் தலைமையில் அதிகாரிகள் சிட்டுக்கள்போலச் செய்யபட்டனர். மிகச்சிக் கனமாக முகாம் அலுவலகம் மாதிரி சின்ன சின்ன தற்காலிக அமைப்புகளில் இயங்குகின்றனர். பலமாவட்டங்களில் இல்லாத – ஆட்சித்தலைவரின் நீதிவழங்குபணி (Judicial Powers) மிகச்சிறப்பாக வாரத்தில் இரண்டுநாள் நடந்தது. ஆயிரக் கணக்கான ஏழைபாழைகள் நீதிமன்றவக்கீல் செலவு அலைச்சல் இல்லாமல். விரைந்து வழக்குகள் பைசல் ஆவதும் நீதிபெறுவதும் கண்கூடாகக் காணமுடிந்தது. மாவட்டத்தின் எந்தப் பகுதிக்கும் கலெக்டர் உடனே செல்லவும், எந்தப் பிரச்சினையும் உடனே நேரடியாகக் கவனிக்க முடிந்ததையும் பார்த்தேன்.

உத்திரப்பிரதேசத்தில் கிட்டதட்ட ஒவ்வொரு தாலுகாவுமே ஒருமாவட்டமாக இருக்கிறது. மக்கள் பிரச்சினையில் கூர்த்த கவனமிட சிறிய மாவட்டம் தனி அமைப்பு நல்லது. small is efficient; small is beautiful

தனி மாவட்டம் கோரி – அரியலூர் மக்கள் நீண்டகாலம் போராடி யிருக்கிறார்கள். தாழ்த்தப்பட்டவர்களாகவும்... பிற்படுத்தப்பட்ட வர்களாகவும் பெரும்பான்மையாக வறுமைக்கோட்டுக்கு கீழேயும் இருக்கும் அம்மக்களுக்கு தனிமாவட்டமும் தனிக்கவனமும் மிகமிக அவசியம்.

பெரம்பலூர் உயர் சாதி ரெட்டியார் மக்களின் வலிமைக் கேந்திரமாக இருப்பதால், நலிந்த, தாழ்த்தப்பட்ட, பிற்படுத் தப்பட்ட மக்களை பெரம்பலூருக்கு நடக்க வைப்பது, மேல் சாதியினரின் பிடியில் தள்ளுவது தர்மம் அல்ல; நியாயம் அல்ல; பெரும் நம்பிக்கையுடன் தனது சிற்றடிகளை எடுத்து வைக்கும் அரியலூர் மாவட்டக் குழந்தைக்கனவுகளை நொறுக்குவது நியாயமற்றது.

1990 முதல் ஸ்டேட்பேங்கு உயர் அதிகாரிப் பணியை உதறி விட்டு மக்கள் பணியில் களத்தில் நிற்கும் எளிய தொண்டன் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். அரியலூர் மாவட்டம் தனித்து இயங்க அனுமதியுங்கள். மேலும் பிரச்சினை உள்ள மாநிலப் பகுதிகளை தனிமாவட்டங்களாக்கத் திட்டமிடுங்கள். அரசுத்துறைகளில் கோடிக்கணக்கில் பணம் சேமிக்க வாய்ப்பளித்தால் – நான் ஆய்வு செய்து, வழிமுறைகளைக் கண்டறிந்து அறிக்கை சமர்ப்பிக்கத் தயாராய் இருக்கிறேன்.

**சங்கமித்ரா**
(பா. இராமமூர்த்தி)
அமைப்பாளர், பெரியார் தமிழ்ப் பேரவை

## S. சுந்தரி அறிவது

எதைத்தான் நீ
அறுதியிட்டு விடப்போகிறாய்

புவனேஸ்வரி சுரேஷ் என்று
உன் விசாரணைப் பட்டியல்
நீட்சியடைவதாய்
அறிகிறேன்

தேநீரகங்களில்
நண்பர்களும் மாயமுகம்காட்டும்
பேருந்து நிலையங்களில்
என்னுடன் பேசிப்பிரியும்
நீ உள்ளிட்ட யாருக்கும் தெரிந்திருக்க
வாய்ப்பில்லை

வருடா வருடம் உள்மருவாய்
கோயில்விசேஷத்தின்
போது
சாமிகும்பிடாவிட்டாலும்
பம்பைக்காரன் நான்தான்

## வளர்ந்து பெரியவனாய்

மாதா பிதா குரு
தெய்வம்

என்ஜினுக்கு டீசல் வாங்குவதற்காய்
தந்த பணத்தில்
வாசனை சோப்பும் மதுக்குடமும்
வாங்கினால்
கெட்ட வார்த்தை சொல்லி
பட்டினிபோட்டு உறக்கமழித்தது
இவர்களில் யார்?

மாதா
பிதா
குரு
தெய்வம்

நால்வருக்கும் தெரியாததனால்

– ஊசேத் துளசி

www.padippakam.com

மதிப்புரை :

# சந்தி

— மா. நடராசன்




கல்கியின் வரவால் மேனாட்டுப் புதினம் என்ற அமைப்பு ஒரு கதை சொல்லலாகத் தமிழில் புரிந்து கொள்ளப்பட்டது.

ஜெயகாந்தன் அதை விஞ்ஞான ரீதியான வினா விசாரங்களின் அமைப்பில் சொல்லப்படும் கதையாடலாகத் தன் புதினப் படைப்பை மாற்றி வளர்த்தார். அவர் காரண காரிய தர்க்க சமாதானத்தில் புதினத்துக்குள் கதை நடத்தினார்.

ஆர். சண்முகசுந்தரம் பிரமிப்பும் திடீர்த் திருப்பங்களும் இல்லாமல் மொழி நடையிலேயே கிராம வாழ்க்கைமுறையைப் படமெடுத்துக் காட்டினார்.

கிராஜநாராயணன் மொழி நடையில், பாத்திர அமைப்பில் இயல்பு நெறிக்கு மாறான, ஆனால் அதுவே இயல்பான இயல்பு நெறியாகப் புதினங்களைப் படைத்துக்கொண்டிருக்கிறார்.

திலகவதி, பாமா, சிவகாமி போன்றவர்கள் இயல்பு நெறியில் தமக்குள் இருக்கும் ஒரு அலாதியான படைப்பாளியின் ஆன்மாவில் கனன்று கொண்டிருக்கும் நெருப்பைப் பூசிப் புதினத்தைப் இயக்குகிறார்கள்.

இவர்கள் தவிர பத்திரிகைகளில் எழுதும் புதினப் படைப்பாளர்கள் அந்தந்தப் பத்திரிகைகள் தமக்கு என வகுத்துவைத்துள்ள 'பத்திரிகை நெறி'க்குள் தம் கதையை அடைத்துவிடுகின்றனர்.

அவர்களைக் கல்கியின் மிகச்ச சொச்சங்கள் என்று சொல்லிவிடலாம். அவர்களில் சிலபேர் பத்திரிகை நெறிகளை மீறித் தங்களுடைய ஆத்மத் தேடலுக்காகச் சில புதினங்களைப் படைத்துக் கொடுப்பர். புதினம் என்று அவற்றைச் சொல்ல வேண்டும். அதற்கு மேலே சென்று 'பூரணமான புதினம்' - சமூகத்தைப் பதிவு செய்துள்ள சமூகப் புதினம் என்று சில புதினங்களை மட்டுமே அடையாளம் காட்ட முற்படும்போதும் ஸ்ரீதரகணேசனின் 'சந்தி' அந்த வரிசையில் தகர்க்க முடியாத இடத்தைப் பெறும் என்று சொல்லமுடியும்.

ஸ்ரீதரகணேசன் தூத்துக்குடிக்காரர். ஒரு தொழிலாளி. அவர் தானே அனுபவித்த, கண்ட, கேட்ட வாழ்க்கை நிகழ்ச்சிகளின் ஊடே தேடும் தேடல்தான் 'சந்தி' புதினம்.

தூத்துக்குடியின் மையப்பகுதியான மட்டக் கடையில் பிறந்த ஸ்ரீதரகணேசன் தன்னை இந்தப் புதினத்தில் முத்துசாமியாகப் படைத்துள்ளார்.

முத்துசாமியும், அவன் சந்தித்த மனிதர்களும் வரலாற்றுப் பதிவாகச் 'சந்தி'யில் உயிர்ப்போடு என்றும் இருப்பவர்கள்.

சந்தி இரண்டு பாகங்களைக்கொண்ட ஒரே புதினம். எதற்கோ, எதையோ. எப்படியோ எழுதியுள்ள சில புதினங்களைப் போலப் புரிந்து கொள்ளக் கூடாத வகையிலோ, புரிந்துகொள்ள முடியாத நிலையிலோ பாகம் பிரித்து அச்சிட்டுள்ளது போலச் சந்தி பாகம் பிரிக்கப்படவில்லை.

முதல் பாகம் 176 பக்கங்களைக் கொண்டது. இரண்டாம் பாகம் 124 பக்கங்களைக் கொண்டது.

முதல் பாகத்தில் கதையின் மையப்பாத்திரமாகிய முத்துசாமியின் குழந்தைப் பருவச் சீரழிவுகள் படைக்கப்படுள்ளன. அந்தச் சீரழிவுகள் திடீர்த் தாக்குதலாகவோ, தோற்றமாகவோ, அதிர்ச்சி தருவதாகவோ இடம் பெறவில்லை. மேலும் அவை மறைபொருளாகவோ (suspense) எதிர்பாராததாகவோ இயற்கை இகந்ததாகவோ இல்லை. இதுதான் இந்தப் புதினத்தின் வெற்றிக்கு ஆதாரம்.

வெற்றி ஆதாரத்தை அழுத்தமாகப் படைக்க ஸ்ரீதரகணேசன் தானே முத்துசாமியாக இருந்த 'தன்னியல்' வாழ்வை அப்படியே எந்தவித நகாசும், மறைப்பும், நோக்கச் சாயம் பூசலும் இல்லாமல் சொல்லவிரும்பிய சத்தியம்தான் சாத்தியம் ஆக்கியது.

இரண்டாம் பாகத்தில் முத்துசாமி ஆலை வேலைக்குச் செல்வதிலிருந்து அவன் இசைக்கருவி செய்வது, வாசிப்பது, இசையில் இறங்குவது, உள்ளிட்ட வளர்ச்சி நிலைகள் வரை ஒரு உளவியல் பூர்வமான வளர்ச்சிகாட்டப்படுகிறது. அம்மா தன் வேலையை விட்டு நின்று, மூத்தமகள் திருமணத்தை முன்னிட்ட குடும்பச் செயல்பாடுகள் மிக இயல்பான நிலையைப் புதினத்துக்கு ஏற்படுத்தியுள்ளன.

'சந்தி' புதினம் முத்துசாமி என்ற மையப் பாத்திரம் சொல்வதாகவோ, அம்மா சொல்வதாகவோ, படைப்பாளி கூற்றாகவோ படைக்கப் படவில்லை.

ஸ்ரீதரகணேசன் புதினத்தில் ஒருவருடைய ஆதிக்கத்தைப் படைக்கவிரும்பவில்லை எனச் சொல்லவேண்டும். உன்னுடையது என்னுடையது என்ற தனி உடைமை ஒரு வக்கிரமான உணர்வு, அந்த உடைமையைக் கடந்த பொதுநிலை, படைப்பு உணர்வில் இழையோடுகிறது என்பதன் அடையாளம் சந்தி புதினப்படைப்பில் காணப்படுகிறது.

முத்துசாமியின் உறவு நிலையில் பாத்திரங்களை நடமாட விடுகிறார் ஸ்ரீதரகணேசன். முத்துசாமிதான் 'சந்தி'யில் முதலிலிருந்து இறுதி


படிப்பகம்

www.padippakam.com

வரை வருகின்ற மனிதன். அவன்மட்டுமல்ல நிறையப் பேர் வருகிறார்கள். அத்தனை பேருடைய பெயரும் இந்தச்செயலுக்கு உரியவர், இந்த உறவுக்கு உரியவர் என்று நமக்குள் இருக்க வேண்டிய அவசியமில்லை. இருத்திவைக்கவும் முடியாது. ஆனால் அத்தனை பேரையும் அன்றாடம் இல்லாவிட்டாலும் அவ்வப் போது அங்கங்கு சந்திக்க முடியும். அடையாளம் கண்டுகொள்ளமுடியும் என்ற வகையில் புதினம் அழுத்தமாக வாசக மனதில் இடம்பிடித்து விடுகிறது.

புதின நடையும், மொழி அமைப்பும், சொற் பயன்பாடும் தூத்துக்குடி மண்ணனின் அசலாக அமைந்துள்ளது. பயன்படுத்தப்பட்டுள்ள சொற் களைப் படிக்கும்போது அச்சொற்களின் சாயல் நம்மண்ணில் எப்படி உள்ளது? எவ்வாறு திரிந் துள்ளது எனச் சிந்திக்கவைக்கிறது. அந்தச் சிந்தனை நம் தமிழின் மகத்துவத்தையும், பயன்படுத்தும் மக்களின் காரண காரியப் பகுத்தறிவையும் பிரமிப் போடு உய்த்துணர வைக்கிறது. உயிர்ப்போடும் உயிரோடும் தமிழ் மொழி எப்போதும் இருக்க முடியும் என்பற்கு இதைவிடச் சிறந்த சான்று வேண்டிய தில்லை.

தனிமனிதர்களாகிய ஆசிரியர்களால் சில இளைஞர்கள் பள்ளிக்கூடத்தையும், வகுப்பறை யையும், பாடம் படிப்பதையும் வெறுத்து மனம் குமைந்துபோய் விடுவதையும், அதனால் அவர்கள் சமூக விரோதச் செயலில் குடும்ப எதிர்வுச் செயலில் இறங்கி விடுவதையும் பார்க்கலாம். எல்லாக் குழந்தைகளுக்குள்ளும் சில நால சக்திகளும் நல்ல அம்சங்களும் படிந்து கிடக்கும் என்பதைப் புரிந்துகொண்டு, அவற்றை வெளிக்கொண்டு வர முயலாத சூழலில் அந்தக் குழந்தைகள் தாங்களே தங்கள் வாழ்க்கைப் போக்கை நிர்ணயித்துக் கொள்ளும் அவலம் ஏற்படும்.

சந்தியின் வரும் முத்துசாமியை அப்பா, அடிக் கிறார். பள்ளியில்ரஞ்சிதம் ஆசிரியை படிப்பு வரவில்லை என அடிக்கிறார். ஆனால் அதே ஆசிரியை நாட கத்தில் முத்துசாமியை நடிக்க வைத்தார். அதனால் அந்த ஆசிரியை மீது அவனுக்குப் பாசமும் மதிப்பும் கூடுகிறது.

ஒன்றாம் வகுப்பில்ரஞ்சிதம் ஆசிரியை அவனைத் தேறவிடவில்லை. கிறித்துவ மதத்தைச் சார்ந்த மதவெறி கொண்ட ஆசிரியைகள் முத்துசாமி பகுத்தறிவுடன் கூடிய கருத்தைச் சொன்னதால், அவனை நாக்கால் தரையில் சிலுவை போடச் சொல்லித் தண்டித்த நிகழ்ச்சி போன்ற சில நிகழ்ச்சிகள் முத்துசாமிக்கு அச்சத்தையும் வெறுப்பையும் தோற்றுவித்தன. ஊரிலேயே இருக்க முடியவில்லை,. பிடிக்கவில்லை.

தூத்துக்குடியை விட்டு இரவோடு இரவாகப் பாளையங்கோட்டைக்குச் செல்கிறான். செல்லும் வழியில் சிலர் ஒதுக்குவது, சிலர் ஆதரவளிப்பது போன்ற நிகழ்ச்சிகள் படைக்கப்பட்டுள்ளன. ஒரு கடைக்காரன் பழம், தேநீர் கொடுத்து அங்கே தன்னோடு அவனைத் தங்கிக்கொள்ளச் சொல் கிறான். அவன் ஓரினச்சேர்க்கைக்கு முத்துசாமியிடம் முயலும் நோக்கம் பின் இரவில்தான் தெரிகிறது. அதுமிக மிக நாகரிகமாகப் படைக்கப்பட்டுள்ளது.

முத்துசாமி மிகப்பெரிய நுண்ணறிவும் கலை நுட்ப உணர்வும் உள்ளவன். ஆனால் சாதரணமான ஆலைத்தொழிலாளியாகவும், ஒரு கட்டுக்குள் தம் வாழ்க்கையை அமைத்துக்கொள்ளும் ஒரு கட்டுப் பெட்டியான சுழற்சிக்கு உட்பட்டவனாகவும் தன் வாழ்க்கையை அமைத்துக் கொள்கிறான். இதைப் படைப்பாளியோ, பாத்திரமோ புதினத்தில் எங்கும் சொல்லிவிடவில்லை. ஆனால் இவ்வாறு நாம் புரிந்து கொள்ளக் கூடிய வகையில் சில செயல்பாடுகளைப் 'போகிற போக்கில்' முத்துசாமி செய்வதைப் படைத்துள்ளார் ஸ்ரீதரகணேசன்.

முத்துசாமியின் வாழ்க்கை அமைவுக்குக் காரணம் இந்தக் கொடூரமான சமூக இயக்கம் என்று இந்தப் புதினத்தின் மூலம் சொல்லமுடியாது. தூத்துக்குடிச் சமுதாயமும், மனிதர்களும் நிறைந்த அன்புடையவர்கள். நெறியான வாழ்க்கைப் போக்குடையவர்கள். எதிரீடான செயல்பாடுகளும் இல்லாமல் இல்லை. அதற்குத் தனிமனிதர்களின் 'வாழ்ந்தே ஆக வேண்டும்' என்ற இருப்புநிலைத் தவிப்புதான் காரணம் என்பதையும் ஆசிரியர் பதிவு செய்துள்ளார்.

கதை நிகழ்ச்சிகளோ, பாத்திரங்களின் நடமா ட்டமோ எங்கும் எந்தவகையிலும் தனியாகத் துருத்திக் கொண்டு தெரிவதில்லை. கதையின் உள்ளோடி, இயல்பாய்க் கதைப் பின்னலின் உள் அமைப்பில் கரைந்து விட்டவைகளாக இருப்பது புதினத்தின் தனித்தன்மைக்கு அடையாளமாக விளங்குகிறது.


முத்துசாமிக்கோ அவன் அம்மாவுக்கோ தொடர்பு இல்லாததும் கதைக்கருவுக்கு அது இல்லயெனில் ஒரு இழப்பும் ஏற்படாது என்ற அளவில் உள்ளதுமான நிகழ்ச்சிகளைப் பதிவு செய்துள்ள ஸ்ரீதரகணேசனுக்கு வேறு நோக்கம் இருக்க வேண்டும். தூத்துக்குடிச் சமூகத்தின் சாதித்துவேசம், குடும்ப அமைப்பு, வாழ்க்கை நிலை போன்றவற்றைப் பதிவு செய்வதில் அந்த நோக்கம் வெற்றி பெறுகிறது எனப் புரிந்துகொள்ளலாம்.

ஆகவே இந்தப் புதினம் 20ஆம் நூற்றாண்டின் தூத்துக்குடி மக்களின் புனைவில்லாத இயல்பான ஒருபதிவு. இந்தப் பதிவு மிக அவசியமான ஒன்று என்பதால் ஸ்ரீதரகணேசனின் தமிழ்ப்பங்களிப்பு பல நிலைகளில் பாதுகாக்கப்படவேண்டியது ஆகும். இப்புதினம் கிடைக்குமிடம்.

சந்தி
-ஸ்ரீதரகணேசன்,
விலை : ரூ. 70/-
பாலம், 3, திருவள்ளுவர் தெரு,
காமராஜர்புரம், சென்னை-70.

www.padippakam.com

# கொம்ப மாட சாமி கவிதைகள்



1 – மு(ரு)கம்

தீக்குளித்துப் பிழைத்த
சமுத்திரபாண்டியின் மகள்
முகத்தை மூடி
கருக்கலில் வெளிக்கிப் போவாள்
பிள்ளைகள் பயப்படாதிருக்க

அடிவயிற்றில் கல்வைக்கட்டி
உப்போடைக் கிணற்றில்
குதித்துச் செத்த சுப்பக்காளின்
மீன் தின்ற முகத்தை
ஓடைக்கரை இருட்டில்
பொசுக்கிப் போட்டார்கள்
யாரும் பார்க்கவிடாதபடிக்கு

மாடுமிதித்து
மூக்கும் வாயும் சிதைந்துபோன
வேதக்காரி அன்னபாக்கியம்
பொழுதடைய
ஆள்பார்த்து
நல்ல தண்ணீர் எடுப்பாள்

எல்லாம் பார்த்துக்கேட்பதாய்
மண்தூற்றிச் சாபமிடும் பெண்கள் சொல்லும்
கிழக்கிருந்து மேற்கே போகும்
மயிரப் புடுங்கிச் சூரியன்
இருட்டை கொல்வான்
அவர்களை விடாது



– 2 –

திருநெல்வேலிப் பேருந்து
அம்பாசமுத்திரத்தைத் தாண்டும்பொழுதுதான்
அருணாசலம்
முன்னால் இருந்ததைப் பார்த்தேன்
செவிட்டு மிஷின் வாத்தியாரிடம்
அடியே வாங்காத அவன்
பப்பாளிப்பழம் மாதிரி இருப்பான்
வகுப்பில் முதன் முதலாகக்
கடல் பார்த்திருந்த அவன்
இரும்புக்குப் பேய் பயப்படுமென்று
இடுப்புக்கயிற்றில்
ஊக்கு போட்டிருப்பான்
ஒன்றுக்கு விடும் இடைவேளையில்
அவன் வீட்டில் தான்
நல்ல தண்ணீர் குடிப்பேன்
அவன் அம்மா தரும் கூட்டாஞ்சோறு
அப்படி நன்றாயிருக்கும்
எட்டாம் கிளாஸ்வரை
ஒன்றாய்ப்படித்த அவன்
வீடு மாற்றிப்போனபோது
கெஞ்சம் அழுகை வந்தது
இப்பொழுது மீசையும் மனைவியுமாய்
அவனைப் பார்க்கையில் சந்தோஷமாயிருந்தது.
கல்லிடைக்குறிச்சி ஆற்றுப்பாலத்தைக்
கடக்கையில் நெருங்கிச் சென்று
'நீ அருணாசலந்தானடே' என்று
ஆசையோடு கேட்டபோது
'உம்' கொட்டி சன்னல் பார்த்தான்
நானும் சங்கடத்துடன்
கீழே பார்த்தேன்
தாமிரபரணி வறண்டு கிடந்தது.


படிப்பகம்

www.padippakam.com

1

முதுமை பல்லக்கில் பயணித்த
சின்ன அத்தைக்கு பிடிக்குமென
பார்க்க வந்தவர்,
கொண்டுவந்தார் ஆரஞ்சுக்கனிகள்

சின்ன அத்தைக்கு என்னைத்தானதிகம்
பிடிக்கும்.
உச்சிக் கிளையேறி அமர்ந்தாடிய
வேம்பின் கீழ்
தள்ளாடி, தடுமாட்டமாய் வந்ததட்டி
எனையிறக்கி
சுளைகள் பிரித்து
திணித்துவிடும் அப்பொழுதுகளில்
வழியும் கனிச்சாற்றை புறங்கையால்
துடைத்தபடி

அன்று
மனம் வரைந்து கொண்ட படிமம்
இவ்வுலகம் கனித்தோட்டங்களால் ஆனது.

2

விரக்திவலை விசாரித்தறிந்து
பதுங்கு குழியில் எனை வீழ்த்த
வலையறுத்து தூக்கிச் சுமந்தார்.

வானம் நோக்கிய பயணத்தில்
வழிக்களைப்பு நீங்க
அப்பா சொன்ன கதைகளைப் பெற்றேன்.
சிறகுகளாக.

தனயனின் தரிசனத்திற்கென்றே
அப்போதே சூரியனைக் குடித்து
புன்னகை வழிய
நின்றன சில சிகரங்கள்

3


பசியும் ருசியும் மறந்து
பிணியின் கட்டிலில் பிணைந்து
கிழிந்த தேதிகளெத்தனை?

தெரியவில்லை.

களைத்த தேகம்
உயிரின் ஒற்றை யாவேச இழைபிடித்து
மேலேறத்துடிக்க
அம்மா பிசைந்து ஊட்டிய

சோற்றுக் கவளத்தினடியில் ஒளிந்திருந்த
ரேகைகளினூடே தெரியும்

உலகமெங்கும்
வயல்கள், வயல்கள்



4

இச்சை வரப்பில் இம்சை அரும்பல்
அழைக்கும் நேர்த்தி

அங்கீகரிப்பில், தெறித்த விழிகளில்
சிமிட்டிய தோழியர்
உரசிச் சென்றன தாவணிக் கொடிகள்.

பற்றித் தொடர்கையில்
சொல்லாமல் தொலைந்த தோழியர்

பெயர்கள் செதுக்கிய தருக்கள்
இன்று
மறிக்கும் வழிகளில்
நிற்கிறது கானகமாய்
பொழிகிறது
ஞாபக மழைகள்.

5

ஒளிரும் நெற்றி மறையாது
கூப்பிய கரங்களின் பின்னே
சிரித்த முகம்
மொழியின் ஞாயிறு
சுடர்கள் சுமந்து
எங்கனும் நதியெனும் செல்லும்

கரைகளுடைந்து பிரவகித்த
கண்ணீரில் மூழ்குகையில்
தெரியும்

அன்பெனும் ஆழியில் மிதக்கும் பூமி.

**– வே. எழிலரசு**


படிப்பகம்

www.padippakam.com



# பார் அதிரப் பாடியவன்



— *விளாடிமிர்*

மதங்களுக்கும் மனித நேயத்திற்கும் இடையிலான அகலத்தை பல்வேறு அறிஞர் பெருமக்கள் தெளிவுபடுத்தி வந்துள்ளனர். இருந்த போதிலும் ஆட்சியிலிருப்போர் மத வேற்றுமைகளைத் தூண்டி, மக்களை ஏமாளிகளாக்கி தொடர்ந்து ஆட்சிக் கதிரைகளில் அமர்ந்து ஆளுமை புரிய, அம்மத உணர்வுகளை கருவியாக்கிக் கொள்வதே வழமையாகிவிட்டது. இவற்றைக் கண்டித்து மக்களை எச்சரித்துப் பாடிய பாவலர்களை வரலாறு நெடுகிலும் காண்கின்றோம்.

தமிழ்ச் சூழலில் முகாமையானவராக புரட்சிப் பாவலரை வரலாறு அடையாளங் காட்டுகின்றது. குடிமக்களை வாட்டும் வறுமையை ஒழிக்காத அரசுகள் மதவழிப்பாட்டிடங்களை அமைத்து அவர்களின் அறிவை நஞ்சாக்குவதில் முனைப்பு காட்டுவதில் சளைப்பதில்லை. இத்தகு செயல்களைக் கண்டு கொதித்தார் சுப்புரத்தினப் பாவலர்.

ஆலயம் சாமி அமைத்தவர்
யாரடி? தோழி

மக்கள் அறிவை இருட்டாக்கி ஆள நினைப்பவர் தோழா என்று அறிவுறுத்தியவர், உடலை வருத்தி உழைக்காமல், மதத்தின் பேரில் உட்கார்ந்து உடலைவளர்க்கும் கூட்டத்தினரையும் விட்டு விடாமல்; தொட்டிடும் வேலை தொடங்கலுமின்றியே தொந்தி சுமக்கும் புரோகிதர் என்று அடையாளம் காட்டினார். அத்துடன் அமைந்து விடாது மதத்தலைவர்கள் வாழும் சொகுசு வாழ்க்கையையும் தோலுரிக்கின்றார்.

**மக்கள் பசிக்க மடத்**
**தலைவர்க் கெனில்**

**வாழையிலை முற்றும்**
**நறு நெய்யாம் என்றவர்**

மேலும் தொடருகின்றார்

கோயிலிலே பொருள் கூட்டும்
குடக்களும்

கோதையர் தோளினிற்
சாய்கின்றார்

மதங்களைச் சொல்லியும் கடவுளின் பேராலும் பணம் பறிப்பவர் பேசினாலே இரு காதுகளையும் மூடச் சொன்ன பாவலர் கோயிலென்றாலே தூரத்தே ஓடச் சொல்வார்.

மலாயா ஆங்கிலேயர்க்கு அடிமைப்பட்டுக்கிடந்த காலம். மேற்குலகின் சந்தைகளுக்கு வேண்டிய மூலப் பொருட்களை உற்பத்திச் செய்ய, உடலுழைப்பாளர்கள் மிகுதியாய் தேவைப்பட்ட காலகட்டம். தென் ஆசியாவின் தென்கோடியிலிருந்து 'சஞ்சிக் கூலிகள்" என்ற பெயரில் தொழிலாளர்கள் பாரிய எண்ணிக்கையில் மலையகம் கொண்டுவரப்பட்டனர். அவ்வாறு வந்தவர்கள் சொல்லொணாத் துயர்களுக்கு ஆளாகி ஆங்கிலேய முதலீட்டாளர்களைப் பெருஞ் செல்வந்தர்களாக்கினர்.

இங்ஙனம், காடுகளைத் திருத்தி, தொடர்வண்டிப் பாதை அமைத்துத் தொழிலாளர்கள். தங்களது குடியிருப்புகளுக்கு அருகிலேயே தத்தமது நம்பிக்கைக் கேற்றபடி கல்நட்டு, கோயில் என்ற பெயரில் குடிசைகள் கட்டி அத்தெய்வங்கள் வெயிலிலும் மழையிலும் பாதிக்கப்படாதவாறு காத்தனர்.

தோட்டப்புறங்களில் தெய்வங்களுக்கு சொகுசு மாளிகைகள் கட்டப்பட்டன. எண்ணிக்கையில் கூடுதலாக இருந்ததாலும், தங்களை எதிர்த்து கலகம் செய்யாததோடு, விசுவாசமிக்க கூலிகளாய் மாற்றியமைப்பதற்கும் இது பயன்படும் என்ற நீண்டகாலத் திட்டத்தில், இவற்றை நல்வாய்ப்பாகக் கருதி தோட்ட நிர்வாகங்களே கற்காரை கோயில்கள் எழுப்பித் தந்தனர் (பார்ப்பானிடம்பெற்ற ஆலோசனையோ என்னவோ) இன்று வரை தமிழரினம் சாதிப் பிளவுகளால் பாதிக்கப்படுவதற்கு இதுவெல்லாம், தொடக்கால காரணி என்பதனை ஆய்வுகள் புலப்படுத்துகின்றன.

மாபெரும் அக்தோபர் சோசலிசப் புரட்சி ஏற்படுத்திய தலைகீழ் மாற்றங்களால் ஆங்கிலேய அரசாட்சி விடைபெற்றதும், பெரும்பாலான தோட்டங்கள் செட்டியார்களின் வசமாகின. பின்னர் ஏற்பட்ட உள்நாட்டு அரசியல் தளம்பல்களைக் கண்டு அரண்டு தாங்கள் போற்றும் முருகனுக்குக் கூட தனித்த அடையாளங்களை கற்பித்த நாட்டுக்கோட்டைகள் அந்நிலங்களையும் அங்கே வாழ்ந்த பெருங்குடிமக்களையும் சீனர்களிடம் விற்றுவிட்டுக் கப்பலேறினர்.

இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் தோட்டங்கள் துண்டாடப்பட்டதாலும், நல் வாய்ப்பு தேடியும் இந்தியர் எனப்படும் உழைக்கும் மக்கள் நகர்ப்புறம் நோக்கி படையெடுத்தனர். அது நாள் வரை தங்களைக் காப்பதாக நம்பிய மக்களால் பாதுகாக்கப்பட்டு வந்த கடவுளர்கள் அநாதைகளாகினர். இவ்வாறு ஆதரவற்ற நிலையில் பல்வேறு கோயில்கள் உள்ளதை வடக்கிலிருந்து தெற்குக்குச் செல்லும் தொடர் வண்டிச் செலவில் நன்கறியலாம். கைவிடப்பட்ட தெய்வங்களையும் கோயில்களையும் அரசும் கைப்பற்றி, அந்நிலங்களை மேம்பாட்டுத் திட்டங்களுக்குப் பயன்படுத்திவிடுகின்றது.

மக்கள் வாழாத தோட்டப்புறங்களிலும் இன்ன பிற பகுதிகளிலும் எஞ்சியுள்ள கோயில்களில் 'திருவிழா' என்ற பெயரில் பக்தர்கள் சிலர் பெரும் பணம் திரட்டி குறிப்பிட்ட தொகையைச் செலவிட்டு மிஞ்சும் பெருந்தொகைகளை ஏப்பம் விடுவது பரவலாக அரங்கேறிவருகின்றது. இவ்வாறானவர்களை வஞ்சகர்கள் என்கிறார் நம்பாவலர்.

கோயில் திருப்பணி, மதவிழா என்று பொருள் தண்ட வருபவரை மனிதர் என்று எண்ணாதே! அவர்கள் வஞ்சகர்கள் என்று சொன்னவர் உழைத்துழைத்து ஓடாகி உண்பதற்கே வழியற்ற ஏழைகளுக்கு.... நாம் ஆற்ற வேண்டியவற்றை விவரிக்கும் பாங்கே தனி.

**வாயைத் திறக்கவும் சக்தி -**
**இன்றி**
**வயிற்றைப் பிசைந்திடும்**
**ஏழைகட்கே நீ**
**தாயென்ற பாவனையோடும் -**
**உன்**
**சதையையும் ஈந்திட ஒப்புதல்**
**வேண்டும்**

மனிதர்க்குமுதன்மையானதும் மிகவேண்டியதும் தன்னம்பிக்



படிப்பகம்

www.padippakam.com

கையே 'என்னே வாழ்க்கை' என்று புலம்பும் மனிதரோடு பொழுதுகளை செலவிட்டால்புரியும், மனித வெற்றியில் தன்நம்பிக்கையின் பங்கு தெரியும். இவற்றை நன்குணர்ந்த ஏட்டுப் படிப்பாளிகள் 'தன் முனைப்பு' என்பதின் பெயரில் கூட்டம் கூட்டி பொருள் குவிக்க தொடங்கி விட்டார்கள்.

"ஆய்ந்துப்பார்' என்ற தலைப்பில் மனித உயர்வுக்கு அடிப்படையாம் தன் நம்பிக்கை பற்றி,

மானுறும்தன்னம்பிக்கை
வளர்ப்பது நலமா?

வயப்படும் பக்தியினால்
பயப்படல் நலமா?

என்று தன்னம்பிக்கையின் தேவையையும், பக்தியினால் ஏற்படும் கேட்டையும் விளக்குவார்.

மக்களை நேர்வழிப்படுத்த மதத்தால் மட்டுமே இயலும் என்ற பல்லவி நாம் அறிந்த ஒன்று. சமயங்கள் மனிதனை நேர்வழியில் இட்டுச் செல்வதற்காகப் படைக்கப்பட்டன. ஒவ்வொரு சமயமும் மனித நலனைப் பலப்பல கோணங்களில் இருந்து காண்கிறது. வெளிப்பார்வையில் சமயங்கள் வெவ்வேறாகத் தோன்றினும், ஆழ்ந்து நோக்குமிடத்து அடிப்படையில் சமயங்களின் இணைவை மறுக்க முடியாது.

தற்போது நிலைத்திருக்கும் ஹிந்துமதத்தில் இருந்து சமீப காலத்து இசுலாம் வரையில் அனைத்துச் சமயங்களும் மனிதனின் நல்வழிக்கோட்பாடுகள் ஆகும் என்று அரைபக்க அளவில் அண்மைக்கால அகராதி ஒன்றில் திருமறையுரை அருளப்பட்டுள்ளது.

அவ்வாறெனில் குற்றச் செயல்களில் ஈடுபட்டு சிறைகளில் வாடும் பாதிக்கும்மேற்பட்டோர் கடவுளை நம்பாத நாத்திகர்களா? என்ற வாதத்தையும் அறிந்தவர்கள்தாம் நாம். சைனாடவுனிலிருந்து ஆர்ச்சட் சாலைவரை (China town till Orchand Road) நாணய மாற்று வணிகத்தில் ஈடுபட்டுள்ள நன்கு அறிமுகமானவர்களிடத்தில் கண்டறிந்த ஒரு சம்பவம்.

அமெரிக்க தாலர் ஒன்றுக்கு தரப்படும் உள்ளூர் தொகைக்கு ஒவ்வொருவரும் வெவ்வேறு கணக்குகளைச் சொன்னார்கள். வேற்று நாட்டு பணம் எனும்போது அதன் நிர்ணயம் ஒன்றுப்போல் தானே அமையவேண்டும். அதாவது பங்குச் சந்தையின் நிலவரப்படி பார்த்தால் அனைவரிடமும் பணத்தின் மதிப்பு ஒன்றுப்போல்தானே இருக்கவேண்டும். மிகுந்த வேறுபாட்டிற்கு என்ன காரணம் என்றறிய வினா தொடுத்தபோது வாக்குவாதத்தில் முடிந்தது.

மேற்சொன்னவர்களில் பெரும்பாலோர் தொழுகையைத் தவிர்க்காதவர்கள் என்பது அவர்களுடனான நெருக்கத்தினால் அறியப்பட்ட ஒன்று மாபெரும் இறுதி நாளுக்கு முன்னர் புனிதப் பயணம் மேற்கொண்டால் அவற்றிற்குக் கழுவாய் தேடி விடலாம் என்ற நம்பிக்கையும் அவர்களுள் ஆழ வேரூன்றியிருப்பதை அறிந்து கொள்ளவும் இயன்றது.

இவற்றையெல்லாம் நன்கு கண்டறிந்ததால் தான் போலும் கடவுளையும் மதங்களையும் எதிர்த்துப்போர் முரசறைந்தார். மூட நம்பிக்கையைப் பெருக்கி மாந்தரை அறிவிலிகளாக்குவது மதங்களின் தன்மை, மதங்கள் உருவாக்கப்பட்டதும் அந்தக் காரணத்திற்காகவே. அறிவு எனும் கதிரொலி முன் மதத்தால் ஏற்பட்ட நம்பிக்கை சருகுகளாய் எரிந்து போகும். அத்தகு நிலைக்கு சிந்தனையாற்றலைப் பயன்படுத்திடவேண்டும்.

நாணுறு மூடவழக்கம் நாடுதல்
பெரிதா?

நல்லறிவென்னும் வழிச்
செல்லுதல் பெரிதா?

என்று வினா தொடுத்து தேர்ந்தெடுக்க வேண்டியவற்றைத் தெளிவுப்படுத்தினார். இப்படி மூடநம்பிக்கைகள் ஊற்றெடுக்கும் வேத ஆகமம், புராண இதிகாசம் என்ற கற்பனைக் கடவுள் கதைகளாலும் வஞ்சகங்களால் உருவாக்கப்பட்ட வழிபாடுகளாலும் சீரழிந்த நிலையினை விளக்கி நிலவும் அமைப்பை, நொறுக்கி, புதியதோர் உலகஞ் செய்ய அழைப்பு விடுத்தார்.

சாதி மத பேதங்கள் மூடவழக்கங்கள்

தாங்கிநடை பெற்றுவரும்
சண்டையுலகிதனை
ஊதையினில் துரும்புபோல்

அலைக்கழிப்போம்;

ஒழித்திடுவோம்

பின்னர் புதியதோர் உலகம்
செய்வோம்.

மாந்தக் குல ஆற்றலின் விளைவே இன்றைய அறிவியல் வளர்ச்சி. இவற்றுள் நன்மைதிமை இரண்டும் அடங்கும். இத்தகைய மானிட ஆற்றலுக்கு இணையான வேறு ஒன்று உண்டா?

மானிடன் வாழ்ந்த வரைக்கும் -
இந்த

வையத்திலே அவன் செய்த
வரைக்கும்

மானிடத் தன்மைக்கு வேறாய் -
ஒரு

வல்லகம் கேட்டிருந்தால்
அதைக் கூறாய்

என்று அறை கூவியவர்
புரட்சிப்பாவலர்

அறிவை விரிவுசெய்;
அகண்டமாக்கு!
விசாலப் பார்வையால் விழுங்கு
மக்களை!

அணைந்து கொள்! உன்னைச்
சங்கமமாக்கு

மானிட சமுத்திரம் நானென்று
கூவு

என்று மனித ஆற்றலையும்; இவ்வுலகு இன்றைய நிலமையைப் பெற்று மிளிரத் தங்களது ஆற்றலை செலவிட்டு இன்னும் ஏழ்மையிலேயே வாழும் விளைப்பாற்றல் மிகக் கொண்ட உழைக்கும் மக்களின் வாழ்க்கை நிலையினை உயர்த்தவும், எல்லோருக்கும் எல்லாம் என்ற நிலை ஏற்பட்டு, ஏற்றத் தாழ்வு சுரண்டலற்ற வாழ்க்கை முறைக்கான வழிகளை எல்லா மனிதர்க்கும் கற்பிக்கவும்.

வானைப்போல் மக்களைத்
தாவும்
வெள்ளை அன்பால்
இதனைக்குள்ள
மனிதர்க்கும் கூறடா தோழனே
என்று முழங்கினாய்
மாந்த நேயம் போற்றி
மானுடம் முழங்கி
மாந்த சமத்துவம் விழைந்து
'பார்' அதிரப்பாடிய அப்பொதுமை தாசனின் ஆக்கங்களை உழைக்கும் மக்களிடத்தே கொண்டு சேர்ப்பதினால் வரும் விளைவு தழைப்பதன்றோ -


படிப்பகம்

www.padippakam.com

# கவிதாசரண்

**இதழாய் ஓர் எழுத்தியக்கம்**

## ஒரு விண்ணப்பம்

அன்பு வாசக நண்பர்களுக்கு, வணக்கம், இந்த இதழைப் பத்து ஆண்டுகள் நடத்தி வந்திருக் கிறோம். இருக்கும் காலம் வரை நடத்தியே தீர்வது எங்கள் முடிவு. எண்ணம்தான் மானுட வாழ்வின் சாரம் அல்லது சாரமின்மை.

இதழ்தான் இப்போது எங்களது வாழ்வு. இலக் கியம்சார் இயல்களை மட்டுமே பேசும் சிற்றிதழ்மரபை உடைத்து, சமூகம்சார் அம்சங்களையும் அர்த்தப்பரி மாணங்களாக்கும் மாற்றுச்சிந்தனையை முன்னெடுக் கும் அரிய சில இதழ்களில் தீர்க்கமும் மூர்க்கமும் காக்கும் இதழ் எம்முடையது.

எந்தச் சுகத்துக்கும் சொரிதலுக்கும் எம் சுதந்திரத்தை விற்றுக்கொண்டதில்லை. எந்தக் குழுவின் நிழலிலும் ஒதுங்கவோ, எந்த உடுக்கடி மடத்திலும் ஒட்டிக்கொள்ளவோ முயன்றதில்லை.

தின்னும் சோற்றுக்கும் தேடி வருவோரைச் சீராட்டுவதற்கும் எந்தப் பற்றாக்குறையும் எங்களுக்கு வந்ததில்லை.

மனித நேசிப்புக்கும் கருத்து மோதலுக்கும் எப்போதும் நாங்கள் பின்வாங்கியதில்லை. சொல் வதை நேர்மையாகவும், சிந்திப்பதை கூர்மையாகவும் வெளியிடத்தவறியதில்லை.

இவையாவுக்கும் இதழே மொழியாகிறது.

இதழுக்கென்று அச்சகம் உண்டு. எழுத்தோடு அச்சுப்பணியும் எங்களுக்கு.

சந்தா கேட்டு இதுவரை யாருக்கும் கடிதம் எழுதியதே இல்லை; நேரமிருந்ததில்லை. ஆயினும். எங்கள் மொழியை நேசித்தோரின் தன்னெழுச்சியான ஆதரவு எங்களை எப்போதும் தாங்கத் தவறிய தில்லை.

இதழுக்குத் தேவையான தாளும், மையும், தைப்புமுள்ளும், சிறிது பசையும் இருந்தால் போதும், எங்கள் உணர்வூட்டம் பொங்கும் உழைப்பின் உயிர்க்கொப்பளிப்பாய் இதழ் வெளிவந்திட. இதுவரைக்கும் இதழுக்குப் பணத்தேவை ஒரு பிரச்சினையே இல்லை.

இனி, அதுமட்டுமே பிரச்சினை என்பதனா லேயே இந்த விண்ணப்பம். அச்சுப்பணியை நாங்கள் தொடர்வதோ ஆள் வைத்து வேலை வாங்கிக் கொள்வதோ சாத்தியப்படவில்லை.

கூடிய மெய்வருத்தம் எழுத்தையும் இதழையும் தாமதப்படுத்துகிறது எழுதித் தீர்ப்பதென்னும் முடிவு இயலாமையில் கரைய எங்களுக்குச் சம்மதமில்லை. எனவே, அச்சுப்பணியை வெளியில் செய்து பெற முடிவெடுத்துள்ளோம். கடைசிப் பைசா வரை இனி கைப்பணமே செலவிடப்பட வேண்டும்.

மேலும், எழுத்தொன்றே பணியாவதால் இதழைஇன்னும் விரிந்த அளவில் கொண்டு சேர்க்கவும். திசைதோறும் இருள் தீற்றும் ஈனஞானங்களைக் கேள்விக்குள்ளாக்கவும் ஊமை மாந்தரின் வெடித்தெழும் குரலாய் அறைகூவல் விடுக்கவும் ஆசை.

இதற்கு எங்களுக்குப் பணம் வேண்டும், ஆயிரக்கணக்கில், பல்லாயிரக்கணக்கில். சந்தா வழங்குங்கள், இதழ் கவலையற்றுத் தொடர்ந்து வர கொடையாய் வழங்குங்கள். நீடுழிப் பணியாற்ற நிறைய வழங்குங்கள்.

சிந்தனையூற்றம் அதன் போக்கில் செயல் பட நட்பாய்த் துணையிருங்கள்.

எங்களின் மொழிக்கும் சுதந்திரத்திற்கும் அரணாயிருந்துதவுங்கள்.

| | | |
|---|---|---|
| 12 | இதழ்களுக்கான நன்கொடை | ரூ. 200/– |
| 30 | இதழ்களுக்கான நன்கொடை | ரூ. 500/– |
| 60 | இதழ்களுக்கான நன்கொடை | ரூ. 1000/– |

*அன்புடன்,*

***திருமதி & திரு. கவிதாசரண்***

# 'கை'

கார்காலத்தின்
மேகம் கவிந்ததொரு மாலை
இடக்கை உபயோகமற்றதானது
தற்காலிகமாய்

'வண்டியிலிருந்து
காலைத்தான் ஊன்றுவார்கள்
நீங்கள் எப்படி கையை...'

அபாரமான நகைச்சுவை உணர்வு
மஞ்சுளா டீச்சருக்கு

'கையொடிஞ்சமாதிரி ஆகிடுமே'
ஆறுதலளித்தார் இந்திரன்

அவிழ்ப்பது, கட்டுவது, கழுவுவது-என
உபயோகப்படுத்திக்கொள்வது வலிதான்

நெகிழும் மனம் உணர்கிறது.
சக இழப்புகளை

வியாதியில், விபத்தில்
ஆக்ரோஷ சண்டையில், போரில்
ஒரு கிளை ஒடிவதுபோல் எத்தனை கைகள்

தற்கொலைக்கு மின்கம்பியை நாடிய
உள்ளூர்க்காரன் தங்கமணி
மனைவியின் இருண்ட நிழலாகிவிட்டான்
இருகைகளையும் இழந்து

எதிர்த்து உயர்ந்த சேகுவேராவின்
கைகள் வெட்டப்பட்டிருக்கிறது
ஆனால்
வரலாற்றின் வீரம் செறிந்த நெடும்பாதையில்
துளிர்விட்டுக்கொண்டேயிருக்கின்றன
இத்தகு கரங்கள்

தயை செய்து கையுள்ள யாரும்
அனுதாபமெனும் செல்லாக்காசுகளை
கையற்றவர்மீது எறிந்து விடாதீர்கள்

'கொடுத்துச் சிவந்தது'
'தொட்டது துலங்கும்'
புனைவுகளை அழித்துவிட்டு யோசித்தால்

லஞ்சம் வாங்க
கடன் வாங்க
பிச்சை எடுக்க
கால்பிடிக்க
மனைவியை அடிக்க
விருப்பமற்றவளின் ரவிக்கையை அவிழ்க்க
சுரணையற்ற திசைகளில்
நீண்டிருக்கின்றன நம்கைகள்

முதுகுக்குப் பின்னாலிருக்கும் கத்திகள்
கோழைகளின் நடுங்கும் கரங்களுதவியுடன்
ஒளிந்திருப்பவைதான்

பொங்கும் அன்பால் தழுவிக்கொள்ளவும்
நட்புடன் கைகுலுக்கிக் கொள்ளவும் முடியாமல்
விழிகளிலிருந்து நீளும் அன்புக்கரங்களை
ஸ்பரிசித்து தனிமையில்
நீங்கள் அழ நேர்ந்திருந்தால்

கவலைப்படாதீர்கள்

கிளைகள் விழுவதால்
சிறகுகள் உதிர்வதால்
மரமோ பறவையோ ஊனமாவதில்லை

கையின்றி
ஓவியங்கள், சிற்பங்கள், கவிதைகள்
நம்பிக்கையாலேயே உயிர்த்திருக்கின்றன

ஆம், கரங்களற்றவர்கள்
தங்களின் விளக்குகளை
விழிகளாலே ஏற்றும்
வல்லமை படைத்தவர்கள்

(கையொடிந்த போது கைகொடுத்த அசோக், பாலு, பிரகாஷ் நட்பிற்கு)

**- கரிகாலன்**